

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஏப்ரல் 02, 2009 புரட்சி 8 முழக்கம் 12 விலை : ரூ.2.50

## ஈழத் தமிழர்கள் – இனப்படுகொலைக்கு துணை போகும்

# காங்கிரஸ் – தி.மு.க. கூட்டணியை தோற்கடிப்பீர்!



*காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியை எதிர்த்து வாக்களிக்க சேலத்தில் கூடிய பெரியார் திராவிடர் கழக செயற்குழு முடிவு செய்துள்ளது. ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு துணை போகும் காங்கிரசையும், அதை நியாயப்படுத்தும் தி.மு.க.வையும், தமிழர்கள் தோற் கடிக்கவேண்டும் என்று வேண்டுகோள்விடுத்துள்ளது.*

பெரியார் திராவிடர் கழகத்தின் மாநில செயற்குழு 29.3.2009 ஞாயிறு பகல் 11 மணியளவில் சேலம் நேஷனல் ஓட்டல் அரங்கில் கழகப் பொதுச் செய லாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் கூடியது. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களி லிருந்தும் செயற்குழு உறுப்பினர்கள், தோழர்கள் 150 பேர் திரண்டு வந்திருந்தனர். சேலம் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டைகர் பாலன் வரவேற்புரை யாற்றியதைத் தொடர்ந்து, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வரவிருக்கும் நாடாளு மன்றத் தேர்தலில் பெரியார் திராவிடர் கழகம் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளை விளக்கி, அது தொடர்பாக கழகத் தோழர்கள் கருத்துகளை முன் வைக்குமாறு கேட்டுக் கொண்டார். கழக செயற்குழு உறுப்பினர்கள் திண்டுக்கல் தாமரைக் கண்ணன், லோகு. அய்யப்பன் (புதுவை), சாமிநாதன் (நாமக்கல்), நடராஜன் (விழுப்புரம்), அழகிரி (வடலூர்), அம்புரோஸ் (தூத்துக்குடி), செ.த.இரா சேந்திரன் (திருச்சி), இலட்சுமணன் (பெரம்பலூர்), சிற்பி ராசன் (தஞ்சை), சோலை மாரியப்பன் (தஞ்சை), ஆறுச்சாமி (கோவை மாநகர்), மனோகரன் (கோவை தெற்கு), டேவிட் (சேலம்), டைகர் பாலன் (சேலம்), முகில்ராசு (திருப்பூர்), இராம. இளங்கோவன் (ஈரோடு), இளையராஜா (நாகை), துரை சம்பத் (திண்டுக்கல்), திலீபன் (வேலூர்), தமிழ்பித்தன் (மதுரை), தனபால் (கரூர்), உமாபதி (சென்னை), அன்பு. தனசேகர் (சென்னை), வழக்கறிஞர் குமார தேவன், வழக்கறிஞர் இளங்கோவன், வழக்கறிஞர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். பொதுச் செய லாளர் கு.இராமகிருட்டிணன் நிறைவுரையாற்றினார். சேலம் பாலு நன்றி கூறினார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

- மிசா, தடா, பொடா போன்ற ஆள் தூக்கி சட்டங் களை கடந்த காலங்களில் எதிர்த்து வந்த தி.மு.க. தற்போது, காங்கிரசை மகிழ்விக்கவும், காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தை முடக்கவும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் மீது தேசியப் பாதுகாப்பு சட்டத்தை ஏவியுள்ளது. தேசிய பாதுகாப்புச் சட்டத்தை கூட்டணி பாதுகாப்புக்காக முறைகேடாகப் பயன்படுத்தும் தி.மு.க. அரசை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.
- ஈழத் தமிழர்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கியே தீரவேண்டும் என்ற உறுதியோடு தொடர்ந்து இலங்கை அரசுக்கு ஆயுதம், நிதி, போர்ப் பயிற்சிகளை அளித்து வரும் காங்கிரஸ் ஆட்சி - ஈழத்தில் ஒவ்வொரு நாளும் இன அழிப்புகள் நடந்து கொண்டிருக்கும் சூழலில் - தமிழ்நாட்டில் தேர்தல் களத்தை சந்திக்க வருகிறது. 'ஈழத்தில் தமிழர் இன ஒழிப்பு' - வேகம் வேகமாக நடைபெறும் நிலையில் - ஈழத் தமிழின பாதுகாப்பு என்பதற்கு - முழுமையான முன்னுரிமை தந்து பெரியார் திராவிடர் கழகம், இத் தேர்தலை அணுகுகிறது. இந்த நிலையில் - ஈழத் தமிழர் 'இன-ஒழிப்பு'க்குழு துணைபோகும் - காங்கிரஸ் மற்றும் அந்த துரோகத்துக்கு துணைப் போகும் தி.மு.க. கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் என்று இச்செயற்குழு ஒருமித்து முடிவு செய்கிறது. இந்தக் கூட்டணி வேட்பாளர்களை தோற்கடிக்கக்கூடிய வலிமை யான கூட்டணி வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக் கொள்கின்றது.

### சோனியாவுக்கு கருப்புக் கொடி

- ஈழத் தமிழர் இனப்படுகொலையைக் கண்டித்து இதுவரை எந்த ஒரு கண்டனத்தையும் தெரிவிக்காமல், தமிழின அழிப்புக்கு இந்திய அரசின் படை, ஆயுத உதவிகள் கிடைத்திட உதவி வரும் - காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா - தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரத்துக்கு வருகிற இடத்தில் எல்லாம் கருப்பு கொடி காட்டி, தமிழர்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த இந்த செயற்குழு முடிவு செய்கிறது.
- தமிழ்நாட்டில் கிராமப் பொருளாதாரத்துக்கு புத்துயிர் ஊட்டவும் நலிந்து போன கள் இறக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் வாழ்க்கைக்கு வளம் சேர்க்கவும், தமிழ்நாட்டில் மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டும் என்று இச்செயற்குழு வலியுறுத்துவதோடு, அந்த உரிமை கோரி போராடும் தொழிலாளர் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை இந்த செயற்குழு முடிவு செய்கிறது. ●

### காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளில் ~ எதிர்த்து களப்பணியாற்ற முடிவு

**காங்கிரஸ் கட்சி போட்டியிடும் தொகுதிகளில் மட்டும் எதிர்ப்புப் பிரச்சாரக் குழுக்களை உருவாக்கி தீவிரமாக தேர்தல் பணிகளில் இறங்கிடவும் - மாணவர்கள், இளைஞர்களை பெருமளவில் இந்த பிரச்சாரத்தில் பங்கேற்கச் செய்வது எனவும் செயற்குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. ஏனைய தொகுதிகளில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக வாக்களிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.**

### கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் கடிதம்

*தேர்தல் நிலைப்பாடு குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறையிலிருந்து கடிதம் எழுதயிருந்தார். விரிவான அந்த கடிதத்தை செயற்குழுவில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் படித்தார்.*

**செயற்குழு முடிவுகள் குறித்து பொதுச்செயலாளர்கள் பேட்டி உள்ளே**

### ஏப்.11 – ஈரோட்டில் தமிழின வாக்காளர் மாநாடு

*ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு உதவிடும் காங்கிரஸ் – அதற்கு துணை போகும் தி.மு.க.வின் துரோகங்களை அம்பலப்படுத்தி –*

*அந்த அணியை தோற்கடிக்க அறைகூவல் விடுக்கும் மாநாடு.*

*பெரியார் திராவிடர் கழகத்தின் – சேலம் செயற்குழு தீர்மானங்களுக்கு செயல் வடிவம் தரப்போகும் மாநாடு –*

*கழகத் தோழர்களே, ஈரோடு நோக்கித் திரள, தயாராவீர்!*

**– பெரியார் திராவிடர் கழகம்**

# கழகப் பொதுச்செயலாளர்கள் பேட்டி

# தீயை அணைப்பதுவே முதன்மை பணி

கழக செயற்குழு முடிவுகள் குறித்து செய்தியாளர்களுக்கு கழகப் பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சேலத்தில் பேட்டி அளித்தனர். அப்போது கூறியதாவது:

ஈழத்தில் தமிழர்கள் ஒவ்வொருநாளும் இன அழிப்புக்குள்ளாகி வரும் நிலையில், அந்த இன அழிப்புக்கு சோனியாவின் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி, அனைத்து உதவிகளையும் இலங்கை அரசுக்கு வழங்கி வருகிறது. இந்த நிலையில் காங்கிரசுக்கும், காங்கிரசுக்கு துணை போகும் தி.மு.க.வுக்கும் தமிழர்கள் பாடம் புகட்ட வேண்டும். காங்கிரஸ் ஆட்சி அகற்றப்படுவதன் மூலமே ஈழத்தில் இனப் படுகொலைகளை நிறுத்த முடியும் என்று கருதுகிறோம். ஒரு இனம் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதுதான் இந்தத் தேர்தலில் முதன்மையானப் பார்வையாக இருக்க வேண்டும் என்பதே கழகத்தின் நிலை. இப்போது ஈழத்தில் இந்திய அரசின் முழு ஒத்துழைப்போடு இனப் படுகொலைகள் நடப்பதை, உறுதியாகத் தட்டிக் கேட்காமல் தி.மு.க. மீண்டும் காங்கிரசுடன் கைகோர்த்துக் கொண்டு காங்கிரசின் துரோகங்களுக்கு நியாயம் கற்பித்து வருகிறது. எனவே, காங்கிரஸ் - தி.மு.க. வேட்பாளர்களைத் தோற்கடிப்பதே இத் தேர்தலில் தமிழர் கடமையாக இருக்க முடியும் என்று கருதுகிறோம். அப்படி தோற்கடிக்கப் பட வேண்டுமானால், களத்தில் - சம போட்டியில் நிற்கக்கூடிய வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதன் மூலமே இவர்களைத் தோற்கடிக்க முடியும். எனவே எதிர்த்து நிற்கும் வலிமையான கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று நாங்கள் தமிழர்களுக்கு வேண்டுகோள் வைத்துள்ளோம். நிச்சயமாக அந்த வலிமையான கூட்டணி அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி தான்.

அ.தி.மு.க. ஈழத் தமிழர் பிரச்சினையில் கடந்த காலங்களில் துரோகமான நிலைப்பாடுகளையே மேற்கொண்டு வந்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இப்போது மக்களிடையே உருவாகியுள்ள எழுச்சியின் காரணமாக, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பதோடு, தமிழர்களுக்கு எதிரான போரை, இந்திய அரசே நடத்துகிறது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெயலலிதா கூறுகிறார். தி.மு.க. தனது ஆதரவை இந்திய அரசுக்கு தராமல் விலக்கிக் கொண்டிருக்கவேண்டும். அப்போது மத்தியில் ஆட்சி கவிழ்ந்து, இனப்படு கொலை நிறுத்தப்பட்டிருக்கும் என்று ஜெயலலிதா கூறுகிறார். ஜெயலலிதாவின் இந்த கருத்துகள் சந்தர்ப்பவாதத் தோடு முன் வைக்கப் பட்டிருந்தாலும் தமிழர்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்கிறது.

அதே நேரத்தில் தி.மு.க. இனப்படுகொலைகளுக்கு துணைப்போகும் மத்திய காங்கிரஸ் ஆட்சியைக் கண்டிக்க முன் வராமல், மற்றொரு நாட்டின் இறையாண்மையில் இந்தியா ஒரு அளவுக்கு மேல் தலையிட முடியாது என்று இந்திய அரசுக்கு நியாயம் கற்பிக்கும் சந்தர்ப்பவாத அணுகுமுறையை மேற்கொண்டுள்ளது. தி.மு.க.வின் இந்த சந்தர்ப்பவாதம் - தமிழர்கள் உணர்வுக்கு எதிராக உள்ளது. எனவே ஜெயலலிதாவின் சந்தர்ப்பவாதம் தமிழர்கள் உணர்வுகளுக்கு ஆதரவாகவும், கலைஞர் கருணாநிதியின் சந்தர்ப்பவாதம் தமிழர் உணர்வுகளுக்கு எதிரானதாகவும் இருப்பதால் ஜெயலலிதாவின் சந்தர்ப்பவாதத்தை ஆதரிப்பதே இச்சூழலில் சரியான முடிவாக இருக்கும் என்று கருதுகிறோம்.

வீடு தீப்பற்றி எரியும் போது அணைக்க - அருகே உள்ளவர்கள் தண்ணீர் கொண்டு வரும் போது தண்ணீர் கொண்டு வருவோர், துரோகிகளா நண்பர்களா என்று பார்க்க முடியாது. எனவே, ஈழத்தில் தமிழினம் பூண்டோடு ஒழிக்கப்படாமல் இருக்க, காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற நிலையில், அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிப்பதன் மூலமே அது சாத்தியமாகும் என்று பெரியார் திராவிடர் கழகம் கருதுகிறது. தேர்தல் முடிவுக்குப் பிறகு இப்போதைய கூட்டணியில் இருப்பவர்கள் அப்படியே நீடிப்பார்களா என்பது சந்தேகம் தான் என்றாலும், இன்றைய சூழ்நிலையை கருத்தில் கொண்டே, இந்த முடிவுகளை எடுத்துள்ளோம் என்று கூறினர்.

---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சே சொன்னாரல்லவா, பாதுகாப்பு பகுதி அங்கே அய்.நா. மன்றத்தின் உணவுத் திட்டம் அதன் மூலம் அய்.நா. அதிகாரிகள் வந்து உணவு பொட்டலம் வழங்குகிறார்கள்? எப்படி அந்த பாதுகாக்கப்பட்ட பகுதி இராணுவம் தாக்காத பகுதி, அந்த இடத்தில் இராணுவம் தவறுதலாக தாக்கி விடுமோ என்று கருதி, அய்.நா. மன்றத்தின் கொடியை ஏற்றி வைத்துக் கொண்டு வெள்ளைக் கொடியை வீசிக் கொண்டு உணவுப் பொட்டலம் வழங்குகிறார்கள். வானத்திலிருந்து குண்டு மழை பொழிகிறது. அய்.நா. மன்ற அதிகாரிகள் பக்கத்திலே பள்ளம் படுகுழிகளில் போய் ஒளிந்து கொள்கிறார்கள். 57 அப்பாவி தமிழர்கள் அங்கேயே சுருண்டு மடிகிறார்கள். இதை இந்த உலக உணவு திட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். என்ன நியாயம்? கேட்க நாதியில்லையா? மருத்துவமனையிலே கொல்கிறார்கள்; மட்டகளப்பு பகுதியிலே களுவாஞ்சி குடியிப்பு என்ற கிராமத்திலே இராணுவத்தினர் போய் ஆண்கள் எல்லாம் அங்கே கோயிலிலே கூடுங்கள் என்று சொல்கிறார்கள். எல்லா ஆண்களும் போகிறார்கள். சுற்றி வளைத்து இராணுவம் இருக்கிறது. பெண்கள் எல்லாம் வீட்டிலேயே இருங்கள் என்கிறார்கள். கொஞ்சம் நேரம் கழித்து ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பெண்கள் கதறுகிற சத்தம் கேட்கிறது. அந்தப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்கிறது. சிங்கள இராணுவம், காதிலே கேட்டும் எதுவும் செய்ய முடியாமல் தடுக்க முடியாமல் தவிக்கிறார்கள் ஆண்கள். புனிதவதி என்ற 14 வயது சிறுமியும் தாயும் இருக்கிறார்கள். தாயை கட்டி வைத்து விட்டு அவள் கண் முன்னாலேயே அந்தசிறுமியை அதுவும் பூப்படைந்து 25 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன. அந்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தார்கள். 5 இராணுவத்தினர் உடம்பெல்லாம் காயம். அந்த தாயை பிறகு சுட்டுக் கொல்கிறார்கள். அந்த சிறுமி களுவாஞ்சிகுடி மருத்துவமனையிலே 17வது வார்டிலே சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருக்கிறாள். முகவரிஉட்பட கொடுத்திருக்கின்றார்கள்.

கோத்தபய ராசபக்சே சொல்லுகிறார். சிப்பாய்களே ஆண்கள் கிடைத்தால் கடலுக்கு, பெண்கள் கிடைத்தால் உங்களுக்கு என அவன் அனுமதி கொடுக்கிறான். இதற்கெல்லாம் காரணம் இந்திய அரசு. இந்திய அரசு கொடுக்கும் ஆயுதம், கொடுக்கும் அரசியல் உதவி, இந்திய அரசின் பின்னணி. இந்த இந்திய அரசை நாங்கள் நேசிக்க வேண்டுமா? இந்திய அரசு தமிழர்களை பகைவர்களாக கருதுகிறது. இந்தியாவிலே இருந்தாலும் தமிழன் பகைவன் தான். ஈழத்திலே இருந்தாலும் தமிழன் பகைவன்தான். காவேரி சிக்கலில் உச்சநீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றி தந்தார்களா. குடிநீருக்காக முதல்வர் கலைஞர் ஒக்கேனக்கல்லுக்குப் போய் அடிக்கல் நாட்டுகிறார். தடுத்துவிட்டார்கள் அதை. நம்முடைய எல்லையிலே ஓடுகிற காவேரியில் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு குடிநீருக்கு எடுக்க முடியவில்லை. இதற்கெல்லாம் சட்டத்திலே இடமில்லையா? உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. முல்லை பெரியாறு 142 அடி தண்ணீர் தேக்கலாம் என்று நிறைவேற்றவில்லை. காங்கிரசு முதலமைச்சராக இருந்தாலும், கம்யூனிஸ்ட் முதலமைச்சராக இருந்தாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மலையாள இனவெறியோடு நடந்து கொள்கிறது. இதையெல்லாம் தட்டிக் கேட்க இறையாண்மை இல்லையா? அரசியல் சட்டத்திலே இடமில்லையா? பாதிக்கப்படுபவன் தமிழன் என்றால் பாதிப்பை உண்டாக்குபவன் பக்கம் இந்திய அரசு இருக்கிறது.

## கலைஞர் அன்றும் – இன்றும்!

**அன்று**

“இன்றைக்கு இலங்கைத் தமிழன் பாதிக்கப்படுகிறான். தமிழ்நாட்டிலே ஓர் அரசும் இல்லை. ஆகவே படை அனுப்பப்படவில்லை. எனவே அந்த அரசு இல்லையே என்கின்ற என்னுடைய ஏக்கத்தை வெளியிடுகிறேனேயல்லாமல் வேறல்ல.

அப்படி ஓர் அரசை உருவாக்க வேண்டும். இந்தியாவிலே நாங்கள் 1962 இல் கைவிட்டு விட்ட பிரிவினை வாதத்தை இனி எடுத்து வைத்து அதற்கு ஆதாரம் தேடுகிறேன் என்று யாராவது அவசர அரசியல்வாதிகள் பேச முன் வருவார்களேயானால் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம், துன்பத்தால் துயரத்தால் மகனை பறி கொடுத்துவிட்ட பரிதாபத்தால் அழுது கொண்டிருக்கின்ற ஒரு தாய் கண்ணீரும் கம்பலையுமாக ஐயோ பாவி போய்விட்டானே என்று சொன்னால், பாவி என்று சொன்னதற்கு அந்த நேரத்திலே அவனை திட்டுகின்ற பொருளல்ல.

அன்பு, பாசம், பற்று இவைகளால் தான், “ஐயோ! பாவி போய்விட்டாயே” என்று இறந்த மகனைப் பற்றிக்கூட சொல்லுவார்கள்.

அதைப்போலத்தான் நான். ஆதங்கப்படுகிறேன், ஏக்கமடைகிறேன், வருத்தப்படுகிறேன், வேதனைப்படுகிறேன் என்றால் ராஜராஜசோழன் இருந்தான்; ராஜேந்திரச் சோழன் இருந்தான். அவர்களுக்குக் கீழே தமிழகத்தில் ஒரு அரசு இருந்தது.

இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்பட்டால் உடனே படை சென்றது.

இலங்கைத் தமிழன் காப்பாற்றப்பட்டான். இன்றைக்கு அங்கே அரசில்லை. ஆனால் ‘டெசோ’ இயக்கமென்ற முரசு இருக்கிறது.....

நாம் வடநாட்டை எட்டிப் பார்த்து, வடநாட்டிற்கு நடந்து நடந்து பார்த்து, முறையீடுகளை கொண்டுப்போய்க் கொடுத்து கொடுத்துப் பார்த்து, கிளர்ச்சிகளை நடத்தி நடத்திப் பார்த்து, சிறைச்சாலைகளை நிரப்பி நிரப்பிப் பார்த்து, இங்கே இருக்கின்ற திராவிடர் கழக வீரமணி தலைமையிலே ஆகஸ்டு தினத்தை துக்க தினம் என்றெல்லாம் அறிவித்துப் பார்த்து, மாவீரன் நெடுமாறன் அவர்கள் தியாகப் பயணத்தை நடத்திப் பார்த்து, தி.மு.க.வினர் இரண்டு மூன்று முறை சிறைச்சாலைகளை நிரப்பி, 30,000; 40,000 பேர் சிறைச்சாலைகளிலே அடைக்கப்பட்டு, 20க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்களுடைய தேக்குமர தேகங்களுக்குத் தீயிட்டுக் கொண்டு முடிந்த எல்லாவற்றிற்கும் பிறகு, வடக்கே இருக்கிற டெல்லிப் பட்டணம் – அங்கே அமர்ந்திருக்கின்ற மத்திய அரசு – ராஜீவ் காந்தியினுடைய அரசு; இன்னமும் பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தை என்று காலம் தாழ்த்திக் கொண்டிருக்குமேயானால், வேறு வழி என்ன?”

(கலைஞர் ‘டெசோ’ கூட்டங்களில் 1985 இல் பேசியது. தி.மு.க. வெளியீடான ‘தமிழனுக்கு ஒரு நாடு – தமிழ் ஈழ நாடு’ நூல்.)

**இன்று....**

“இந்தியா இறையாண்மை மிக்க நாடு. அதைப் போலவே இலங்கையும் இறையாண்மை மிக்க நாடுதான். ஒரு இறையாண்மை மிக்க நாடு மற்றொரு இறையாண்மை மிக்க நாட்டிற்கு எந்த வகையான வேண்டுகோளை விடுக்கலாம். அந்த நாட்டின் மீது எத்தகைய அழுத்தத்தைக் கொடுக்கலாம்; அரசியல் சட்ட ரீதியாக இருந்துவரும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் மக்கள் அறிவார்கள்”

**– டெக்கான் கிரானிக்கல் ஏட்டுக்கு கலைஞர் பேட்டி.**
**‘முரசொலி’ (23.3.2009)**

*அடுத்த இதழ்...*

***காங்கிரஸ் எதிர்ப்பு சிறப்பிதழாக வெளி வருகிறது.***

## த.தே.பொ.க. பொதுச்செயலாளர் மணியரசன் எழுச்சி உரை

# சோனியாவைகண்டிக்கவே கூடாதா?

*தமிழர் ஒருங்கிணைப்பு சார்பில் 9.3.2009அன்று தியாகராயர் நகரில் நடந்த கூட்டத்தில் த.தே.பொ.க. பொதுச்செயலாளர் பெ.மணியரசன் ஆற்றிய உரை:*



கொளத்தூர் மணி, சீமானை கைது செய்ய வேண்டும் என்று காங்கிரசுகாரர்கள் சொல்லும்போது இந்தியாவின் இறையாண்மை கெட்டுவிட்டது என்று சொல்வதில்லை. நீங்கள் பத்திரிகையில் அப்படி படித்திருக்க முடியாது. வழக்கு போடுகிற காவல்துறையும், தமிழக அரசும் அப்படி இணைத்துப் போடுகிறதே தவிர காங்கிரசுகாரர்கள் சொல்லும்போது அன்னை சோனியா காந்தியை இழிவுப் படுத்திவிட்டார்கள். ராஜீவ் காந்தி மரணத்தை கொச்சைப் படுத்தி விட்டார்கள் என்று தான் சொல்லுகிறார்கள். சட்டத்திலே சோனியா காந்தியை இழிவுபடுத்தியதாலே ஒரு தேசிய பாதுகாப்போ, பிரிவினை தடை சட்டப்படியோ வழக்குப் போட முடியாது. அதுபோலத்தான் ராஜீவ் காந்தி மரணம் பற்றி விமர்சித்ததற்காக வழக்குப் போட முடியாது. காங்கிரசுகாரர்களை திருப்திப்படுத்துவதற்காக சிந்தித்து தமிழக அரசும், காவல்துறையும் வழக்கு நிற்க வேண்டும் என்பதற்காக இறையாண்மைக்கு ஆபத்து என்ற ஒரு சரக்கை சேர்த்துக் கொள்கிறார்கள். காங்கிரசுக்காரர்களுக்கே இறையாண்மை என்றால் என்ன என்று தெரியாது. காங்கிரசுகாரர்களுக்கு மேல் இடத்தில் கோள் சொல்லி நன்மை பெறுவதைவிட வேறு ஒன்றும் தெரியாது.

காங்கிரசு பண்பாடு என்பது தன்னுடைய தலைவியிடம், தலைவனிடம் சக காங்கிரசு கோஷ்டியைப் பற்றி கோள் சொல்லி தான் ஒரு காங்கிரசுகாரனாக தமிழ்நாட்டில் துடிப்போடு இருப்பதாக காட்டி சீட் பெறுவதும் தான் அவர்களுடைய தொழில். கோள் சொல்வது அவனுடைய பழக்கம். தங்கள் கோஷ்டிகளுக்கிடையே கோள் சொல்லிக் கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் இப்பொழுது தமிழினத்திற்கு எதிராக கோள் சொல்லுகிறார்கள். அது அவனுடைய பழக்கம். சோனியா காந்தியை விமர்சிக்கிறோம். அந்த அம்மையார் ஈழத்தில் நம் இனத்தை படுகொலை செய்வதற்கான போரை இயக்கிக் கொண்டிருக்கிறார். அந்த அம்மையாரை கண்டனம் செய்கிறோம். இதில் என்ன அந்த அம்மையாரை இழிவுப்படுத்தி விட்டோம். பார்த்தால் பசு போன்ற தோற்றம். உள்ளத்திலே ஓநாய் உணர்ச்சி. அந்த வடிவம்தான் சோனியாகாந்தி (கைதட்டல்). இதில் என்ன இழிவுப்படுத்திவிட்டோம். இது என்ன குற்றம்.

இந்த சனவரி 1 ஆம் தேதி பிறந்ததிலிருந்து பிப்ரவரி வரை 2200 ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சோனியா காந்தி கொடுத்த ஆயுதத்தை பயன்படுத்தி, சோனியா காந்தி கணவர் ஊழல் செய்த போபர்சு பீரங்கிகளை கொடுத்து, 2200 தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்கை இலங்கை நாடாளுமன்றத்தில் செயல்பட்டு கொண்டிருக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த 20 உறுப்பினர்கள் சொல்லி கையெழுத்துப் போட்டு அய்.நா. மன்றத்திற்கும், சர்வதேசத்திற்கும் அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் துடிக்க மாட்டோமா, சோனியா காந்திக்கு துடிப்பு வராது. எங்காவது இத்தாலிக்காரனை சுட்டுக் கொன்றால் அந்த நாட்டுக்கு ஆயுதம் தருவாரா, எங்காவது பஞ்சாபிகளை சுட்டுக் கொன்றால் மன்மோகன்சிங் அந்த நாட்டுக்கு இராணுவ உதவி செய்வாரா? எங்காவது மலையாளிகளை சுட்டுக் கொன்றால் அந்த நாட்டுக்கு இராணுவ உதவி செய்வாரா ஏ.கே. அந்தோணி? வங்காளிகளை சுட்டுக் கொன்றால் போர் நிறுத்தம் கோர மாட்டேன் என்று பிரணாப் முகர்ஜி சொல்லுவாரா? பாழ்பட்ட தமிழினம் கேட்க அரசியல் நாதியற்ற தமிழினம் உலக அரங்கத்தில் குரல் எழுப்ப வாய்ப்பே இல்லாத தமிழினம் கொல்லப்படுகிறது.

சிங்களவனுடைய மக்கள் தொகை ஒன்றரை கோடி பேர். தமிழர்களுடைய மக்கள் தொகை என்ன? உலகத்தில் சிங்களவர்கள் வாழக்கூடிய ஒரே ஒரு நாடு இலங்கை தான். அவர்கள் அகதிகளாக 100 பேர் கூட எங்கும் வாழவில்லை. மிகச் சிறிய சின்ன இனம். ஆனால் ஒன்றரை கோடி மக்கள் தொகை கொண்ட சிங்கள நாட்டை சீனா அங்கீகரிக்கிறது, ஆயுதம் தருகிறது. தமிழர்களை கொல்ல பாகிஸ்தான் அங்கீகரித்து ஆயுதம் தருகிறது. தமிழர்களை கொல்ல அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு போன்ற நாடுகள் நிதியுதவி செய்கின்றன. ஏன்? சிங்களவருக்கு ஒரு நாடு இருக்கிறது. 10 கோடி தமிழர்கள் உலகத்தில் இருக்கின்றோம். நமக்கு ஒரு நாடு இல்லை. இது தானே அடிப்படை பிரச்சினை?

பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் படையெடுத்தது. சனவரி மாதம் நான், கொளத்தூர் மணி, சீமான் ஆகிய மூன்று பேரும் கோவை சிறையில் இருந்தோம். பத்திரிகையில் படித்தோம். மனம் பதைபதைத்தது. அவர்களும் நம்மை போல் பாதிக்கப்பட்டவர்கள். யாசர் அராபத் போன்ற உயர்ந்த தலைவர்கள் தலைமை தாங்கிய அமைப்பு அது. விமானத்தில் இருந்து ‘கிளஸ்டர் பாம்’ என்று சொல்லக் கூடிய கொத்து வெடிகுண்டுகளை போட்டு கொல்லுகிறார்கள். போர் நிறுத்தம் வேண்டும் என்று பல நாடுகள் அங்கு கோரின. அய்.நா. மன்றத்திலே அந்த தீர்மானம் வந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்த தீர்மானத்தை எதிர்த்தது. ஆனாலும் 142 நாடுகள் ஆதரித்து போர் நிறுத்தத் தீர்மானம் நிறைவேறியது. 19வது நாள் போர் நிறுத்தம் நடைபெற்றது. 20வது நாள் டேங்குகளை இழுத்துக் கொண்டு இஸ்ரேலுக்குள் போனது யூத அரசு. எப்படி நிகழ்ந்தது 19 நாட்களுக்குள். ஒன்றரை வருடங்களாக போர் நடக்கிறது. மிகத் தீவிரமாக செப்டம்பர், அக்டோபரிலிருந்து நடக்கிறது.

அக்டோபர் 2-ம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியால் எல்லோரும் சேர்ந்து போர் நிறுத்தம் கேட்கத் தொடங்கியதிலிருந்து தொடர்ந்து போராட்டம் நடந்து கொண்டே இருக்கின்றது. ஆறு மாதம் ஆகப் போகிறது. நம்மால் ஏன் போர் நிறுத்தம் கொண்டுவர முடியவில்லை. பாலஸ்தீனர்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் ஒரு நாடு அல்ல பல நாடுகள் அந்த இனத்திற்காக இருக்கிறது. அவர்கள் அரபு இனத்தை சேர்ந்தவர்கள். முஸ்லீம் இனத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுக்கு பல நாடுகள் உண்டு. பல சனாதிபதிகள் உண்டு. ஆனால் 10 கோடி தமிழர்களுக்கு ஒரு நாடும் கிடையாது. ஒரு ஜனாதிபதியும் கிடையாது. அந்த அரபு நாடுகள் எண்ணெய் வியாபாரம் செய்கிறார்கள். பல வர்த்தகம் செய்கிறார்கள். அப்படி வர்த்தகம் செய்யக் கூடிய நாடுகள் அந்த அரபு நாடுகளின் கோரிக்கைக்கு செவி சாய்க் கின்றன. போர் நிறுத்தம் கோரிய 142 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

நமது குரல் அய்.நா. மன்றத்திலே கேட்பதற்கு யார்? என்ன வாய்ப்பு? நமக்கு ஒரு நாடில்லை. இன்னேரம் தமிழ்நாடு மட்டும் தனி நாடாக இருந்திருந்தால் ஈழத்திலே நமது தமிழ் மக்களை பாதுகாத்து இருக்க முடியும். (கைதட்டல்) தமிழ்நாட்டிற்கு ஒரு குடியரசு தலைவர், ஒரு பிரதமர் அவர்களுக்கு ஒரு பிரதிநிதி, அய்.நா. மன்றத்திலே இருந்தால் இந்த துயரத்தை பேசியிருக்க மாட்டார்களா? ஒன்றரை கோடி சிங்களவனுக்கு செவி சாய்க்கக்கூடிய அய்.நா. மன்றம் ஆறரை கோடி தமிழ் மக்களுக்கு செவி சாய்த்திருக்காதா இந்த எண்ணம் என்ன குற்றமானதா? நயவஞ்சகமானதா? இந்தியா தமிழ் மக்களை கைவிட்ட பிறகு, வஞ்சகமாக கொலை செய்த பிறகு “பாலை பார்க்காவிட்டாலும் பால் பண்ணையையாவது பார்” என்ற பழமொழி இருக்கிறதே. நீ ஈழத் தமிழனைப் பார்க்கா விட்டாலும் இந்தியாவிற்குள் சிக்கிக் கிடக்கும் ஆறரை கோடி தமிழனை நீ பார்க்கவில்லை. அதன் பிறகு எங்களுக்கு என்ன தான் வழி. ஒட்டு மொத்தமாக அழிந்து போவதா? எனவேதான் ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுங்கூட இங்கே நமக்கு ஓர் அரசு வேண்டும். நமக்கும் இறையாண்மை வேண்டும். (கைதட்டல்)

ஆயுதத்தை கீழே போடுங்கள் என்று சொல்லுகிறார்களே, விடுதலைப்புலிகள் ஆயுதத்தைக் கீழே போட்டப் பிறகுதான் போர் நிறுத்தம். பிரதிபாபட்டீல் இந்தியாவின் ஜனாதிபதி நாடாளுமன்ற உரையிலே சொல்லி விட்டராம். கலைஞர்கருணாநிதி மயிர்க்காம்பெல்லாம் சிலிர்த்துப் போய் பூரித்து எழுதுகிறார். இதோ என் கோரிக்கை நிறைவேற்றி விட்டார்கள். அக்டோபர் 14 ஆம் தேதி கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா, ஏன் இந்த மாய்மாலம்? விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட அவர்களிடம் என்ன ஏ.கே. 47 ரக துப்பாக்கி மட்டும்தான் இருக்கிறதா? விமானங்கள் இருக்கின்றன. அதை எங்கே போடுவது? கப்பல் படை இருக்கிறது. அதை எங்கே போடுவது? (கைதட்டல்)

விடுதலைப் புலிகள் என்பவர்கள் ஒரு தேச அரசை நடத்திக் கொண்டிருப் பவர்கள். (கைதட்டல்) துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு மறைந்து மறைந்து சுடடுக் கொண்டிருக்கும் கொரிலாக்கள் மட்டுமா? விமானப் படை இருக்கிறது; விமான ஓடுபாதை எல்லாம் பிடித்தீர்கள்; விமானங்கள் இல்லை; விமானங்களை பிரபாகரன் கையிலே வைத்திருக்கிறார்.

டெல்லி எப்படி நம்முடைய முதலமைச்சரை வளைத்து விட்டதோ அப்படி பி.எல்.ஓ. ஆளை வளைத்து விட்டது. இன்றைக்கு களத்திலே நிற்பவர்கள் அமாஸ் போராளிகள் தான். எனவே மதவாதமோ, தீவிரவாதமோ என்னவோ நாங்கள் அமாசைதான் ஆதரிக்கிறோம். பாலஸ்தீன விடுதலையை கோருகிறோம். இந்திய அரசு பாலஸ்தீனத்தின் காஜா மீது இஸ்ரேல் போர் தொடுக்கக் கூடாது. போர் நிறுத்த வேண்டுமென்று இங்கேயும் அறிக்கை வெளியிட்டது. அய்.நா.விலும் ஓட்டு போட்டது. எப்போதாவது அமாஸ் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என்று கேட்டதுண்டா? கேட்கவில்லை. ஆக அமாசுக்கு ஒரு நீதி, விடுதலைப் புலிகளுக்கு ஒரு நீதி என்றால் என்ன நியாயம்? ஆயுதங்களை கீழே போடாமல் பாலஸ் தீனத்திலே போர் நிறுத்தம் வரவேண்டும். ஈழத்திலே மட்டும் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டால்தான் போர் நிறுத்தம் வரும் என்றால் இது பாரபட்சம் இல்லையா? நயவஞ்சகம் இல்லையா? சிங்களவனுக்காக நீங்கள் பேசுகின்ற யுக்தி இல்லையா இது? இதையெல்லாம் கேட்டால் ஆபத்து என்றால் யாருக்கு ஆபத்து? நயவஞ்சகர்களுடைய வேடத்துக்கு ஆபத்து. இதைத் தானே நீங்கள் செய்கிறீர்கள்?

அங்கே என்ன கொடுமை நடக்கிறது. இணைய தளங்களிலே செய்திகள் வருகின்றன. தோழர்களே இரண்டு மாதங்களாக உணவில்லை. அரிசி இல்லை. நான் எண்ணிப் பார்க்கிறேன். நம்முடைய உழவர்கள் உழைத்த உழைப்பினால் விளைந்த அரிசியை கிலோ 1 ரூபாய்க்கு ஓட்டுக்காக தமிழகத்தில் விற்கின்றீர்கள். அதையும் நம் மக்கள் வாங்காமல் அது கேரளாவுக்கு, ஆந்திராவுக்கு, கர்நாடகத்திற்கு கடத்தப்படுகிறது. 16 கிலோ மீட்டர் தொலைவிலே நம் இனத்தை சேர்ந்த தமிழர்கள் ஒரு கமளம் சோறு இல்லாமல் பட்டினியால் சாகின்றார்கள். ஏன் கொடுக்கக் கூடாது அரிசியை அங்கே? நம்முடைய தமிழ் நாட்டிலே தமிழ் இனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட இந்த அரிசியை அங்கே ஒரு இனம் அழிகிறதே? சோமாலியாவிலே பட்டினியாலே அழிவார்கள் என்று படத்தினிலே பார்ப்போமே; பட்டினிச் சாவு உள் நாட்டு கலகத்தின் மூலம் எலும்பும் தோலுமாய் காட்சி அளிக்கிறார்களே; சோமாலியக் குழந்தைகள் அதைப் பார்க்கும்போது நமது நெஞ்சு பதைக்கிறது. யாராய் இருந்தால் என்ன? மனித நேயம் அடிப்படை தேவை. எங்கோ சோமாலியாவில் நடப்பதல்ல இதோ 16 கிலோ மீட்டர் தொலைவிலே நம்முடைய குழந்தைகள் அங்கே கஞ்சி இல்லாமல் சாகிறார்கள். பெரியவர்கள் சோறு இல்லாமல் சாகிறார்கள். காட்டு இலை தழைகளை பிடுங்கி அவித்துச் சாப்பிட்டு வயிற்று பேதி ஏற்பட்டு அதனாலே சாகிறார்கள். 21 ஆம் நூற்றாண்டிலும் இந்த இனத்துக்கு இந்த கதி ஏற்பட வேண்டுமா? இதையெல்லாம் பார்த்து சகித்துக் கொள்ளக்கூடிய ரசித்துக் கொள்ளக்கூடிய மனப்பாங்கு சோனியா காந்திக்கும், கலைஞர் கருணாநிதிக்கும் இருக்கலாம். சாமான்ய தமிழனுக்கு அந்த எண்ணம் இல்லை. எங்களால் அப்படி இருக்க முடியாது.

(2 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கொளத்தூர் மணி கைது சட்ட விரோதம்: உயர்நீதிமன்றத்தில் வழக்கு



கழகத் தலைவர் கொளத்தூர் மணியை தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தது சட்ட விரோதமான செயல். தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. கொளத்தூர் மணி சகோதரர் டி.எஸ்.பழனிச்சாமி பெயரில் வழக்கறிஞர் துரைசாமி, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

எந்த ஆவணமும், சான்றாதாரமும் இல்லாமல் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் சட்ட விரோதமாக தேசிய பாதுகாப்பு சட்டத்தை பயன்படுத்தியுள்ளார். நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் எதிராக கொளத்தூர்மணி செயல்பட்டதாகவும், தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக ஆதரித்துப் பேசியதாகவும் 10.3.2009 அன்று அவர் பிறப்பித்த தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யும் ஆணை கூறுகிறது. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் 3(2)வது பிரிவு - ஒரு நபர், அரசின் பாதுகாப்புக்கு எதிராக செயல்பட்டாலோ, பொது ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டாலோ, சமூகத்துக்கு அடிப்படைத் தேவையான பொருள் வழங்குதல் மற்றும் சேவைகளை நிர்வகிப்பதற்கு எதிராக செயல்பட்டாலோ, பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யலாம் என்றுதான் கூறுகிறது. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரோ சட்டத்திலே குறிப்பிடப்படாத ஒரு காரணத்தைக் கூறி (ஒருமைப்பாடு - இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டதாக) சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளார். எனவே தனது சுய சிந்தனையை சரியாகப் பயன்படுத்தியே சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று சட்டம் கூறுவதற்கு எதிராக மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்பட்டிருக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் இந்த ஆணை - 10.3.2009 அன்று மதுரை மத்திய சிறையில் கொளத்தூர் மணியிடம் வழங்கப்பட்டது. அடுத்த நாளே அதாவது 11.3.2009 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றொரு ஆணையை கொளத்தூர் மணிக்கு வழங்கினார். இது ஏற்கனவே வழங்கப்பட்ட ஆணைக்கான திருத்தம். முதலில் வழங்கப்பட்ட ஆணையில் நாட்டின் இறையாண்மை ஒருமைப்பாட்டுக்கு எதிராக செயல்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது தவறு என்றும், எனவே அதற்கு பதிலாக பொது ஒழுங்குக்கு எதிராக செயல்பட்டதாக திருத்திப் படிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரின் இரண்டாவது ஆணை கூறியது.

தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் இப்படி திருத்தத்துக்கான ஆணை வழங்குவதற்கு எந்தப் பிரிவும் கிடையாது. மார்ச் 10 ஆம் தேதி ஒருமைப்பாடு, இறையாண்மைக்கு எதிராக கொளத்தூர் மணி செயல்பட்டார் என்று தனது விருப்பத்துக்கேற்ப, ஒரு முடிவை செய்த மாவட்ட ஆட்சித் தலைவர், அடுத்த நாள் பொது ஒழுங்குக்காக செயல்பட்டதாக, தனது முடிவை மாற்றிக் கொண்டுவிட்டார். என்றாலும் தனது முடிவை மாற்றிக் கொண்டதற்கான சான்று ஆவணம் ஆதாரம் எதையும் காட்டவில்லை. பொது ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டார் என்பதற்கும் அந்த சான்று ஆதாரத்தையும் அவர்முன் வைக்கவில்லை. எனவே தனது சுய சிந்தனையைப் பயன்படுத்தாமலே திருத்த ஆணையை வெளியிட்டுள்ளார். அதுவும்கூட எழுத்துப் பிழை போன்ற சிறு தவறுகளுக்கு திருத்தங்கள் வெளியிடலாமே தவிர, கைது செய்யப்பட்டதற்கான உளப் பூர்வமான காரணத்துக்கே திருத்தங்களை வெளியிட முடியாது. இப்படி ஒரு திருத்தத்தை, தானாகவே முடிவுசெய்து வெளி யிட்டாரா அல்லது அதற்கான புதிய சான்று ஆவணங்கள் கிடைத்துதான் வெளியிட்டாரா என்பது பற்றியும் குறிப்பிடப்படவில்லை.

அத்துடன், சமூக விரோத செயல்களில் ஈடுபடாமல் (கொளத்தூர் மணியை) தடுக்கவே இந்த ஆணை பிறப்பிக்கப் பட்டது என்கிறார், மாவட்ட ஆட்சித் தலைவர். அவர் சமூக விரோதச் செயல் என்று எதைக் குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை. அதற்கான ஆதாரங்களை முன் வைக்காமலே அவ்வாறு குறிப்பிடுகிறார். வழக்கைப் பதிவு செய்த திண்டுக்கல் காவல் நிலைய ஆய்வாளரே தனது வழக்குப் பதிவில் (கொளத்தூர் மணி) சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதாகக் கூறவில்லை. ஆனால், கைது ஆணை பிறப்பித்த அதிகாரி (மாவட்ட ஆட்சித் தலைவர்) - வழக்கில் கூறப்படாதவற்றையும் மீறி அதீதமாக செயல்பட்டுள்ளார்.

இந்திய குடிமக்களின் பாதுகாப்புக்கு எதிராக (கொளத்தூர் மணி) செயல்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தனது ஆணையில் குறிப்பிட்டுள்ளது, அவரது வரம்பு மீறிய நடவடிக்கையாகும். இந்த அடிப்படையில், கைதாணை பிறப்பிக்க, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தேசிய பாதுகாப்பு சட்டப் பிரிவுகள் எதுவும், அதிகாரம் வழங்கவில்லை.

கைது பற்றி குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது பற்றி கொளத்தூர் மணிக்கு சட்டப்படி தெரிவிக்கப்பட வேண்டிய தகவல் முறையாகத் தெரிவிக்கப்படவில்லை.

திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் கொளத்தூர் மணி தாக்கல் செய்த பிணை மனு நிலுவையில் உள்ளது. அதன் மீதான தீர்ப்பு வரவில்லை. பிணை மனு நிலுவையில் இருக்கும் போதே - மாவட்ட ஆட்சித் தலைவர் ஓராண்டு வெளியே வர இயலாத தடுப்புக் காவல் சட்டத்தைப் பிறப்பிப்பது நீதிமன்ற நடவடிக்கையில் குறுக்கிடுவதாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் தேசியப் பாதுகாப்பு சட்டத்துக்கான இந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையை நீதிமன்றம் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று வழக்கு மனுவில் கூறப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் துரைசாமி, இளங்கோவன் ஆகியோர் மனுவைத் தாக்கல்செய்தனர். நீதிபதிகள் தர்மராவ், ஆர். சுப்பையா முன் 25.3.2009 அன்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதிபதிகள் 4 வாரங்களுக்குள் பதில் தருமாறு மத்திய மாநில அரசுகளுக்கு தாக்கீது அனுப்ப உத்தரவிட்டனர்.

## தூத்துக்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம்

"தூத்துக்குடி மாநகர கழகம்" சார்பாக 7.3.09 சனி அன்று மாலை 6 மணியளவில் 1 ஆம் வாயில் (காந்தி சிலை முன்பு) கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநகரத் தலைவர் கோ. அ.குமார் தலைமையில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு முன்னிலையில், கிருத்துவர் வாழ்வுரிமை இயக்கம் பனி. சுந்தரி மைந்தன், மக்கள் உரிமை கூட்டமைப்பு வழக்குரைஞர் அதிசயகுமார், உடல் சார் மக்கள் இயக்கம் அரிகரன், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ரா.வே.மனோகர், ம.தி.மு.க. நக்கீரன், இந்திய பொதுவுடைமை கட்சி வழக்குரைஞர் ஆ. மோகன்ராசு உரையை தொடர்ந்து கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன், தூத்துக்குடி வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் தா.மி. பிரபு ஆகியோர் ஆர்ப்பாட்ட நோக்கத்தினை விளக்கி உரையாற்றினர்.

கழகப் பொறுப்பாளர்கள் வே. பால் ராசு, க. மதன், ச.கா. பாலசுப்பிரமணியன், பால். அறிவழகன், தமிழ்நாடு மாணவர் கழகம் வ. அகரன் மற்றும் கழகத் தோழர்கள் அறிவுப் பித்தன், சு. மகராசன், விடுதலை சிறுத்தையின் ஆறுமுக நயினார், ஆதித் தமிழர் பேரவையின் தோழர்கள், கழகத் தோழர் நெல்லை காசிராசன் மற்றும் தமிழின உணர்வாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். சா.த.பிரபாகரன் நன்றி கூற ஆர்ப்பாட்டம் இரவு 9 மணிக்கு நிறைவுற்றது.

### தாதகாப்பட்டி

18.2.2009 புதன் அன்று பெரியார் திடல் தாதகாப்பட்டி கேட்டில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை இன எழுச்சி பகுத்தறிவு பாடல்களை மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழு சார்பில் தோழர்கள் பாடினார்கள். 7 முதல் 8.30 மணி வரை தமிழர் ஒருங்கிணைப்பு தோழர்கள் பிந்து சரண், தமிழ்ச்செல்வன், இளமாறன், பூமொழி, நங்கவள்ளி அன்பு, வழக்கறிஞர் மாயன், பாலு ஆகியோர் சிறப்புரையாற்றினர். 8.30 மணி முதல் 10 மணி வரை கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் மார்ட்டின் தலைமையேற்றார். பழனி நன்றியுரையாற்றினார்.

## வழிகாட்டுகிறார் நாத்திகஜோதி

ஈரோடு மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கா.நாத்திகசோதி - மகேசுவரி ஆகியோரின் மகள் சங்கீதா, எம்.சி.ஏ., தென்காசி கருப்பையா-வெள்ளத்தாய் ஆகியோரின் மகன் க. இராசா (ஆசிரியர்) ஆகியோரது வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு 12.3.2009 காலை 10 மணியளவில் செங்கோட்டை பதிவு அலுவலகத்தில் நடைபெற்றது. மார்ச் 15 ஆம் தேதி குருவாரெட்டியூரில், மணமக்கள் அறிமுக விழா நிகழ்ச்சி கழகப் பிரச்சாரமாக சிறப்புடன் நடந்தது. மணமக்கள் சார்பில் கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் கழகம் வெளியிட்டுள்ள "இனி என்ன செய்யப் போறீங்க?" குறுந்தகடு - கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், மணியரசன் ஆகியோர் ஈரோடு கூட்டங்களில் ஆற்றிய உரைகளடங்கிய குறுந்தகடுகள் அனைவருக்கும் விழாப் பரிசாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

**நன்கொடை :** காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்துக்காக ஈரோடு மாவட்ட கழகத் தலைவர் நாத்திகசோதி, மகேஸ்வரி, மகள் சந்திரா மற்றும் ஆசிரியர் கருப்பண்ணன், வெள்ளத்தாய், மகள் ராணி ஆகியோர் சார்பில் ரூ.4000 நனகொடையை சேலத்தில் நடந்த, கழக செயற்குழு கூட்டத்தில் பலத்த கரவொலிக்கிடையே பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணனிடம் வழங்கினார்.

தோழர் சிற்பி ராசன், காங்கிரஸ் எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு ரூ.50000 நன்கொடையை விரைவில் வழங்குவதாக அறிவித்தார்.

கள்ளக்குறிச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் சின்ன சேலம் பகுதி கழக அமைப்பாளர் மு.குருசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் ரூ.1500 நன்கொடையாக வழங்கினார்.

வெளி வந்துவிட்டது: இரண்டாம் பதிப்பு

"ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய உளவு நிறுவனங்களின் சதி"


- ஈழத் தமிழர் போராட்டத்தை சீர்குலைக்க உளவு நிறுவனங்கள் தலையிட்டு உருவாக்கிய சூழ்ச்சிகள்
- 'சகோதர யுத்தங்களை' உருவாக்கிய பின்னணிகள்
- எம்.கே. நாராயணனின் உண்மை முகம் – தீட்சிதப் பார்ப்பனரின் சதி
- பிரபாகரனைக் கொல்ல நடந்த திட்டம்
- ஏராளமான அதிர்ச்சியூட்டும் தகவல்கள்; அத்தனையும் ஆதாரங்களோடு.

**ஈரோடு மாநாட்டில் விற்பனைக்கு வருகிறது.** விலை: ரூ.40/-

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 3rd April 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஏப்ரல் 09, 2009 புரட்சி 8 முழக்கம் 13 விலை : ரூ.2.50

## கழகம் வெளியிட்ட குறுந்தகடு சட்டவிரோதமானதல்ல

# அலறும் காங்கிரசுக்கு கழகம் பதிலடி

***கழகம் வெளியிட்ட குறுந்தகடு தமிழகம் முழுதும் உருவாக்கி வரும் தாக்கத்தைக் கண்டு பதறிப்போன காங்கிரசு – தேர்தல் ஆணையத்திடம் தடை செய்யக் கோரி மனு கொடுத்தது. இதைக் கண்டித்து கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வெளியிட்ட அறிக்கை:***

இலங்கையில் ஈழத் தமிழர்கள் சராசரியாக ஒரு நாளில் 100 பேர் வரை படுகொலை செய்யப்படுகிறார்கள். கடந்த ஜனவரிக்குப் பிறகு 98000 அப்பாவி தமிழர்கள் இலங்கை ராணுவத்தால் படுகொலைக்கு உள்ளாகியிருப்பதை அய்.நா.வின் மனித உரிமை ஆணையமே அறிவித்துள்ளது. நேற்றும் - இன்றுமாக ஒவ்வொரு நாளும் கொத்து கொத்தாக 'போரில்லாத பகுதி' என்று ராணுவத்தால் அறிவிக்கப்பட்ட பகுதியிலும், மருத்துவமனைகளிலும்கூட அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதை அமெரிக்கா, பிரிட்டன், நார்வே போன்ற சர்வதேச நாடுகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கண்டித்த பிறகும்கூட இந்தியா எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை. மாறாக இலங்கை அரசுக்கு ஆயுத உதவி, நிதி உதவி போர்ப்பயிற்சிகளையும் வழங்கிக் கொண்டு இப்போது தமிழர்களிடம் ஆளும் காங்கிரஸ் கட்சி வாக்கு கேட்க வருகிறது. இந்த இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தாத காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்கும் அவர்களைத் தோற்கடிக்கக்கூடிய எதிரணிக்கு வாக்களிக்க மக்களிடம் பிரச்சாரம் செய்வதற்கும் உள்ள கருத்து உரிமையை உரிமையை காங்கிரஸ் பறிக்க துடிக்கிறது.

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட குறுந்தகட்டையும், பெரியார் திராவிடர் கழகத்தையும் தடை செய்யுமாறு தேர்தல் ஆணையத்திடம் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு புகார் மனு அளித்துள்ளார். இந்தக் குறுந்தகட்டில் வெளியிட்டுள்ள ஈழத் தமிழர் அவலக் காட்சிகள் ஏற்கனவே தொலைக்காட்சிகளில் ஒளி பரப்பப்பட்டவைதான். தமிழ்நாட்டில் இந்த இனப் படுகொலைக்கு எதிராக மாணவ மாணவிகள் நடத்திய ஊர்வலக் காட்சிகளும் அதில் இணைக்கப்பட்டுள்ளன. வேறு எந்த சட்ட விரோத கருத்தும் இடம் பெறவில்லை. தங்களுக்கு எதிரான எந்த ஒரு கருத்தையும் மக்களிடம் பரப்புவதை தடை செய்ய வேண்டும் என்று அதிகாரத்தின் துணையோடு காங்கிரசார் மிரட்ட முயல்வது அவர்களுக்கு எழுந்துள்ள தோல்வியின் அச்சத்தையே வெளிப்படுத்துகிறது.

ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் களத்தில் ஆதரவு - எதிர்ப்பு கருத்துகளை வெளியிடும் உரிமை ஒவ்வொரு கட்சிக்கும் இயக்கத்துக்கும் உண்டு.

கொழும்பில் இலங்கை ராணுவத்துக்காக ராடார் கருவியை இயக்கிய இந்திய பொறியாளர்கள் குப்தா, ராவுத் என்ற இரண்டு பேர் விடுதலைப்புலிகள் தாக்குதலில் காயமடைந்ததும் கோவை, சென்னை விமானப் படைத் தளங்களுக்கு பயிற்சி பெற வந்த இலங்கை விமானப் படையினர், தமிழ்நாட்டில் எழுந்த எதிர்ப்பால் திருப்பி அனுப்பப்பட்டதும் உண்மையா, இல்லையா? கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து தமிழ்நாட்டில் போரை நிறுத்தக் கோரி ஒருமித்து அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்திய பிறகும், இந்திய அரசு, அப்படி ஒரு கோரிக்கையை இதுவரை இலங்கை அரசிடம் வற்புறுத்தியதா? இந்திய அரசின் ராணுவ உதவியால்தான் இவ்வளவு வெற்றிகளைப் பெற்றுள்ளோம் என்று இலங்கை அமைச்சரே அண்மையில் கொழும்பு நாடாளுமன்றத்தில் பேசியுள்ளாரே! - இதை எல்லாம் காங்கிரஸ் மறுக்க முடியுமா?

இந்தியாவின் இறையாண்மையை அமெரிக்காவிடம் அடகு வைத்த அணுசக்தி உடன்பாட்டை விமர்சிக்கும் உரிமை உள்ளதுபோல் இலங்கைப் பிரச்சினையிலும் இந்தியாவின் தமிழின விரோத, வெளிநாட்டுக் கொள்கையை விமர்சிக்கும் உரிமை உண்டு.

கருத்துகளை கருத்துகளால் மக்கள் மன்றத்தில் சந்திக்க காங்கிரசார் ஏன் அஞ்சுகிறார்கள்? அவர்கள் பக்கம் நியாயங்கள் ஏதாவது இருந்தால் எடுத்துச் சொல்லட்டுமே!

தமிழர்களின் உரிமைகளுக்கும், சமத்துவத்துக்கும் பெரியார் விட்டுச் சென்ற அறிவார்ந்த லட்சியங்களை ஏற்றுக் கொண்டு கடந்த 1996 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் பெரியார் திராவிடர் கழகம் தன்னலமற்ற சமுதாயத் தொண்டாற்றி வருவதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அய்ந்தாண்டு காலத்துக்கு ஒரு முறை தேர்தல் வரும்போது மட்டும் மக்களை சந்திக்க வரும் காங்கிரஸ் கட்சியினருக்கு பெரியார் விட்டுச் சென்ற தமிழர்களின் சுயமரியாதைக்கான உரிமைகள் பற்றிய கவலையோ, அக்கறையோ இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாதுதான். அதனால் தான், பெரியார் திராவிடர் கழகத்தையே தடை செய்ய வேண்டும் என்று மனு தருகிறார்கள்.

காங்கிரசாரின் இத்தகைய செயல்பாடுகள் தமிழர்களிடையே அவர்களின் உண்மையான சுயரூபத்தை மேலும் அம்பலப்படுத்தி வருகிறது. விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் என்ற முத்திரை குத்தி - தமிழினப் படுகொலைகளை நியாயப்படுத்தும் காங்கிரசாரின் தமிழின துரோகத்தை தமிழக மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

மிகப் பெரும் ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் ஒரு நாட்டில் - நடத்தப்படும் தேர்தலில் ஆளும் கட்சிகள் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாற்றுக் கருத்துகளை நசுக்க முயலுவது நாட்டுக்கே அவமானமாகும். பெரியார் திராவிடர் கழகம் இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

## குமுறுகிறார் அருந்ததிராய்



புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் - மனித உரிமைக்கு தொடர்ந்து குரல் கொடுக்கும் அருந்ததிராய் - அண்மைக்காலம் வரை விடுதலைப் புலிகள் 'பயங்கரவாதிகள்' என்று எழுதியவர் - இப்போது நியாயத்தை உணர்ந்து குமுறுகிறார்; 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேட்டில் எழுதிய கட்டுரையிலிருந்து:

"ஏன் இந்த மவுனம்? 'இலங்கையில் இன்று சுதந்திரமாகச் செயல்படும் நாளேடுகள், தொலைக்காட்சிகளே ஏறக்குறைய இல்லை' என்று இன்னொரு நேர்காணலில் இலங்கை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரா கூறியிருக்கிறார்.

சமுதாயத்தை 'அச்சத்தில் உறைய வைக்கிற' கொலைக் கும்பல்கள், 'வெள்ளை வேன் கடத்தல்கள்' பற்றி எல்லாம் சமரவீரா தொடர்ந்து பேசுகிறார். பல்வேறு பத்திரிகையாளர்கள் உள்பட எதிர்ப்புக் குரல் கொடுப்பவர்கள் கடத்தப்படுகின்றனர். படுகொலை செய்யப்படுகின்றனர். பத்திரிகையாளர்களைப் பேசவிடாமல் செய்வதற்கு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள், காணாமல் அடித்தல், படுகொலை செய்தல் முதலிய எல்லாவற்றையும் இலங்கை அரசு பயன்படுத்துவதாக பன்னாட்டுப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு குற்றம் சாற்றியுள்ளது.

மனித குலத்துக்கு எதிரான இந்தக் குற்றங்களில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு பொருளுதவியும், ஆய்த உதவியும் அளித்து வருவதாக, கவலை அளிக்கிற உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. உண்மையாக இருக்கும் எனில் இது அறநெறிக்கு எதிரானது, ஏற்றுக் கொள்ள முடியாது.

### பெரியார் திராவிடர் கழகத்தின் இணைய தளம் "periyardk.org"

**கழகத்தின் அதிகாரபூர்வ இணைய தளம் ஏப்.14 முதல் செயல்படத் தொடங்குகிறது; கழகம் தொடர்பான நிகழ்ச்சிகள் செய்திகளை இந்த இணைய தளத்திற்கு வருகை புரிந்து பார்க்கலாம்.**

### காவல் துறை அனுமதி மறுப்பு: ஈரோடு மாநாடு தள்ளி வைக்கப்படுகிறது

ஈரோட்டில் கழகம் நடத்தவிருந்த தமிழின வாக்காளர் மாநாட்டுக்கு காவல்துறை அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து மாநாடு வேறு தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**– தலைமைக் கழகம்**

## அயர்லாந்து அன்னிபெசன்டிலிருந்து இத்தாலி சோனியா வரை...

# காங்கிரஸ் வரலாறே ~ தமிழினப் பகைமை தான்!

*காங்கிரஸ் கட்சி – பிரிட்டிஷ்காரரால் தொடங்கியது முதல் இது நாள் வரை அது தமிழினத்தின் பகை சக்தியாகவே இருந்திருக்கிறது. இடையில் இந்திய தேசியத்திலிருந்து மாறுபட்டு, தமிழின அடையாளத்தோடு செயல்பட்ட காமராசர் காலம் மட்டுமே மாறுபட்டிருந்தது. மீண்டும் இந்திய தேசிய காங்கிரஸ் – தமிழினப் படுகொலைக்கு கரம் நீட்டிக் கொண்டிருக்கிறது. இளம் தலைமுறையினரே; இதோ, அந்த வரலாற்றிலிருந்து சில துளிகள்...*

- 1885 இல் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியவர் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் என்ற பிரிட்டிஷ் அய்.சி.எஸ். (அந்தக்கால அய்.ஏ.எஸ்.) அதிகாரி. அதற்கான ஆலோசனையை வழங்கியவர் பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரலாக இருந்த டஃப்ரின் பிரபு.

- பம்பாய், கல்கத்தா, சென்னையில் காங்கிரஸ் மாநாடுகள் கூடியபோது மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பிரிட்டிஷ் ஆளுநர்கள் தேனீர் விருந்து கொடுத்தனர்.

- காங்கிரஸ் தொடங்கப்பட்டது - சுதந்திரம் கேட்பதற்காக அல்ல. அப்போது நிர்வாகம் நடத்திய பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியாரின் அடக்குமுறைகளை எதிர்த்து எவரும் போரிடாமல் கட்டுக்குள் வைப்பதற்கே காங்கிரஸ் தொடங்கப்பட்டது. எனவேதான் காங்கிரசைத் தொடங்கிய ஹ்யூம் என்ற பிரிட்டிஷ் அதிகாரியே அக்கட்சியின் செயலாளராக 20 ஆண்டுகாலம் இருந்தார்.

- ஒவ்வொரு காங்கிரஸ் கட்சியின் மாநாடும் தொடங்கும்போதும் - "பிரிட்டிஷ் அரசர் அரசிக்கு கடவுள் நீண்ட ஆயுளைத் தர வேண்டும்" என்று தீர்மானங்கள் போடுவது வழக்கம். 1886 இல் தொடங்கி 1914 வரை 8 மாநாடுகளில் இந்த 'மன்னர் வழிபாட்டு'த் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- கல்கத்தாவில் இரண்டாவது காங்கிரஸ் மாநாடு நடந்தபோது 'மன்னர் வழிபாட்டுத் தீர்மானம்' தேவையா என்ற கேள்வி எழுந்தது, மாநாட்டுத் தலைவரான தாதாபாய் நவ்ரோஜி "இந்த ஜனசபை (காங்கிரஸ் மாநாடு) பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு வலிமையான அடித்தளம் (அஸ்திவாரக்கல்) என்று பதில் தந்தார்.

- அப்போது - காங்கிரசுக்கு 'ஆரிய ஜன அய்க்கியம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு. 'காங்கிரஸ் அல்லது ஆரிய ஜன அய்க்கியம்' என்ற பெயரில் க. சுப்ரமணிய அய்யர் என்ற காங்கிரஸ் தலைவர் ஒரு நூலையே எழுதியுள்ளார்.

- காங்கிரசைத் தொடங்கிய ஹ்யூம் அப்போது காங்கிரசில் பெரும் எண்ணிக்கையாக இருந்த பார்ப்பனர்களிடம் மதம், ஆச்சாரம், வர்ணாஸ்ரமப் பாதுகாப்பு போன்ற சமூகப் பிரச்சினைகளில் கட்சி குறுக்கிடாது என்று ஒவ்வொரு மாநாட்டிலும் உறுதி தந்து பேசினார். இதை 'அம்பேத்கர் தனது சாதியை ஒழிக்க வழி' எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

- சென்னையில் கூடிய காங்கிரஸ் மாநாடு பற்றி 'சுதேசமித்திரன்' நாளேட்டில் காங்கிரஸ் ஒருவிளம்பரத்தை வெளியிட்டிருந்தது. அதில், "இந்த வருடத்துக் காங்கிரஸ் சபையில் ஒரு முக்கியமான புதுஅம்சம் - சாதி ஆச்சாரம் பார்க்கும் பிரதிநிதிகளுக்குப் (பார்ப்பனர்களுக்கு) பிரத்தியேகமான ஒரு பங்களாவை அவர்களுடைய சாதி ஆச்சாரங்களுக்கு ஏற்றபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன" என்று அந்த விளம்பரம் கூறியது.

- 1885 இல் நடந்த பம்பாய் காங்கிரசிலும் 1886 இல் நடந்த கல்கத்தா காங்கிரசிலும் ஒரு முஸ்லீம் பிரதிநிதிகூட பங்கேற்கவில்லை. காரணம் அப்போது பிரிட்டிஷாரை முழுமையாக எதிர்த்தது முஸ்லீம்கள்தான். 'ஆரிய ஜன அய்க்கியம்' என்று பெயர் சூட்டிக் கொண்ட கட்சியில் எப்படி முஸ்லீம்கள் வருவார்கள்?

- சென்னையில் கூடிய மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்ற 361 பிதிநிதிகளில் 138 பேர் பார்ப்பனர்கள். மற்றவர்கள், செட்டியார், ரெட்டியார், முதலியார் போன்ற முன்னேறிய சாதியினர். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை. கும்பகோண சங்கர மடத்தின் சார்பில் சங்கராச்சாரி பிரதிநிதி கலந்து கொண்டார்.

- சமூகப் பிரச்சினையில் காங்கிரஸ் 'தலையை நுழைக்காது' என்ற கூறினாலும், சென்னை காங்கிரஸ் மாநாட்டில் பசுவதையை தடை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை பார்ப்பனர்களுக்காக நிறைவேற்றினார்கள்.

- 1900க்குப் பிறகு நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் - காலையிலே இந்து மகாசபை மாநாடும், மாலையில் - அதே மேடையில் காங்கிரஸ் மாநாடும் நடந்த வந்தன. காங்கிரசார் இரண்டு அமைப்புகளிலும் இரட்டை உறுப்பினர்களாக இருந்து வந்தனர்.

- இதற்குப் பிறகுதான் 1906 இல் முஸ்லீம்கள் தங்களுக்கு என்று 'அகில இந்திய முஸ்லீம் லீக்' என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள்.

- வங்காளத்தை மத அடிப்படையில் இரண்டு மாகாணமாக பிரிட்டிஷார் பிரித்தபோது அதை எதிர்த்து 'அய்க்கிய வங்காள இந்து இயக்கத்தை' (United Bengal Hindu Movement) தொடங்கியது,



காங்கிரசார் தான். அதே ஆண்டில் பஞ்சாபில் இந்து மகாசபையை காங்கிரசார் உருவாக்கினார்கள். இதுவே பிறகு அகில பாரத இந்து மகாசபையாகியது. ஆக, அரசியலில் மதவாதத்துக்கு கால்கோள் நடத்தியதே காங்கிரஸ் தான்.

- லாலா லஜபதிராய், மதன்மோகன் மாளவியா இருவரும் ஒரே நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் இந்து மகாசபைக்கும் தலைவர்களாக இருந்தனர். இருவருமே மோசமான வர்ணாஸ்ரம வெறியர்கள். முஸ்லீம் எதிர்ப்பாளர்கள். 'கடல் தாண்டுவது இந்துமத விரோதம்' என்பதால், லண்டன் வட்ட மேஜை மாநட்டுக்கு சென்ற மதன் மோகன் மாளவியா, தன்னுடன் மண்ணை உருண்டையாக உருட்டி கையில் எடுத்துச் சென்றார். மண்ணை கையில் எடுத்துச் சென்றால், கடல் தாண்டி போனதாகாது என்பது அய்தீகமாம்! எனவே அவர் 'மண்ணுருண்டை மாளவியா' என்றும் அழைக்கப்பட்டார்.

- இப்போது - சென்னை காங்கிரஸ் அலுவலகம் 'சத்திய மூர்த்தி பவனில்' காங்கிரசார் கூடினாலே அங்கு கலவரம் வெடிக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். உண்மையில் காங்கிரசின் வரலாறே அப்படித்தான் இருந்திருக்கிறது. சூரத் நகரில் கூடிய காங்கிரஸ் கட்சி மாநாட்டில் 'தீவிரவாதிகள்' என்று அழைக்கப்பட்ட திலகர் தலைமையிலான 'இந்து வெறியர்' குழு கலவரத்தில் இறங்கியது எதிர்ப்பு அணி. திலகர் மீது செருப்பு வீசியது. பெரும் கலவரத்தினால் எந்த முடிவும் எடுக்காமல், மாநாடு கலைந்தது. அதன் பிறகு ஓராண்டு காலம் காங்கிரஸ் கூடவே இல்லை. அரசியலில் 'செருப்பை' ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்பதை, அப்போது தான், காங்கிரசார் உலகத்துக்கே அறிமுகப்படுத்தினர்.

- பொது மக்களிடம் திரட்டிய நிதிக்கு கணக்கு காட்டாமல் விழுங்கி ஏப்பம் விடும் கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தியதும் காங்கிரஸ் தான். 'திலகர் சுயராஜ்ய நிதி' திரட்டி, கடைசி வரை காங்கிரஸ் அதற்கு கணக்கே காட்டவில்லை. அதே 'திலகர்' நிதியை காந்தியார் வசூல் செய்தார். வசூல் செய்த பலரும் பணத்தை தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். அதனால் தான் இப்போதும் "வசூல் பணம் என்னவா யிற்று?" என்று எவராவது கேட்டால் 'காந்தி கணக்கில் எழுது' என்று கூறும் வழக்கு உள்ளது. இது பொது வாழ்க்கை "ஒழுக்க"த்துக்கு காங்கிரஸ் வழங்கிய 'அருட்கொடை'.

- அரசியலில் மதத்தை நுழைத்தவர் பாலகங்காதர திலகர் என்ற மராட்டிய காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர்தான். 'பிள்ளையாரை' அரசியல் குறியீடாக்கியவரும் அவர்தான். சைவ - வைணவப் பிரிவுகளை ஒருங்கிணைக்க அவர் விநாயகனைப் பயன்படுத்தி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக 'விநாயகர்' ஊர்வலங்களை மராட்டியத்தில் நடத்தினார். அதைத் தான் இப்போது இந்து முன்னணி நடத்திக் கொண்டிருக்கிறது.

- புனே நகரத்தில் எலிகளால் பிளேக் நோய் பரவி ஏராளமானோர் உயிரிழந்த போது நோயைத் தடுக்க எலிகளை ஒழிக்கும் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் நிர்வாகம் தீவிரப்படுத்தியது. அப்போது விநாயகன் வாகனம் எலி. எனவே எலியை ஒழிப்பது இந்து மத விரோதம் என்று கூறினார் திலகர். இதனால் எலியை ஒழிக்க வந்த இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் திலகர் தண்டிக்கப்பட்டு 18 மாதம் சிறைபடுத்தப்பட்டார்.

- ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் ஒரே பள்ளியில் படிப்பதை எதிர்த்த திலகர், பெண்களுக்கு கல்வி தருவதையே எதிர்த்தார். குழந்தை திருமணங்களை (பால்ய விவாகம்) தடை செய்யும் சட்டத்தை பிரிட்டிஷார் கொண்டு வந்தபோது மதத்தில் தலையிடுவதாகக் கூறி, கடுமையாக எதிர்த்தார்.

- சென்னையில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் அரசியல் உரிமை கோரியபோது 1918 இல் திலகர் இவ்வாறு பேசினார்: "எதற்காக, செருப்பு தைக்கிறவனும், எண்ணெய்ச் செக்கு ஆட்டுபவனும், வெற்றிலை பாக்கு கடை வைத்திருப்பவனும், சட்டசபைக்குப் போக முயற்சிக்கிறார்கள்? யார், யார் எங்கே போக வேண்டும் என்று ஒரு வரைமுறை கிடையாதா?" - இந்த நிகழ்வுகளை அம்பேத்கர் தனது நூலில் (காந்தியும் - காங்கிரசும் தீண்டப்படாதோருக்கு செய்தது என்ன? நூலில்) பதிவு செய்துள்ளார்.

- அரசியலில் மதத்தைப் புகுத்தியதில் காந்திக்கு பெரும் பங்கு உண்டு. 'ராம பஜனையோடு' அவரது அரசியல் நடவடிக்கைகள் கலந்து நின்றன. தனது 'அந்தராத்மா'வுடன் அடிக்கடிப் பேசுவதாக அவர் கூறிக் கொண்டார். இந்தியாவில் 'ராம ராஜ்யம்' அமைய வேண்டும் என்றார். 'தீண்டாமை' ஒழிய வேண்டும். ஆனால், நால்வர்ணப் பிரிவாகிய வர்ணாஸ்ரம அமைப்பு நீடிக்க வேண்டும் என்றார். ஒவ்வொரு 'வர்ணமும்' தங்களுக்குரிய தொழிலை செய்வதே நல்லது என்றார்.

- 'தீண்டப்படாத' தலித் மக்களுக்கு இரட்டை வாக்குரிமை வழங்க பிரிட்டிஷ் அரசு முன்வந்த போது அதை எதிர்த்து சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கினார் காந்தி. மிரட்டலுக்கு பிரிட்டிஷ் அரசு பணிந்தது. தலித் மக்களுக்கு கிடைத்த உரிமையை காந்தி பறித்தார்.

- மயிலாப்பூரிலுள்ள சீனிவாச அய்யங்கார் என்ற பிரபல காங்கிரசார் வீட்டில் காந்தி தங்குவது வழக்கம். அப்போதெல்லாம் அவர் வீட்டுத் திண்ணையில்தான் காந்திக்கு இடம்; உள்ளே

(3 ஆம் பக்கம்)

# கறைபடிந்த காங்கிரஸ் வரலாற்றுப் பக்கங்கள்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக முடியாது; இதை காந்தியே கூறியிருக்கிறார்.

- வர்ணாஸ்ரமத்தையும், மதத்தையும் நம்பிய காந்தி, கடைசியில் மதவெறியர்களாலே சுட்டுக் கொல்லப்பட்டார். கடைசி காலங்களில் பார்ப்பனர்களை எதிர்க்கத் தொடங்கியதும், இஸ்லாமியர்களின் நியாயங்களைப் புரிந்து கொள்ளத் தொடங்கியதுமே இதற்குக் காரணம்.

- பத்துக்கு மேற்பட்ட முறை - காந்தியாரை கொலை செய்யும் முயற்சிகள் நடந்தாலும், 'சுதந்திர' இந்தியாவில் உள்துறை அமைச்சராக இருந்த பட்டேல், காந்திக்கு உரிய பாதுகாப்பை வழங்கவில்லை. சுதந்திரப் போராட்ட வீரரும், முதுபெரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான ஜெயப்பிரகாஷ் நாராயணன், காந்தியின் மரணத்துக்கு பட்டேலின் அலட்சியமே காரணம் என்று பகிரங்கமாக குற்றம்சாட்டினார். 'சுதந்திரம்' பெற்ற காலத்தில் காங்கிரசின் தலைவராக இருந்த மவுலானா அபுல்கலாம் ஆசாத் எழுதிய தனது சுயசரிதையில் (India Wins Freedom), உள்துறை அமைச்சர் பட்டேல் அலட்சியம் காட்டியதுதான் - காந்தி மரணத்துக்கு காரணமாகிவிட்டது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

- காந்தியை கொலை செய்யப் போவதாக முன் கூட்டியே பம்பாய் மாகாண உள்துறை அமைச்சராக இருந்த காங்கிரஸ் தலைவர் மொரார்ஜி தேசாய்க்கு கடிதம் எழுதியதாக காந்தியார் கொலையில் ஆயுள் தண்டனை பெற்ற கோபால் கோட்சே (இவர் நாதுராம் கோட்சேயின் தம்பி) விடுதலையான பிறகு 'பிளிட்ஸ்' பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். அது பற்றி விசாரிக்க அப்போது மத்திய காங்கிரஸ் ஆட்சி ஜி.எஸ். பாதக் என்ற நீதிபதி தலைமையில் ஒரு விசாரணை ஆணையம் அமைத்தது. ஆனால் அந்த விசாரணை ஆணையம் செயல்படுவதில் காங்கிரஸ் அலட்சியமே காட்டியது. நீதிபதி பாதக் விசாரணையை முடிப்பதற்கு முன்பே வேறு பதவிக்கு மாற்றப்பட்டார். பிறகு எதிர்க் கட்சிகள் காட்டிய எதிர்ப்பால் நீதிபதி கபூர் என்பவர் தலைமையில் மற்றொரு விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. விசாரணை ஆணையத்தின் முன் சமர்ப்பிக்க காந்தி கொலை தொடர்பான அரசு ஆவணங்கள் டெல்லியிலிருந்து விமானத்தில் பம்பாய் கொண்டு போகப் பட்டன.

- ஆனால், விமானத்திலே அந்த ஆவணங்கள் திருட்டுப் போய்விட்டதாக மத்திய காங்கிரஸ் ஆட்சி ஆணையத்தின் முன் கூறிவிட்டது. கபூர் ஆணையம் ஆர்.எஸ்.எஸ்.சைக் காப்பாற்றக்கூடிய ஓர் அறிக்கையை தந்து விசாரணையை முடித்துக் கொண்டது. இப்படி, தேசத் தந்தை காந்தியின் கொலையைப் பற்றியே அக்கறை காட்டாத கட்சிதான் காங்கிரஸ்.

- கேரள காங்கிரஸ் தலைவர்கள் தொடங்கிய வைக்கம் - தீண்டாமை ஒழிப்புப் போரைத் தொடர முடியாத நிலையில் அவர்களின் அவசர அழைப்பையேற்று தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்த பெரியார், வைக்கம் விரைந்து, தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரமாக தொடர்ந்தார். ஆனால், காங்கிரஸ் தலைவர்களான காந்தியும், ராஜகோபாலாச்சாரியும் அதை ஆதரிக்கவில்லை. பெரியார் போராட்டத்திற்குப் போயிருக்கக் கூடாது என்று குறை கூறினர். போராட்டம் வெற்றி பெற்ற பிறகு, சமரசம் பேச காந்தியை தலையிட வைத்த ராஜகோபாலாச்சாரி போராட்டத்தில் பெரியாரின் பங்கினைக் குறைத்தார். தனது சுயசரிதையில் வைக்கம் போராட்டம் பற்றி எழுதிய காந்தியும் பெரியார் பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை.

- ஹோம்ரூல் இயக்கத்தைத் தோற்றுவித்தவரும், பிரம்ம ஞானசபைக்கு தலைமை ஏற்றவருமான அன்னிபெசன்ட் என்ற அயர்லாந்து நாட்டுப் பெண்மணி. பார்ப்பனர்களின் செல்லப் பிள்ளையாகப் பாராட்டப்பட்டவர். இத்தாலியிலிருந்து வந்து, காங்கிரசுக்கு தலைமையேற்ற சோனியா, இன்று சிங்கள ராணுவத்தின் இனப் படுகொலையை ஆதரிப்பதுபோல், அன்று, அன்னிபெசன்ட், ஜாலியன் வாலாபாக்கில் ஜெனரல் டயர் நடத்திய படுகொலையை நியாயப்படுத்தினார். 'பஞ்சாபி, சீக்கியர்கள் செங்கல்லை வீசியதற்கும், அதற்கு ஜெனரல் டயர் பீரங்கிக் குண்டுகளைப் போட்டதற்கும் சரியாகப் போய்விட்டது. இதுதான் அரசு தர்மம்' என்றார்; அதேபோல் தான் ஈழத் தமிழர் படுகொலைக்கும் இன்று காங்கிரசும் தி.மு.க.வும் 'இறையாண்மை தர்மம்' என்கின்றன.

- அகில இந்திய காங்கிரஸ் கட்சி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தபோது, தமிழ்நாட்டில் காங்கிரஸ் செயலாளராக இருந்த ஏ.ரங்கசாமி அய்யங்கார், தலைவராக இருந்த 'இந்து' ஏட்டின் ஆசிரியர் கஸ்தூரி ரங்க அய்யங்கார், சுயராஜ்யக் கட்சி தலைவர் சத்தியமூர்த்தி அய்யர் ஆகியோர், பிரிட்டிஷ் அரசு நடவடிக்கைகளுக்கு பயந்து, பதவிகளிலிருந்து விலகல் கடிதம் கொடுத்து ஓடிவிட்டனர். அகில இந்திய மட்டத்தில் முன்னணித் தலைவராக இருந்தவரும், 'சர்வாதிகாரி' என்று வர்ணிக்கப்பட்டவருமான மற்றொரு தேசியத் திலகமான சீனிவாச அய்யங்கார், ஒத்துழையாமை இயக்கமே சட்ட விரோதம் என்று கூறிவிட்டார்.

- இந்து மதம் திணித்த குழந்தைப் பருவத்திலே திருமணம் செய்து வைக்கும் கொடுமையை நிறுத்த 1928 இல் அன்றைய சென்னை மாகாண சட்டசபையில் தீர்மானம் வந்தபோது, தமிழ்நாடு சுயராஜ்யக் கட்சி (சுய ராஜ்யக் கட்சி என்பது தேர்தலில் பார்ப்பனர்கள் போட்டியிடுவதற்காக காங்கிரசார் உருவாக்கிய பினாமி அமைப்பு) பால்ய விவாகத்தை ஒழித்து விட்டால், 'கற்பு கெட்டு விடும்' என்று சட்ட சபையில் எதிர்த்தது.

**பெரியார் தியாகத்தைப் புறக்கணித்தவர்கள்**

**காந்தியின் மரணத்தை கண்டு கொள்ளாதவர்கள்**

**காமராசரையே கட்சியிலிருந்து தூக்கி வீசியவர்கள்**

- கோயில்களில் பெண்களை 'தேவதாசிகளாக்கும்' இந்து மதக் கொடுமையை ஒழிக்க - 1930 இல் சென்னை சட்டமன்றத்தில் தீர்மானம் வந்தபோது அதைக் கடுமையாக எதிர்த்தவர், காங்கிரஸ் தலைவரான சத்திய மூர்த்தி அய்யர். இந்த சட்டத்தை எதிர்த்து சிறைக்குப் போவேனே தவிர, சாஸ்திரத்தை எதிர்த்து நரகத்துக்குப் போக மாட்டேன்; சட்டத்தைவிட சாஸ்திரமே முக்கியம் என்று பேசினார்; அவர் பெயரைத் தான் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு, இப்போது சூட்டியுள்ளார்கள்.

- பெரும் பணக்காரர்கள், தொழிலதிபர்கள் நலனுக்காக சட்டசபையில் கேள்வி கேட்க அவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு கேள்விகளை கேட்பது சத்தியமூர்த்தி வழக்கம். இதை அவரே ஒப்புக் கொண்டும் எழுதியுள்ளார். இப்போதும் நாடாளுமன்றத்தில் பெரும் தொழில் நிறுவனங்களுக்காக, அவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு, உறுப்பினர்கள் சிலர் கேள்வி கேட்கும் முறைக்கு வழிகாட்டியதே காங்கிரஸ் கட்சி தான்.

- காந்தி - பிரிட்டிஷாருக்கு எதிராக 'ஒத்துழையாமை இயக்கம்' அறிவிக்கப்பட்டபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும் என்று காங்கிரஸ் தலைமை வலியுறுத்தியது, சத்திய மூர்த்தி அய்யர், ரங்கசாமி அய்யங்கார், சீனிவாச அய்யங்கார் பதவியை விட விருப்பமின்றி அரைமனதோடு பதவி விலகினார்கள். போராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கிக் கொண்டார்கள்.

- 1931 இல் கராச்சியில் (இன்று பாகிஸ்தானிலுள்ள நகரம்) அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கூடியது. அதில் பொது கிணறு, பொது வீதி, பொது இடம் ஆகியவற்றை எல்லோரும் பயன்படுத்த உரிமை உண்டு என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதுபற்றி சத்தியமூர்த்தி அய்யர் - அவசர அவசரமாக 'இந்து' ஏட்டில் ஒரு விளக்கம் எழுதினார். ஒரு வகுப்பினருக்கு உரிமையான இடம் (அதாவது அக்ரகாரம்) கோயில் மற்றும் அது தொடர்புடைய இடங்களுக்கு இந்தத் தீர்மானம் பொருந்தாது என்பதே தேசியத் திலகம் சத்தியமூர்த்தி அய்யர் தந்த விளக்கம்!

- பகத்சிங் தூக்கிலிடப்பட்டபோது, காந்தி பிரிட்டிஷ் அதிகாரி இர்வின் என்பவருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கிறார். சட்டமறுப்பு இயக்கத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது பற்றி அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டாலும், பகத்சிங் தூக்கிலிடப்படுவது பற்றி - காந்தி, இர்வினுடன் எதையுமே பேசவில்லை. மாறாக, காந்தி தூக்கிலிடுவதை ஆதரித்துள்ளார். பகத்சிங்கை எப்போது தூக்கிடலாம் என்பது குறித்து, விவாதித்துள்ளதோடு, காங்கிரஸ் மாநாடு நடக்கும் நேரத்தில் தூக்கிலிட நேரம் குறித்தார்கள். வழக்கமாக விடியற்காலையில்தான் தூக்கு போடப்படும். ஆனால், வழக்கத்துக்கு மாறாக பகத்சிங்கும், அவரது தோழர்கள் ராஜகுரு, சுகதேவ் ஆகியோரும் மாநாடு நடக்கும் நேரத்தில் இரவு 7.30 மணியளவில் தூக்கிலிடப் பட்டார்கள்.

- பிரிட்டிஷாரின் 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் 1938 இல் பிரிட்டிஷாரோடு சமரசம் செய்து கொண்டு, தமிழ் மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைக்க முன் வந்தது. காங்கிரஸ் முதல்வராக பதவிக்கு வந்த ராஜகோபாலாச்சாரி பார்ப்பனர் (ராஜாஜி) - பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக இந்தியைப் புகுத்தினார். 10 பேர் கொண்ட அமைச்சரவையில் 4 முக்கியப் பொறுப்புகளில் பார்ப்பனர்களை நியமித்தார். ஒழுக்கக் கேடாக செயல்பட்டார் என்று காங்கிரஸ் கட்சியிலிருந்து 5 ஆண்டுகள் நீக்கப்பட்டிருந்த டி.எஸ்.எஸ்.ராஜன் என்ற பார்ப்பனரை அழைத்து அமைச்சராக்கினார். இலவசக் கல்வித் திட்டத்தை ரத்து செய்தார். வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை முடக்கப் பட்டது. உயர் பதவிகளில் பார்ப்பனர்களே நியமிக்கப்பட்டனர். அரசு கடிதம் - பதிவேடுகளில் 'திரு' என்று போடுவதற்கு பதிலாக 'ஸ்ரீ' என்றே போட உத்தரவிட்டார். விசுவ கர்ம சாதியார் பெயருக்குப் பின்னால் 'ஆச்சாரி' என்று போடக்கூடாது. 'ஆசாரி' என்றே போட வேண்டும் என்று உத்தரவிட்டார். (ஆச்சாரி என்றால் பார்ப்பனரைக் குறிக்கும் என்பதால்) பார்ப்பன மனுதர்ம ஆட்சியையே அன்று காங்கிரஸ் ஆட்சி நடத்தியது.

- மீண்டும் 'சுதந்திர' இந்தியாவில் 1952 இல் காங்கிரஸ் பதவிக்கு வந்தபோது, ராஜகோபாலாச்சாரியே முதல்வர். 15000 ஆரம்பப்பள்ளிகளில் 6000 பள்ளிகளை நிதி இல்லை என்று கூறி மூடினார். குழந்தைகள் அப்பாவின் தொழிலை பள்ளியில் கற்றுக் கொள்ள உத்தரவிட்டார். அரை நேரம் படிப்பு; அரை நேரம் அப்பாவின் தொழிலை கற்கவேண்டும்; மீண்டும் குலத் தொழில் செய்யும் நிலையை உருவாக்கினார்.

- "சாதி முறை ஒழிய வேண்டும் என்று பலர் குறை கூறுகிறார்கள். அதை ஒழிக்க முடியாது. நன்கு யோசித்துத்தான் நமது முன்னோர்கள் வர்ணாஸ்ரம முறையை வகுத்துள்ளார்கள். அதன்படி அவரவர்கள் தங்கள் முறைக்கேற்றவாறு நடந்து மக்களுக்கு தொண்டு புரிய வேண்டும்" என்று கரூரில் காங்கிரஸ் தலைவர் ராஜகோபாலாச்சாரி வெளிப்படையாகவே பேசினார். ('சுதேச மித்திரன்' 29.1.61) பெரியார் போராடி பார்ப்பன ஆட்சியை ஒழித்தார்.

- பிறகு பெரியார் ஆதரவுடன் காமராசர் முதல்வரானார்; அவரது ஆட்சிதான் தமிழரின் பொற்கால ஆட்சியாக இருந்தது. தமிழ் மண்ணின் உளவியலைப் புரிந்து, தமிழர்களுக்கான ஆட்சி நடத்தினார். டெல்லி ஆட்சியின் உத்தரவுகள் தமிழகத்துக்கு எதிராக இருந்தால் செயல்படுத்த மறுத்தார். தமிழர் அடையாளத்தோடு இருந்தவரை வெற்றிகளைக் குவித்த காமராசர், மீண்டும் அகில இந்திய அரசியலுக்குள் நுழைந்தபோது, காங்கிரஸ் பார்ப்பனத் தலைமை அவரை அவமதித்தது; புறக்கணித்தது. இந்திரா அவரை கட்சியிலிருந்தே நீக்கினார். தமிழகத்தில் காமராசர் கட்டி எழுப்பிய ஆட்சியும் 1967 ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்தது.

- எந்த அகில இந்திய தலைமை - இந்திராவின் தலைமை - காமராசரை புறக்கணித்தோ அந்தத் தலைமையுடன் கைகுலுக்கி, காமராசரின்

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சமூகநீதிக்கு குழிபறித்த ‘சொக்கத் தங்கம்’ சோனியாவின் ஆட்சி!

- ஜனதா ஆட்சி காலத்தில் மொரார்ஜி பிரதமராக இருந்தபோது, பிற்படுத்தப்பட்டோருக்காக நியமிக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரையை நாடாளு மன்றத்திலே வைக்க மறுத்த கட்சி - காங்கிரஸ்.
- கடும் போராட்டத்துக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் அறிக்கையை மட்டும் சமர்ப்பித்துவிட்டு, 10 ஆண்டுகாலம் அமுல்படுத்தாமல் அலமாரியில் தூசி படிய விட்ட கட்சி - காங்கிரஸ்.
- 1990 இல் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது, அதில் ஒரு பகுதியை (பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் ஆணை) அமுலாக்கியபோது அதற்காக பாரதிய ஜனதாவோடு சேர்ந்து கொண்டு வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்த கட்சி - காங்கிரஸ்.
- மண்டல் பரிந்துரையை எதிர்த்து, அன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ராஜீவ் காந்தி 10 மணி நேரம் தண்ணீர் குடித்துக் கொண்டே பேசினார்; பார்ப்பன சக்திகள் மகிழ்ச்சிக் கூத்தாடின.
- வி.பி.சிங் ஆட்சியை வீழ்த்திவிட்டு, ஆட்சிக்கு வந்த நரசிம்மராவ் காங்கிரஸ் பார்ப்பன - முன்னேறிய சாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீட்டை வழங்கி, பார்ப்பன சக்திகளையே திருப்தி செய்ய துடித்தது. (உச்சநீதிமன்றம் தான் அந்த உத்தரவை செல்லாது என்று அறிவித்தது)
- சோனியாவின் தலைமையில் உருவான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி குறைந்தபட்ச வேலைத் திட்டத்தில் தனியார் துறையில் இடஒதுக்கீட்டைக் கொண்டு வருவதாக கூறியது; செய்தார்களா? பெரும் தொழில் நிறுவனங்கள் - பன்னாட்டு நிறுவனங்கள் - பார்ப்பன பனியா சக்திகளின் மிரட்டலுக்கு பணிந்து தனியார் துறை இடஒதுக்கீட்டு முயற்சிகளை கிடப்பில் போட்ட கட்சி - காங்கிரஸ்!
- அரசு - பொதுத் துறை நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் - பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்வோம் - என்று குறைந்தபட்ச வேலைத் திட்டத்தில் உறுதி கூறினார்கள். நடைமுறைப்படுத்தினார்களா? இல்லை. கண்துடைப்புக்காக 2005 இல் நாடாளுமன்றத்தில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அது சட்டச் சிக்கலில் மாட்டியது. அவ்வளவுதான், விட்டால் போதும் ஆளை விடு என்று ஒதுங்கிக் கொண்டது. சட்டச் சிக்கலிலிருந்து மீட்டு சமூகநீதி வழங்கிட எந்த முயற்சியும் எடுக்காத கட்சி - காங்கிரஸ்.
- தலித் மற்றும் பழங்குடியினரின் பாரம்பரிய உடைமைகளைப் பாதுகாக்கப் போவதாக குறைந்தபட்ச திட்டம் கூறியது; நடந்தது என்ன? 2006 இல் பரம்பரை வன வாழ் மக்கள் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. சட்டம் வந்ததே தவிர, அதை நிறைவேற்றாமல், கிடப்பில் போட்ட கட்சி - காங்கிரஸ்!
- மெட்ரிக் படிப்பு முடித்த தலித் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைக்கூட - கடந்த வரவு செலவு திட்டத்தில் கணிசமாகக் குறைந்தார் ப. சிதம்பரம்! நிதியைக் குறைத்துவிட்டு, கூடுதலாக 3 லட்சம் தலித் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப் போவதாகவும் அறிவித்த கட்சி - காங்கிரஸ்!
- ராஜீவ் காந்தி பெயரில் கொண்டு வரப்பட்ட கல்வி உதவித் தொகையையும் 87 கோடியிலிருந்து 79 கோடியாகக் குறைத்த கட்சி - காங்கிரஸ்!
- சாக்கடை எடுத்தல்; மலம் அள்ளுதல் போன்ற சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் இழிவு வேலைகளை செய்வோர் குடும்பத்தின் குழந்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட கல்வி உதவித் தொகையைக் கூட முழுமையாக செலவிடாத கட்சி - காங்கிரஸ்! (ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்டதே 4.38 சதவீதம் தான்! மத்திய தணிக்கைத் துறையே தனது அறிக்கையில் இந்த அவலத்தை சுட்டிக் காட்டியது.)
- பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை உயர் கல்வி நிறுவனங்களில் அமுல்படுத்துவதை பார்ப்பன சக்திகள் எதிர்த்தபோது, மிரட்டலுக்கு பணிந்தது. 27 சதவீதத்தை கூறுபோட்டு படிப்படியாக அமுல்படுத்தவும், அந்த எண்ணிகைக்கேற்ப திறந்த போட்டிக்கான இடங்களை உயர்த்தி, பார்ப்பன சக்திகளை மகிழ்விக்கவும் முன் வந்த கட்சி - காங்கிரஸ்!
- இதற்காக வீரப்ப மொய்லி தலைமையில் குழு ஒன்றையும் அமைத்தார்கள். இந்தக் குழு திட்டத்தை தந்து - அதை படிப்படியாக நிறைவேற்ற தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய பரிந்துரைத்தது. பரிந்துரைத்தும், நிதி ஒதுக்கீடு செய்யாத கட்சி - காங்கிரஸ்!
- தலித் மக்கள் மீது இந்தியா முழுதும் நிகழும் சாதி வெறியாட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் 18 நிமிடங்களுக்கு ஒரு முறை தலித் தாக்கப்படுகிறார். மூன்று நாளுக்கு ஒரு முறை தலித் பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிறார். 3 நாளுக்கு ஒரு முறை 11 தலித்துகள் தாக்கப்படுகிறார்கள். வாரந்தோறும் 13 தலித்துகள் கொல்லப்படுகிறார்கள்; 5 தலித் வீடுகள் எரிக்கப்படுகின்றன.
- பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பெரும் தொழில் நிறுவனங்களுக்கும் சலுகைகளை வாரி வாரி வழங்கிக் கொண்டு தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியையும் ஒதுக்க மறுக்கும் கட்சி - காங்கிரஸ்!
- நடப்பு அய்ந்தாண்டு திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 2,12,431 கோடி. இதில் தலித் மக்களுக்கு சட்டப்படியாக ஒதுக்கப்பட வேண்டியது ரூ. 34,413.82 கோடி. ஆனால், ஒதுக்கியிருப்பதோ ரூ.15,280.18 கோடி மட்டுமே! சுமார் ரூ. 20000 கோடி தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட வேண்டியதை பறித்துவிட்ட கட்சி - காங்கிரஸ்!
- எல்லாவற்றுக்கும் மேலாக உயர்கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் நியமனங்களில் அட்டவணை சாதியினருக்கு இருந்த இட ஒதுக்கீட்டை பறித்து விட்ட கட்சி - காங்கிரஸ்!

  அய்.அய்.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் - பார்ப்பனர்களின் கோட்டையாகவே இருக்கின்றன. இதில் - குறைந்த எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்டோர் ஆசிரியர்களாக இருப்பதைக்கூட சகிக்க முடியாத இந்நிறுவனங்களின் பார்ப்பன இயக்குனர்களின் கோரிக்கையை ஏற்று, மன்மோகன்சிங் 47 உயர்கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் நியமனங்களில் தாழ்த்தப்பட்டோருக்குள்ள இடஒதுக்கீட்டை ரத்து செய்து விட்டார். இதற்கான மசோதா கடந்த கடைசி நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளில் எவ்வித விவாதங்களும் இல்லாமலே அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டு விட்டது. (நாடாளுமன்றத்தின் முன் மீண்டும் வைக்கப்படவில்லை; ஒரு வேளை விபத்தின் காரணமாக மன்மோகன்சிங் - பிரதமரானால், நாடாளு மன்றத்திலும் நிறைவேற்றிவிடுவார்கள்)
- உயர்கல்வி நிறுவனங்களில் பேராசிரியர் நியமனங்களில் ஏற்கனவே இருந்த தலித் இடஒதுக்கீட்டையும் பறித்த கட்சி - காங்கிரஸ்!

  மத்திய அரசின் இந்த “சாதனைகளைத்தான்” மக்களிடம் பட்டியலிட்டுப் பிரச்சாரம் செய்யப் போகிறதா, தி.மு.க.?

  ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு துணைப் போகும் - சோனியாவின் மத்திய காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளை - “தமிழர் தலைவர்” கி.வீரமணியும், பிரச்சாரம் செய்யப் போகிறாராம்! - வெட்கக்கேடு!

**தமிழர்களே!**

**ஈழத் தமிழர் இனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தாமல் –**

**அதற்கு அனைத்து உதவிகளையும் வாரி வழங்கிக் கொண்டு –**

**தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக நீதியையும் நிறைவேற்றிடாமல் –**

**சிங்களத்துக்கும், பார்ப்பனருக்கும் துணைப் போகும் காங்கிரஸ் கட்சியையும்**

**அதனுடன் கை கோர்த்து வரும் தி.மு.க.வையும்,**

**தேர்தலில் தோற்கடித்து பாடம் புகட்டுவீர்!**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரசை வீழ்த்த, கலைஞர் கருணாநிதி, 1971 இல் இந்திராவுடன் கூட்டணி அமைத்தார்.


- அதே கலைஞர் கருணாநிதியின் ஆட்சியை இந்திராவின் அகில இந்திய காங்கிரஸ் தலைமை தான் கவிழ்த்து, ‘மிசா’வின் கீழ், தி.மு.க.வினரை கைது செய்து, ஓராண்டு சிறையில் அடைத்து, தி.மு.க. ஆட்சி மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி, சர்க்காரியா விசாரணை ஆணையத்தை அமைத்தது. தொடர்ந்து பதவிக்கு வந்த மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சி, இரண்டு ஆண்டுகளில் கவிழ்ந்தவுடன், மீண்டும், காங்கிரசுக்கு நட்புக்கரம் நீட்டினார், கலைஞர் கருணாநிதி. ‘நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சி தருக!’ என்றார். அதே ‘துரோக மரபு’ இன்றும் தொடருகிறது.
- ஈழத் தமிழர் இனப்படுகொலைகளுக்கு காரணமான சிங்கள ராணுவத்துக்கு அனைத்து உதவிகளையும் செய்துவரும் சோனியாவை சொக்கத் தங்கம் என்கிறார்; கலைஞர் கருணாநிதி.
- சோனியா ஆட்சி அமைக்க தமிழர்களின் வாக்குகளைக் கேட்கிறார்;
- முல்லைத் தீவில் - ஒவ்வொரு நாளும் மரண ஓலங்கள்;
- கொத்து கொத்தாய் செத்து மடியும் தமிழர்கள்;
- உணவு இல்லை; மருந்து இல்லை; சிகிச்சை இன்றி - குண்டுவீச்சில் கைகால்களை இழந்தவர்கள் துடிதுடித்துச் சாவும் அவலங்கள்;
- இந்த கொடுமைகளுக்கு, இன அழித்தலுக்கு சிங்கள அரசுக்கு நிதியுதவியும், ஆயுத உதவியும், போர் பயிற்சியும் தரும் சோனியாவின் காங்கிரசு மீண்டும் பதவிக்கு வரவேண்டுமா?
- தமிழக ராமேசுவரம் மீனவர்களை துப்பாக்கியால் சுட்டு, கைது செய்வதையும், படகுகளை தாக்குவதையும், மீனவர் வாழ்வாதார உரிமைகளை நசுக்குவதையும், தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் - சிங்கள கப்பல் படைக்கு இந்தியா ஆயுத உதவி செய்யலாமா? இது பற்றி கவலைப்படாத சோனியாவின் காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வரலாமா?

  தமிழர்களே! தமிழர்களே!
- காங்கிரஸ் பகையையும் அதற்கு துணைப்போகும் தி.மு.க. துரோகத்தையும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடித்து பாடம் புகட்டுவீர்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th April 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஏப்ரல் 16, 2009 புரட்சி 8 முழக்கம் 14 விலை : ரூ.2.50


## கோவை – சென்னையில் கழகத்தினர் கைது

# இராணுவ அலுவலகங்கள் முற்றுகை





*இந்திய ராணுவ அலுவலகங்களை முற்றுகையிடச் சென்ற பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.*

‘இந்திய அரசே போரை நிறுத்து’ என்ற முழக்கத்தோடு ஏப்.13 ஆம் தேதி மாலை சென்னை அண்ணாசாலை மன்றோ சிலை அருகே உள்ள தென் மண்டல ராணுவ அலுவலகத்தை நோக்கி முற்றுகையிடச் சென்ற 300 பெரியார் திராவிடர் கழகத்தினர் கைது செய்யப்பட்டனர். பிற்பகல் 3.30 மணியிலிருந்து காமராசர் சிலை அருகே தோழர்கள் குவியத் தொடங்கினர். புதுவை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமையில் 2 தனிப் பேரந்துகளில் வந்து 150 தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் போராட்டத்துக்கு தலைமையேற்றார். வேலூர் மாவட்டத்திலிருந்து திலீபன் தலைமையிலும் நாகை மாவட்டத்திலிருந்து மகேஷ் தலைமையிலும், கிருஷ்ணகிரியிலிருந்து குமார் தலைமையிலும், பொள்ளாச்சியிலிருந்து கா.சு.நாகராசன் தலைமையில் பெருமளவில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்களும் பங்கேற்றனர். ஈழத் தமிழர் படுகொலைக் காட்சிப் படங்களை ஏந்திக் கொண்டு, இந்திய அரசே போரை நிறுத்து என்ற முழக்கத்தோடு ராணுவ அலுவலகம் நோக்கி புறப்பட்ட தோழர்களை காவல்துறை தடுத்து கைது செய்தது. 350 தோழர்கள் கைது செய்யப் பட்டனர். திருமண மண்டபத்துக்குள் நடந்த கூட்டத்தில் கழகத் தோழர்கள் டேவிட் பெரியார், கீர்த்தி, அருள்தாசு ஆகியோர் எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.





விடுதலை இராசேந்திரன், லோகு. அய்யப்பன், அன்பு தனசேகர் உரையாற்றினர். இரவு 7 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

### கோவையில்...

ஈழத்தில் தமிழர்களை கொன்று குவிக்கும் சிங்கள, இந்திய இராணுவத்தினரைக் கண்டித்து கழகம் சார்பில் 12.4.2009 ஞாயிறு காலை 10 மணியளவில் கோவை அண்ணாசிலை அருகே கூடி இராணுவ அலுவலகம் முன் முற்றுகைப் போராட்டம் நடத்த ஊர்வலமாக சென்ற, குழந்தைகள், பெண்கள் உள்பட 400 பேர் கைது செய்யப்பட்டு, கோவை பால கிருஷ்ணா திருமண மண்டபத்தில் வைத்திருந்து மாலை 4 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமை வகித்தார். தலைமை கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி முன்னிலை வகித்தார், செயற்குழு உறுப்பினர்கள் பொள்ளாச்சி மனோகரன், உடுமலை கருமலையப்பன், மதுரை தமிழ்ப்பித்தன், பொள்ளாச்சி பிரகாசு, திருப்பூர் அங்கக்குமார், கொளத்தூர் டைகர் பாலன், தாராபுரம் குமார் மற்றும் திருப்பூர் மாநகர அமைப்பாளர் சண்முகம், திண்டுக்கல் மாவட்டத் தலைவர் துரை சம்பத், திருப்பூர் இராவணன், அகிலன், பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, சேலம் மாவட்டத் தலைவர் மார்ட்டின், மேட்டூர் முத்துக்குமார், பல்லடம் விஜயன், கோவை கதிரவன், தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் ந.பன்னீர்செல்வம், ஈரோடு மாவட்ட கழக செயலாளர் இராம. இளங்கோவன், தலைவர் நாத்திகஜோதி, சேலம் மாநகர மாவட்டப் பொறுப்பாளர் டேவிட் மற்றும் ஏராளமான மாணவர்களும், பொதுமக்களும் 500க்கும் மேற்பட்டோர் திரளாக பங்கேற்றனர்.



**ஏப்.14 அண்ணல் பிறந்த நாளில் சாதி ஒழிப்புக்கு சூளுரைப்போம்**

## காவல்துறைக்கு கழக சார்பில் பதில் கடிதம்

# காங்கிரசை விமர்சிக்கக்கூடாது என்று கூற காவல்துறைக்கு உரிமை இல்லை

*பெரியார் திராவிடர் கழகம் காங்கிரசை தோற்கடிக்கக் கோரி வெளியிட்டுள்ள பிரச்சாரக் குறுந்தகடு நாட்டில் அதிர்வலைகளை உருவாக்கி யுள்ளது. காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, குறுந்தகட்டை தடை செய்யக் கோரி, தேர்தல் ஆணையத்திடம் மனு தந்தார். தேர்தல் ஆணையம் – இது சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று கூறி, காவல் துறைக்கு அனுப்பிவிட்டது. இந்த நிலையில் குறுந்தகடு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்து, பெரியார் திராவிடர் கழகம் காவல் துறையிடம் அனுமதி கோரியிருந்தது.*

*சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி குமரனுக்கு பதில் அனுப்பிய காவல்துறை – அனுமதி மறுத்திருந்தது. காவல்துறையின் கடிதத்துக்கு கழக சார்பில் பதில் அனுப்பப்பட்டுள்ளது. இரு கடிதங்களும் இங்கே வெளியிடப்படுகின்றன. கழக சார்பில் விரைவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் முயற்சி களில் வழக்கறிஞர் செ. துரைசாமி இறங்கியுள்ளார்.*

**சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி. குமரனுக்கு காவல்துறை அனுப்பிய மறுப்புக் கடிதம்:**

உமது மனுவினை தீவிரமாக பரிசிலனை செய்யப் பட்டது. நீர் வெளியிடும் குறுந்தகட்டினை சென்னை மாநகர காவல் துறையில் உள்ள நுண்ணறிவு பிரிவில் தணிக்கை உட்படுத்தவும். மேலும் என்னுடைய ஆய்வுக்கும் ஒரு குறுந்தகட்டினை சமர்ப்பிக்கும்படி பார்வை இரண்டில் உள்ள குறிப்பாணையை உமக்கு சார்பு செய்ய, அதனை நீர் 8.1.2009 ஆம் தேதி பெற்றுக் கொண்டு அன்றைய தினமே மாலை 5 மணிக்கு எம்மிடம் நேரில் ஆஜராகி நீர் வெளியிட போகும் குறுந்தகடு ஒன்றினை என்னிடம் ஆய்வுக்கு சமர்ப்பித்தீர்.

அந்த குறுந்தகட்டினை ஆய்வு செய்ததில், முறைப்படி தணிக்கைத் துறையிடமிருந்தோ அல்லது தேர்தல் ஆணையத்திடமிருந்தோ அனுமதி பெறப்படவில்லை. மேலும் நீர் சமர்ப்பித்துள்ள குறுந்தகட்டில் விடுதலைப்புலிகளை பற்றியும், காங்கிரஸ் கட்சியினரை தாக்கியும் இன உணர்வைத் தூண்டுகின்ற வகையில் விவரங்கள் இருப்பதாக தெரிய வருகிறது. உமது மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. கொளத்தூர் மணி என்பவர் தடை செய்யப் பட்ட விடுதலை புலி இயக்கத்திற்கு ஆதரவாகவும் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராக பேசியதாகவும் அவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட்டு வழக்கை சந்தித்து வருகிறார். மேலும் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன் ஆகியோர்கள் கலந்துக் கொள்ளும் பொதுக் கூட்டங்களில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக பேசக் கூடியவர்கள் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுகின்ற சூழ்நிலையில் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக பேசக்கூடிய நபர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கும் முறையான அனுமதி இல்லாத குறுந்தகடு வெளியீட்டு நிகழ்ச்சிக்கும் அனுமதி அளித்தால் சட்டம், ஒழுங்கு சீர்குலைய வாய்ப்புள்ளது. ஆகவே ஏன் உமது கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்படக் கூடாது என்பதற்கான உமது விளக்கத்தினை 9.4.2009 ஆம் தேதி காலை 10 மணிக்குள் எழுத்து மூலமாக பதில் அளிக்கும்படி உமக்கு அறிவிக்கப்படுகிறது.

**காவல்துறைக்கு கழக சார்பில் தபசி. குமரன் அனுப்பிய பதில் கடிதம்**

தங்களின் 8.4.2009 தேதியிட்ட காவல் நோட்டீஸ் கிடைக்கப் பெற்றேன். என்னுடைய 5.4.2009 தேதியிட்ட கடிதத்தில் வரும் 10.4.2009 அன்று முத்துரங்கன் சாலையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில், "இலங்கையில் தமிழர்கள் தினம் தினம் படுகொலை - இனி என்ன செய்யப் போகிறோம்" என்ற குறுந்தகடு வெளியீட்டு நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்டிருந்தேன் அதன் தொடர்பாக 6.4.2009 தேதியன்று வெளியிடவிருக்கும் ஒரு குறுந்தகடு ஆய்வுக்காக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டீர்கள். அதன்படி ஒரு குறுந்தகடு தங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிறகு 8.4.2009 தேதியிட்ட கடிதத்தில் மேற்படி குறுந் தகட்டினை ஆய்வு செய்கையில் அது முறைப்படி தணிக்கை துறையிடமிருந்து தணிக்கை செய்யப் படவோ, தேர்தல் ஆணையத்திடமிருந்தோ அனுமதி பெறவோ இல்லை என்பதாலும் மேற்படி குறுந்தகட்டில் விடுதலைப்புலிகளைப் பற்றியும் காங்கிரஸ் கட்சியை தாக்கியும் இன உணர்வைத் தூண்டும் வகையிலும் விவரங்கள் இருப்பதாக தெரிய வருவதாலும் மற்றும் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன் மற்றும் கோவை இராமகிருஷ்ணன் ஆகியோர் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசு பவர்கள் என்பதாலும் நிகழ்ச்சிக்கு அனுமதி ஏன் மறுக்கப்படக் கூடாது என விளக்கம் கேட்கப் பட்டதற்கிணங்க கீழ்க்கண்ட விளக்கம் அளிக்கப் படுகிறது:

உங்களது விளக்கம் கோரல் கடிதத்தைப் படித்தால் நீங்கள் எங்களது குறுந்தகட்டினை பார்க்கவில்லை என்பது புலனாகிறது. உங்கள் கடிதத்திலேயே "எனத் தெரிய வருகிறது" எனக் குறிப்பிட்டதிலிருந்து நீங்கள் அந்த குறுந்தகட்டினை பார்வையிடவில்லை. யாரோ அதனை ஆய்வு செய்து, தங்களிடம் கூற அதனை செவி வழியாகக் கேட்டு பொத்தாம் பொதுவாக தெரிய வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

முதலாவதாக குறுந்தகடு தயாரிப்புக்கு தணிக்கை துறையிடமிருந்தோ அல்லது தேர்தல் ஆணையத் திடமிருந்தோ எந்த அனுமதியும் தேவையில்லை. Cinematograph Act, 1952-ன்படி சினிமா படத்திற்கு மட்டும்தான் தணிக்கைத் துறையிடம் அனுமதி பெற வேண்டும். குறுந்தகடு வெளியிட எந்தச் சட்டத்திலும் யாரிடமும் அனுமதி வாங்க வேண்டியதில்லை. அந்த குறுந்தகட்டில் சட்டத்திற்கு புறம்பாக சங்கதிகள் இருந்தால் மட்டுமே காவல் துறை நடவடிக்கை எடுக்கலாம். மேற்படி குறுந்தகடு வெளியிடுவதற்கும் தேர்தல் ஆணையத்திற்கும் என்ன சம்பந்தம். எந்தச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணையத் திடம் நான் அனுமதி வாங்குவது, எதற்காக நான் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரவேண்டும்.

சட்டத்தை சரிவர ஆராயாமல் நீங்கள் என்னிடம் விளக்கம் கேட்டுள்ளீர்கள். தந்தை பெரியார் தான் சொல்வார், "வழியில் ஒரு மொட்டைத் தலையன் சென்று கொண்டிருந்தான், அந்த வழியில் ஒரு சுங்கச்சாவடி இருந்தது. மொட்டைத் தலையனுக்கு சந்தேகம் வந்தது. மொட்டைத் தலைக்கு சுங்கம் கட்ட வேண்டுமோ என்று, சுங்கம் வசூலிப்பவனி டம் சென்று மொட்டைத் தலைக்கு சுங்கம் உண்டா என்று கேட்டான். அவனோ கிடைப்பதை ஏன் விட வேண்டும் என்று வெய்யடா கால்ப்பணம் என்றான்" என்பார். அதுபோல் உள்ளது உங்கள் கூற்று.

தணிக்கை துறைக்கோ, தேர்தல் ஆணையத் திற்கோ குறுந்தகடு வெளியிட அனுமதி தர அதிகாரம் இல்லை. அதனால் அவர்களிடத்தில் நான் அனுமதி வாங்க வேண்டியதில்லை.

குறுந்தகட்டில் விடுதலைப்புலிகள் பற்றியும் காங்கிரஸ் கட்சியினரை தாக்கியும் இன உணர்வைத் தூண்டுகின்ற வகையிலும் விவரங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள்.

குறுந்தகட்டில் விடுதலைப்புலிகள் பற்றி எதுவும் கிடையாது. அத்துணையும் ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் செய்யும் அட்டூழியங்கள் மட்டுமே உள்ளது.

ஈழத் தமிழர்கள் பற்றி பேசினாலே அது விடுதலைப்புலிகள் பற்றியதாகுமா? கொஞ்சம்கூட அதை ஊன்றிப் பார்க்க மாட்டீர்களா? The Unlawful Activities (Prevention) Act 1967 என்ற சட்டத்தின்படி விடுதலைப்புலிகளை பேச்சளவில் ஆதரிப்பதாலோ அவர்கள் புகழ் பாடினாலோ குற்றம் கிடையாது. விடுதலைப்புலிகள் ஏதாவது சட்டவிரோதமான காரியத்தை இந்தியாவில் செய்தால் அந்த சட்ட விரோத செயலுக்கு துணை போனால் மட்டும் தான் குற்றம். அதனால் விடுதலைப்புலிகள் பற்றி செய்திகள் அந்த குறுந்தகட்டில் இருந்தாலும் அது சட்டப்படி குற்றம் அல்ல. ஏனென்றால் இந்த குறுந்தகட்டில் விடுதலைப்புலிகளின் சட்டவிரோத செயலுக்கு ஆதரவு தருவதாக எங்கும் கிடையாது.

இரண்டாவதாக "காங்கிரஸ் கட்சியை தாக்கியும்" எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆமாம். இந்த குறுந் தகடே காங்கிரஸ் கட்சியை விமர்சிப்பதற்காகத்தான் வெளியிடப்படுகிறது. காங்கிரஸ் கட்சிதான் ஈழத் தமிழர்களுக்கு எதிராக போர் நடத்துகிறார்கள். ஈழத்தில் தமிழர்கள் செத்து மடிவதற்குக் காரணமே காங்கிரஸ் கட்சிதான் என்பதை விளக்குவதற்கே இந்த குறுந்தகடு வெளியிடப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியை விமர்சித்து ஏன் குறுந்தகடு வெளியிடக் கூடாது? காங்கிரஸ் கட்சியை தாக்கிப் பேசக் கூடாது என்றோ, குறுந்தகடு வெளியிடக் கூடா என்றோ சட்டமேதுமில்லை. அப்படி இருந்தால் எங்களுக்கு சுட்டிக் காட்டுங்கள். நாங்கள் குறுந்தகடு வெளியிடுவதை தவிர்த்து விடுகிறோம். காங்கிரஸ் கட்சியை விமர்சிக்கக் கூடாது என்று கூற தங்களுக்கு அதிகாரமில்லை. எனவே காங்கிரஸ் கட்சியை விமர்சித்து தாக்கி வெளிவரும் குறுந் தகட்டை வெளியிடக் கூடாது என கூறுவதற்கு தங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

அடுத்து இன உணர்வைத் தூண்டுகிற வகையில் உள்ளதாகக் கூறியுள்ளீர்கள். ஆனால் அதில் எந்த இன உணர்வை தூண்டிவிடுகிறோம். அது எந்த சட்டப்படி தவறானது என்று எந்த விளக்கமும் இல்லை. அந்த குறுந்தகடு தமிழ் இன உணர்வை ஒற்றுமையைத் தூண்டுவதாகத்தான் உள்ளது. அது எந்த சட்டப்படியும் குற்றமாகாது.

அடுத்து திருவாளர்கள் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், கோவை இராம கிருட்டிணன் ஆகியோர் விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசுபவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆமாம் அது உண்மைதான், ஆனால் அதில் என்ன தப்பு. விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசுவது சட்டிப்படி குற்றமாகாது. விடுதலைப்புலிகள் இந்தியாவில் ஏதேனும் சட்டவிரோதமான காரியத் தில் ஈடுபடும் போது அந்த சட்டவிரோதமான காரியத்திற்கு துணை புரிந்தால் மட்டுமே குற்றமாகும். சட்டத்தை சரி வர ஆராய்ந்து எனது மனுவின் மீது உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது The Unlawful Activities (Prevention) Act 1967 படி குற்றமாகாது என உச்சநீதிமன்றமே தீர்ப்புக் கூறியுள்ளதையும் தங்களின் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

மேற்படி நபர்கள் பொதுவாக விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசுவார்கள் என்றும், அதனால் பொதுத் தேர்தல் நடக்கும் இந்த நேரத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கும் எனவும் கூறியுள்ளீர்கள். அரசியலமைப்பு சட்ட விதிகளின்படி மேற்படி காரணத்திற்காக பேச்சுரிமையை தடுக்க தங்களுக்கு அதிகாரம் இல்லை. சட்டப்படி தாங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டுமே தவிர கூட்டம் நடத்தக்கூடாது என அறிவிப்பதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லை.

எனவே என்னுடைய இந்த விளக்கத்தினை ஏற்றுக் கொண்டு, 10.04.2009 நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு வழங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## ப.சி.யின் 'பல்டி'

*சிவகங்கை தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து வரும் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், இந்தியா தொடர்ந்து தந்து வந்த அழுத்தத்தின் காரணமாகவே போர் நிறுத்தம் ஏற்பட் டுள்ளதாக பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டிருக்கிறார். இதே சிதம்பரம், கடந்த பிப்.15 ஆம் தேதி மயிலை மாங்கொல்லையில் நடந்த கூட்டத்தில் பேசியது மறந்துவிட்டதா?*

*"விடுதலைப்புலிகள் ஆயுதத்தை கீழே போடட்டும்; பிறகு வேண்டுமானால் போர் நிறுத்தம் செய்ய முயற்சிக்கலாம்" – என்று ஆணவத்தோடு பேசியவர் இதே சிதம்பரம் தான். இப்போது – 'காக்காய் உட்கார பணம் பழம்' விழுந்ததைப்போல் உலக நாடுகள் நிர்ப்பந்தத்துக்கு ராஜபக்சே நடத்த முன் வந்துள்ள நாடகத்தை, தமது சாதனையாக்கி, வாக்காளர்களை ஏமாற்றத் துடிக்கிறார்.*

*இந்தியாவின் துரோகத்தை தமிழர்களிடம் மறைக்க முடியாது!*

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி

# “தேர்தலில் யார் தோற்கடிக்கப்படவேண்டும் என்பதற்கே முன்னுரிமை தருகிறோம்”

*கழகத்தின் தேர்தல் நிலைப்பாடு குறித்து ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ (16.4.2009) இதழுக்கு கழகத் தலைவர் கொளத்தூர்மணி அளித்த பேட்டி:*

**‘ராஜீவ் காந்தி கொலையை மரணதண்டனை என நியாயப்படுத்திப் பேசினால் அரசு வேடிக்கைப் பார்க்குமா?’ என உங்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்ததை கலைஞர் நியாயப்படுத்தியிருக்கிறார். அதில் என்ன தவறு?**

“ராஜீவ் கொலையைப் பற்றி நான் பேசினால் மட்டும்தான் அரசுக்கு ஆத்திரம் வரும்போல் தோன்றுகிறது. ராஜீவ் காந்தி கொலையைப் பற்றி சுப்பிரமணியன் சுவாமி ஒரு நூலே எழுதியிருக்கிறாரே. உங்கள் இதழுக்கு அவர் பிப்ரவரி மாத இறுதியில் அளித்த பேட்டியில்கூட, ராஜீவ் கொலைக்கு சோனியா, அவருடைய தாயார், அர்ஜுன்சிங், மார்க்கரெட் ஆல்வா ஆகியோர்தான் காரணம் என்றும், சோனியா பணம் கொடுத்து விடுதலைப்புலிகளைப் பயன்படுத்தி இந்த கொலையைச் செய்ய வைத்தார் என்றும் கூறியுள்ளாரே, அதைப் பார்த்துக் கொண்டு கலைஞர் ஏன் உப்புக்கண்டம் பறி கொடுத்த பாப்பாத்தி போல் கள்ள மவுனம் சாதிக்கிறார்?”

**இயக்குநர் சீமான், நாஞ்சில் சம்பத் ஆகியோரின் கைதுகளுக்குச் சொல்லும் காரணங்கள் சரியில்லை என்கிறீர்களா?**

“காவிரி நீர் சிக்கலை, முல்லைப் பெரியாறு, ஒகேனக்கல் சிக்கல்களைத் தீர்க்க வக்கில்லாத வேசி மக்கள் என்று சீமான் பேசியதுதான் அவர் கைதுக்குக் காரணம் என்றார்கள். இந்த தேசத்தின் பாதுகாப்புக்கு அவர் பேச்சால் என்ன கேடு வந்து விட்டது? வேண்டுமானால் அவதூறான பேச்சு என்ற பிரிவின் கீழ் வழக்குத் தொடர்ந்திருக்கலாம். பெரியாரின் விரல் பிடித்து நடை பயின்ற கலைஞருக்கு ‘வேசி மகன்’ என்ற சொல் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யும் அளவுக்கு இழிவானது, கேவலமானது என்று தோன்றுமேயானால், இதே பொருள் கொண்ட ‘சூத்திரன்’ என்ற சொல் இந்து மதத்தின் 97 விழுக்காடு மக்களைக் குறிக்கும், சட்ட அங்கீகாரம் பெற்ற சொல்லாகத் தொடர்கிறதே? அதை நீக்க சிறு முயற்சியையாவது கலைஞர் செய்திருக்கிறாரா? அப்புறம் ஏன் பெரியார் ஆட்சி? அண்ணா ஆட்சி?

**போகிற போக்கைப் பார்த்தால் பெரியாரையும் அண்ணாவையும் கலைஞர் எதிர்க்கிறார் என்று கூட சொல்வீர்கள் போலிருக்கிறதே?**


எதிர்க்கிறார் என்று சொல்ல வரவில்லை. அவர்கள் இருவரையும் சற்று ஒதுக்கி வைத்து, தனது ஆட்சியை, முழு குத்தகைக் காலத்துக்கும் காப்பாற்ற வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுகிறார் என்று சொல்ல வருகிறேன்.

**வீரமணியோடு கலைஞர் நெருக்கமாக இருப்பதுதான் அவர் மீதான உங்கள் கோபத்துக்குக் காரணமா?**

மன்னிக்க வேண்டும். பெரியார் தி.க.வோ, அல்லது அதன் முன்னணித் தோழர்களான நாங்களோ தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு அடிப்படையில் இயங்குபவர்கள் அல்லர். எங்கள் அமைப்பின் மூத்த தலைவர்களான திருவாரூர் தங்கராசு, ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் செ. துரைசாமி போன்றோர் சிறிது நெகிழ்ந்து கொடுத்திருந்தால் அவர்கள் இருக்க வேண்டிய இடங்களே வேறு. நாங்கள் கலைஞரிடமோ, வேறு எவரிடமோ எப்போதுமே எதையும் எதிர்பார்ப்பவர்கள் அல்லர். எங்கள் ஆதரவும் எதிர்ப்பும் கொள்கை அடிப்படையிலும் அவர்களின் செயல்பாட்டை ஒட்டியும்தான் இருக்கும்.

**‘ஒன்றுபட்டு நிற்காமல் போராளிக் குழுக்களுக்குள் நடந்த சகோதர யுத்தமும், பிரபாகரனின் சர்வாதிகாரப் போக்கம்தான் தமிழீழம் மலர்வதை தள்ளிப் போட்டுவிட்டது’ என கலைஞர் சொல்வதில் உண்மை இருக்கத்தானே செய்கிறது?**

சகோதர யுத்தம் என்ற வார்த்தையை எல்லா பொது நிகழ்ச்சியிலும் கலைஞர் சொல்வது வாடிக்கையாகிவிட்டது. சகோதர யுத்தத்தில் கொல்லப்பட்டதாக கலைஞர் சொல்லும் சிறீசபாரத்தினத்தின் டெலோ இயக்கத்தில் அவரோடு நின்று ஆயுதம் தாங்கிப் போராடிய போராளிகளான செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா பத்மநாபனின் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கப் போராளித் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், அமிர்தலிங்கத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியின் சம்பந்தம் ஆகியோர் புலிகள் தலைமையில், வழி காட்டலில் இயங்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனரே.



கடந்த கால நிகழ்வுகள் குறித்து அவர்களுக்குள் மன வருத்தம் இல்லாமல் இருக்காது. என்றாலும் இன்றையச் சூழலில் ஈழத் தமிழர்களின் உயிர்களை, உடைமைகளை, உரிமைகளை வென்றெடுக்கும் ஒரே பாதுகாப்பு அரண்புலிகள் என உணர்ந்து இணைந்து செயல்படுகின்றனர். அதே நேரத்தில் இங்கு ‘சகோதர யுத்தம்’ என்ற ஒப்பாரியை அவர் ஓயாமல் பாடிக் கொண்டிருப்பது ஈழத் தமிழர்கள் மீதுள்ள அக்கறையினாலா? அல்லது புலிகள் மீதுள்ள தனிப்பட்ட வெறுப்பினாலா? என சிந்திக்க வேண்டும்.

**சர்வாதிகார சிந்தனை உள்ளவர் பிரபாகரன் என கலைஞர் கூறுவது கூட தவறா என்ன?**

1984 இல் எனக் கருதுகிறேன். ஃபிரண்ட்லைன் இதழுக்கு பேட்டியளித்த பிரபாகரன், ‘விடுதலைக்குப் பின் தமிழீழம், யூகோஸ்லாவியாவின் ஆட்சிமுறை போன்ற ஒற்றைக் கட்சி ஆட்சி முறையாக இருக்கும்’ என்று சொன்னார். யூகோஸ்லாவியாவை அவர் சுட்டிக்காட்டியதற்குக்காரணம் பொதுவுடைமை இயக்கத்தவரான அந்நாட்டு அதிபர் டிட்டோ, ரஷ்ய அணியில் தன்னை இணைத்துக் கொள்ளாமல் அணி சேரா நாடுகள் அமைப்பில் நின்று நடுநிலை பேசிய அமைதி விரும்பி.

‘ஒற்றைக் கட்சி ஆட்சி முறை என்றால் அது சர்வாதிகாரம் என்று தானே பொருள்?’ என அறிக்கை விட்ட கலைஞர், ‘நான் என் வாழ்நாளில் சந்திக்க விரும்பும் மாமனிதர் கியூபாவின் ஃபிடல் காஸ்ட்ரோ’ என்று கூறியிருக்கிறார். இன்று கியூபாவில் நடப்பதும் ஒற்றைக் கட்சி ஆட்சி முறை தானே? இளைஞரணி மாநாட்டை ஒட்டி கடிதங்கள் வாயிலாக தொடர்ந்து தி.மு.க. இளைஞரணியினருக்கு லெனின், மாவோ, ஸ்டாலின் என பல தலைவர்களை நீங்கள் அறிமுகப்படுத்தினீர்களே! அவர்களெல்லாம் ஒற்றைக் கட்சி ஆட்சி முறையை நடத்தியவர்கள்தான். போராட்டம் நிகழும் வேளையில் விதிக்கும் சில கட்டுப்பாடுகளுக்காகவே பிரபாகரனை சர்வாதிகாரி என்று சொல்ல முடியுமானால், பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பு, பேச்சுக்களுக்கு தேசிய பாதுகாப்புச் சட்டம், இருநூறு வழக்கறிஞர்கள் மண்டை உடைப்பு இதைச் செய்ததற்காக கலைஞரை என்ன பெயரால் அழைக்கலாம்? நீங்களே சொல்லுங்கள்.

**1987 ராஜீவ்– ஜெயவர்த்தனே ஒப்பந்த அடிப்படையில் தீர்வு காணலாம் என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். அது சரியானது தானே?**

இந்த ஒப்பந்தத்தைப் பற்றி இந்த யோக்கியர்கள் ஏன் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாகப் பேசவில்லை? ஒப்பந்தத்தில், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர்கள் பகுதி ஒரே ஆட்சிப் பகுதியாக மாற்றப்படும் என இருந்தது. ஆனால், இந்தச் சிறிய நடவடிக்கையைக்கூட இலங்கை உச்சநீதிமன்றம் சட்டவிரோதம் என்று தீர்ப்புக் கூறியது. அதற்கு எதிராக இந்திய - தமிழக அரசுகள் எடுத்த முயற்சிகள் என்ன?

**‘இந்தியாவின் நலனுக்கு எதிராக எந்த ஒரு நாடும் இந்தியாவின் அனுமதியின்றி இலங்கையில் கால்பதிக்கக் கூடாது’ என அந்த ஒப்பந்தம் சொல்கிறது. ஆனால், தற்போது அம்பாந்தோட்டை துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற சீன, ஜப்பானிய நிறுவனங்களும், மன்னாரில் பெட்ரோலிய ஆய்வுப் பணி என சீன நிறுவனமும் அங்கு உள்ளன. பாகிஸ்தானின் ராணுவத் தளபதிகளும் அங்கு உள்ளனர். இதற்கெல்லாம் இந்திய அரசு எடுத்த எதிர் நடவடிக்கை என்ன?**

நமது பகை நாடான பாகிஸ்தான்கூட, எல்லை தாண்டிப் போகும் இந்திய மீனவர்களை இதுவரை சுட்டதில்லை. ஆனால், இலங்கையோ அன்றாடம் தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்கிறதே.... இதற்குக் கண்டன அறிக்கையைக்கூட மத்திய அரசு வெளியிடவில்லையே?”

**காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசின் மீதான உங்கள் கோபம் சரியானது என வைத்துக் கொண்டாலும், அதற்காக தி.மு.க.வையும் எதிர்த்து இந்தத் தேர்தலில் எதிர்ப்புப் பிரசாரம் செய்ய உங்கள் இயக்கம் திட்டமிட்டுள்ளதாமே? அது சரியா?**

தமிழீழப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்தே இந்தத் தேர்தல் நிலைபாட்டை எடுத்துள்ளோம். பெரியார் காலத்திலிருந்தே திராவிடர் கழகம் தேர்தலில் யார் வெல்ல வேண்டும் என்பதைவிட யார் வந்துவிடக் கூடாது என்பதில்தான் கூடுதல் கவனம் செலுத்தும் என்பது நாடறிந்த உண்மை. அந்த அடிப்படையில் தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் அனைத்து வழிகளிலும் போராடியும் கூட, ‘இலங்கை அரசே போரை நிறுத்து’ என மத்திய அரசு நேரிடையாகச் சொல்லவில்லையே. மத்திய அரசைத் தலைமையேற்று நடத்தும் காங்கிரசுக்கும், மத்திய அரசின் செயல்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் எதிரானதுதான் எங்களின் இந்தத் தேர்தல் நிலைப்பாடு.

**அதற்காக அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்கச் சொல்கிறீர்களாமே?**

தமிழர் விரோத காங்கிரஸ், தமிழ் மண்ணை விட்டு அடையாளம் இல்லாமல் அகற்றப்பட வேண்டும். எனவே, காங்கிரசைத் தோற்கடிக்கவேண்டுமெனில் அதற்கு இணையான வலுவுள்ள எதிர் வேட்பாளருக்கு வாக்களிப்பதே சரி எனக் கருதுகிறோம்.

**ஜெயலலிதா எப்போதுமே புலிகளுக்கு எதிராக இருப்பவர். தேர்தலுக்காக ஈழ ஆதரவு வேஷம் போடுகிறார் என்ற பேச்சு உண்டே?**

உண்மைதான். விடுதலைப்புலிகளை கண்ணை மூடிக் கொண்டு எதிர்ப்பவர் ஜெயலலிதா. எதிர்காலத்தில் அவர் எப்படியிருப்பார் என்றும் சொல்ல முடியாது. ஆனால், தேர்தலுக்காகவாவது தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கு இணக்கமாக - வேஷத்துக்காகவாவது ‘தனி ஈழம்’ என்று பேசுகிறார். ஆனால், நடிப்புக்காகக்கூட புலிகளை விமர்சித்துப் பேசுவதை நிறுத்தாத கலைஞரையும், தேர்தலுக்காகக்கூட போர் நிறுத்தத்தை வலியுறுத்தாத காங்கிரசையும் அவருடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இந்தத் தேர்தல் வெற்றியால் ஏற்படும் ஆட்சி மாற்றம் ஈழத் தமிழர்களின் எல்லா உரிமைகளையும் மீட்டுக் கொடுத்துவிடும் என்று நாங்கள் நம்பவில்லை. ஆனால், ‘கருப்பனைக் கட்டி வைத்து அடிக்கிற அடியில், வேலன் வேலியை முறித்துக் கொண்டு ஓட வேண்டும்’ என நாட்டுப்புற சொலவடை உண்டு. அதுபோல இந்தத் தேர்தலில் காங்கிரசுக்கு விழுகின்ற அடி, தமிழின உணர்வுகளை மதிக்காத எல்லோருக்கும் நல்ல புத்தி கற்பிக்கும் என்றே கருதுகிறோம். மேலும் நாங்கள் அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள் எனக் கோரவில்லை. எங்களுக்கு காங்கிரசை ஒழிப்பதுதான் நோக்கமே தவிர, மற்றவர்களை ஆதரிப்பது என்பது அல்ல.

**உங்கள் அமைப்பு மூலம் ஒரு குறுந்தகடு வெளியிட்டீர்களாமே? அந்த சி.டி.யையும், உங்கள் இயக்கத்தையும் தடை செய்யுமாறு தங்கபாலுவும், பீட்டர் அல்போன்ஸும் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் முறையிட்டதாகச் செய்திகள் வந்ததே?**

தங்கபாலு சரி. பீட்டர் அல்போன்ஸ் எப்படி உடன் போனார் என்று தெரியவில்லை. அவர் கொஞ்சம் விவரமானவர் என்று இதுவரை எண்ணியிருந்தோம். இந்தக் குறுந்தகடு குறித்து எங்களால் போதிய அளவு விளம்பரப்படுத்த இயலாமலிருந்தது. அந்த இலவச விளம்பரத்திற்கு தங்கபாலுவுக்கு நன்றி. ●

# உள்துறைக்கு சவால் விடுகிறது, செருப்பு!

அரசியலில் இப்போது எல்லா சின்னத்தையும் பின்னுக்கு தள்ளி விட்டு - ஒரு சின்னம் மட்டும் வலிமையாகி விட்டது. அதுதான் செருப்பு. 'பதாகை' என்ற செந்தமிழ்ச் சொல்லும் அதற்கு உண்டு.

இராமாயண 'ராமனி'ன் செருப்பு அவன் வனவாசம் இருந்த 14 ஆண்டு காலம் முழுதும் 'பாரததேசத்தை' "நல்லாட்சி" செய்ததாகவும், அந்த 'செருப்பை' பாரத குடிமக்கள் அரசனாக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சிக் கூத்தாடியதாகவும், இராமாயணம் தமிழர்களின் காதில் பூ சுற்றிக் கொண்டிருக்கிறது.

1971 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடந்த காலத்தில், சேலத்தில் பெரியார் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் அதே 'ராமன்' செருப்படிப் பட்டான் என்பது வேறு சேதி! கடந்த வாரம் - உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், டெல்லியில், தமது கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்தபோது, சீக்கிய பத்திரிகையாளர் ஒருவர், திடீரென கோபமடைந்து, தனது செருப்பை கழற்றி ப.சிதம்பரம் மீது வீசினார். செருப்பு என்று போட்டால் அது மரியாதைக் குறைவாகிவிடும் என்பதால், பத்திரிகைகள் அதற்கு பதிலாக 'ஷூ' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, அதன் மூலமாவது ப. சிதம்பரத்துக்கு சற்று மரியாதை கூட்டலாம் என்று முயற்சித்தன.

இந்த நிலையில், இந்தியாவின் பிரதமர் வேட்பாளராக பாரதிய ஜனதா கட்சியால் அறிவிக்கப் பட்டுள்ள அத்வானி, கடந்த ஞாயிற்றுக்கிழமை கோவை விமான நிலையம் வந்தபோது, அவரை பார்க்கச் சென்ற பத்திரிகையாளர்கள் மற்றும் பா.ஜ.க.வினர், செருப்பு அணிந்து போவதற்கு, காவல்துறை தடை விதித்துள்ளதாம். பாதுகாப்புக் கருதி, இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை காவல்துறை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. அத்வானி - அப்படியெல்லாம் செருப்புக்கு அஞ்சுகிறவர் அல்ல; 'ராமன்' கோயில் கட்டும் யாத்திரையில், 'ராமன் செருப்பு' என்று ஒரு 'செருப்பை' தூக்கிக் கொண்டு ஊர்வலம் நடத்திய அனுபவங்களுக்கு அவர் சொந்தக்காரர். ஆனாலும், எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் யாருக்கு தெரியும் என்பதால் காவல்துறை இப்படி அதிரடி தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கியிருக்கக் கூடும். தமிழக காவல் துறையின் 'பெருமை'களை சொல்லவா வேண்டும்; அதுதான் உச்சநீதிமன்றம் வரை போய் நிற்கிறதே!

செருப்புக்கு பதிலாக - இனி சட்டைகளையோ வேட்டி அல்லது பேண்டுகளையோ கழற்றி, தங்களின் "அன்பான எதிரிகள்" மீது- இனி எவரும் வீசி விடக் கூடாது என்று நாம் கவலைப்படுகிறோம். இனிமேல் தலைவர்களை வரவேற்க வருகிறவர்கள் செருப்பு மட்டுமல்ல, வேட்டி - சட்டை - பேண்ட் அணியாமல் வரவேண்டும் என்ற அறிவிப்புகளை நமது 'சிறப்பு மிக்க' காவல்துறை வெளியிட நேர்ந் தால், இந்திய ஜனநாயகத்தின் நிலை இன்னும் கேவலமாகிவிடுமே என்ற கவலைதான் நம்மை வாட்டுகிறது.

இப்போதெல்லாம் எதிர்ப்பு ஆயுதங்கள் எங்கே - எந்த வடிவத்தில் - பதுங்கிக் கொண்டிருக்கிறது என்பதை கண்டுபிடிக்கவே முடியவில்லை சார் என்கிறார்கள், காவல்துறை அதிகாரிகள். உண்மைதான்! வெடிகுண்டு போன்ற ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளார்களா என்பதை சோதனையிட கருவிகள் வந்து விட்டன. இனிமேல், செருப்பை எங்கேயாவது மறைத்து வைத்திருக்கிறார்களா என் பதை கண்டறியக் கூடிய சோதனைக் கருவிகளும், வர வேண்டிய அவசியம் வந்துவிட்டது.

ஆனாலும், ஒலிபெருக்கி முன் மேடையில் ஒருவர் ஏறி ஒரே ஒரு கடுமை யான வார்த்தையைக் கூறி விட் டாலே பிணையில்லாமல் ஓராண்டு சிறை என்கிற அளவுக்கு ஜனநாயகம் கலைஞர் ஆட்சியில் "முதிர்ச்சி" பெற்று நிற்கிறது. அதற்கு முன் இந்த 'செருப்பு' எல்லாம் எம்மாத்திரம் என்று கேட்கிறார், ஒரு தோழர். இதையே மேடையில் ஒலி பெருக்கி யில் உளறி தொலைத்து, சிறைக்குப் போய் விடாதீர்கள் அய்யா!

**– கோடங்குடி மாரிமுத்து**

## 'இந்து' ராம் நடத்தும் ஏடு ஒப்புதல்
# சிங்களப் படைக்கு உளவு சொல்வது, இந்தியா தான்!

தமிழ்நாட்டில் - இலங்கை அரசின் தமிழினப் படுகொலையை ஆதரிப்பதோடு, இலங்கை அதிபர் ராஜபக்சேயுடன் நேரடி தொடர்பு கொண்டு, அவரின் ஊதுகுழலாகவும் இயங்கி வருகிறது, 'இந்து' நாளேடு. அந்த நாளேடு நடத்தும் மாதம் இருமுறை ஆங்கில ஏடு 'பிரன்ட் லைன்', இந்தியா இலங்கைக்கு செய்து வரும் ராணுவ உதவிகளை விவரித்துள்ளது:

"தனது சிறப்பு தூதரை டெல்லிக்கு அனுப்பியமைக்காக, ராஜபக்சேவுக்கு இந்தியா மிகுந்த பாராட்டுகளைத் தெரிவித்து, மகிழ்ச்சி அடைந்துள்ளது. சிறிலங்காவின் 13வது சட்டத் திருத்தத்தின் படி தமிழர் பகுதிகளுக்கு சில கூடுதல் அதிகாரங்களை வழங்கலாம் என்ற யோசனையை இந்தியா பசில் ராஜபக்சேயிடம் முன் வைத்தது.

வடக்குப் பகுதியில் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு, இந்தியா இதுவரை எந்த திட்டவட்டமான கோரிக்கையையும், இலங்கையிடம் முன் வைக்கவில்லை என்றே, சிறீலங்கா பிரச்சினையைக் கவனித்து வருவோர் கூறுகின்றனர். உண்மையில், கொழும்பில் அக்டோபர் இரண்டாவது வாரத்தில் பேட்டி அளித்த பசில் ராஜபக்சே, "விடுதலைப் புலிகளை முற்றாக நசுக்குவதற்கு, இந்தியா எவ்வளவு அதிகம் உதவ முடியுமோ, அந்த அளவு உதவிகளை செய்து வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 800 இலங்கை ராணுவத்தினருக்கு காடுகளில் போராடுவது பற்றியும், போராளிகளை எதிர்கொள்வது பற்றியும் இந்தியா பயிற்சிகளை அளித்து வருகிறது. இந்திய வெளியுறவு அமைச்சகம் கடந்த பிப். 2007-இல் வெளியிட்ட அறிக்கையில், "இலங்கை ராணுவத்துக்கான, பெரும் அளவிலான பயிற்சி இந்தியாவில் வழங்கப்பட்டு வருகிறது" (A major part of training of Srilanka Armed forces is carried out in India) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய கப்பல்படையின் உளவுத் துறை, கடல் பகுதிகளில் உளவு வேலைப் பார்த்து, இலங்கை கப்பல் படைக்கு பல ரகசிய தகவல்களைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. (இந்திய கடல் பகுதியில் ராடார் கருவியை அமைத்துள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அண்மையில் சென்னையில் அளித்த பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளார். அந்த ராடார் கருவி இப்படி உளவு சொல்வதற்குத்தான் பயன்படுகிறது.) இந்திய கப்பல் படை தந்த தகவல்களினால் இலங்கை கப்பல் படை விடுதலைப் புலிகளின் படகுகளையும், கப்பல்களையும் அழித்துள்ளன. அவர்களுக்கு வந்த ஆயுதங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆறு மாதத்திற்கு ஒரு முறை இந்திய கடலோரக் காவல்படை அதிகாரிகளும், இலங்கை கப்பல் படை அதிகாரிகளும் சந்தித்து, இது தொடர்பான அழித்தொழிப்பு நடவடிக்கைகளுக்கு திட்டமிடுகின்றனர்.

இது தவிர, இந்தியாவும், இலங்கையும் 'பாதுகாப்பு கூட்டுறவு உடன்பாடு' ஒன்றை உருவாக்கியுள்ளன. இரு தரப்பினரும் அதில் கையெழுத்திடும் நிலை வந்தபோது, கடைசி நேரத்தில் அய்க்கிய முன்னணி ஆட்சி, கூட்டணிக்கு பாதிப்பு வரக்கூடும் என்பதால், கையெழுத்திடாமல் தள்ளிவைத்துள்ளது. "அரசியல் தீர்வு" என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு, மற்றொரு பக்கத்தில் ராணுவ உதவிகளை வழங்கி வரும் இரட்டை கொள்கையை இந்தியா பின்பற்றி வருகிறது - என்று அந்த ஏட்டில் அதன் செய்தியாளர் ஜான் செரியன் எழுதியுள்ளார்.

- 'பிரன்ட்லைன்' மாதமிருமுறை ஆங்கில ஏட்டில் அதன் செய்தியாளர் ஜான் செரியன் - 21.11.2008

## ஈழத்தில் போரை நிறுத்த 100 பெண்கள் சாகும் வரை பட்டினி போராட்டம்

இந்தியாவே போரை நிறுத்து எனும் முழக்கத்துடன், 'இன அழிப்புக்கான பெண்கள் முன்னணி' என்ற அமைப்பைச் சார்ந்த 100 பெண்கள் சென்னையில், சாகும் வரை பட்டினிப் போராட்டம் தொடங்கியுள்ளனர். பேராசிரியர் சரசுவதி, ஷீலு, வழக்கறிஞர் பாண்டிமாதேவி, அய்விட் இயக்குனர் நீலவள்ளி, பியூலா உள்ளிட்ட 100க்கும் அதிகமான பெண்கள் மறைந்த மாவீரன் முத்துக்குமார் 75வது நினைவு நாளில் அவரது உடல் வைக்கப்பட்டிருந்த கொளத்தூரில் போராட்டத்தைத் தொடங்கினர். அதிர்ச்சியடைந்த காவல்துறை, மாலையுடன் போராட்டத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மிரட்டியது. தொடர்ந்து பெரம்பூரில் உள்ள 'விமன்ஸ் காலக்டிவ்' அலுவலகத்தில் (10, கிழக்கு தெரு, கொளத்தூர், சென்னை) இரண்டாவது நாளாக பட்டினிப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.


**பெரியார் திராவிடர் கழகத்தின் இணைய தளம் "periyardk.org"**

**கழகத்தின் அதிகாரபூர்வ இணைய தளம், அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்.14 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. கழகம் தொடர்பான நிகழ்ச்சிகள் செய்திகளை இந்த இணையதளத்திற்கு வருகை புரிந்து பார்க்கலாம்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th April 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஏப்ரல் 23, 2009 புரட்சி 8 முழக்கம் 15 விலை : ரூ.2.50


## அறிவுரைக் குழுமம் முன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாதிட்டார்

# உள்நோக்கத்துடன் நடந்த கைது

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு, அதற்கான காரணங்களைத் தேடியிருப்பதால், அரசின் இந்தக் கைது ஆணை குழப்பமாக அமைந்துவிட்டது என்று கடந்த 16.4.2009 வியாழனன்று சென்னையில் அறிவுரைக் குழுமத்தின் முன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

தடுப்புக் காவல் சட்டங்களில் கைது செய்யப் பட்டவர்கள் ஓய்வு பெற்ற நீதிபதிகளடங்கிய அறிவுரைக் குழுமத்தின் முன் கைது செய்யப்பட்டு, நான்கு வாரம் கழித்து, தங்கள் தரப்பு நியாயங்களை முறையிட முடியும். அதன்படி மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி - சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்படும் அறிவுரைக் குழுமத்தின் முன் பகல் 1 மணியளவில் நேர் நிறுத்தப்பட்டார். கழகத் தலைவர் வரவிருக்கும் சேதி அறிந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் இளங்கோ, சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் ஏராளமாக திரண்டிருந்தனர்.

வழக்குறைஞர் அல்லாத ஒருவர் வாதிடலாம் என்ற மரபுப்படி, கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், கழகத் தலைவருக்காக நீதிபதிகள் முன் தமது கருத்து களை முன் வைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சுமார் 45 நிமிட நேரம் எழுத்துப்பூர்வமாக தயாரித்து வந்த அறிக்கையை முன் வைத்து பேசினார். நீதிபதிகள் கருத்துகளை உன்னிப்பாகக் கேட்டனர். அறிவுரைக் குழுமங்கள் நீதி வழங்கும் என்று தாம் நம்புவதில்லை என்ற முன்னுரையோடு - அவரது உரை தொடர்ந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுத்துப்பூர்வமாக குழுமத்தில் முன் வைத்த வாதம்:

நான் பார்வை 1, 2-ல் கண்ட ஆணைகளின்படி மதுரை நடுவண் சிறையில் தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் உள்ளவன் ஆவேன்.

நான் பெரியார் திராவிடர் கழகம் என்ற அமைப்பின் தலைவராக கடந்த எட்டு ஆண்டுகளாக இருந்து வருகிறேன்.

தமிழ்நாட்டுத் தமிழர்களின் தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்களைத் திட்டமிட்டு இனப் படுகொலை செய்து வரும் இலங்கை சிங்கள, பவுத்த பேரினவாத இராஜபக்சேயின் இராணுவத்துக்கு - தமிழ்நாட்டுத் தமிழர்களின் அனைத்துத் தரப்பினரும் மேற்கொண்ட அனைத்து வகையிலான போராட் டங்களையும், உணர்வுகளையும் சற்றும் மதிக்காமல் புறந்தள்ளிவிட்டு, தனி மனித விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் - தொடர்ந்து ஆய்தம், நிதி, தொழில்நுட்பம், வல்லுநர் என உதவி வரும் மத்திய அரசின் காங்கிரசை வருகிற நாடாளுமன்ற தேர்தலில் அடையாளம் இல்லாமல் போகும் வண்ணம் தோல்வி அடையச் செய்ய வேண்டும் என்ற முனைப்போடு களப்பணிகளும், கருத்துப் பரப்பல் பணிகளையும், ஒத்த கருத்துள்ள அமைப்புகளை உடன் இணைத்துக் கொண்டு பணியாற்றி வந்தேன்.

மத்திய காங்கிரசு அரசின் தேர்தல் கூட்டாளியான தமிழ்நாட்டு தி.மு.க. அரசு எங்களைப் போன்றோரின் நடவடிக்கைகளை முடக்க வேண்டும் என்ற நோக்கில் போதிய காரணங்கள் இல்லை எனிலும் தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற தடுப்பு காவல் சட்டங் களை பயன்படுத்த தனது அரசு அதிகாரங்களை



தவறாக உபயோகித்து வருவதின் ஒரு செயலே என் மீதான தடுப்புக் காவல் ஆணையாகும். அது குறித்து விளக்கம் அளிக்கவே இன்று உங்கள் முன் நிற்கிறேன்.

சீரங்கம் பெரியார் சிலை உடைப்புக்காக எதிர்வினை ஆற்றிய எங்கள் இயக்கத் தோழர்கள் ஏழு பேர் மீதுதேசிய பாதுகாப்பு சட்டம் பாய்ச்சப்பட்டு, அது தொடர்பாக கடந்த 2007 ஆம் ஆண்டில் எங்கள் தோழர்கள் அப்போதைய அறிவுக் குழுமத்தின் முன் நிறுத்தப்பட்டபோது அத் தடுப்புக் காவல் ஆணை, சட்டப்படி செல்லாது என்பதைச் சுட்டிக்காட்டியும், அறிவுரைக் குழுமம் தலையிட வில்லை என்ற நிகழ்வாலும், மேலும் அரசியல் காரணங்களால் போடப்படும் தடுப்புக் காவல் ஆணைகளின் பொருந்தாமையை சுட்டிக் காட்டினா லும் அறிவுரைக் குழுமம் தலையிடுவதில்லை. உயர்நீதி மன்றமே ஏறத்தாழ எல்லா ஆணைகளையும் இரத்து செய்து வந்துள்ளது. ஆகவே அறிவுரைக் குழுமம் என்ற நடைமுறை குறித்து நான் பொதுவாக நம்பிக்கை வைப்பதில்லை.

எனினும், உங்கள் மூவர் மீதும் உள்ள மரியாதை காரணமாக கீழ்க்கண்ட எனது கருத்துக்களை உங்களின் கனிவான பரிசீலனைக்கும் உரிய நடவடிக்கைகளுக்கும் முன் வைக்க விரும்புகிறேன்.

தகவல் 1-ல் கண்ட தடுப்புக் காவல் ஆணை, அதைப் பிறப்பிக்கக் கோரி திண்டுக்கல் நகர (வடக்கு) காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் அளித்த பிரமாண வாக்குமூலம், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்துள்ள தடுப்புக் காவலுக்கான காரணங்கள் குறித்தும் கூற விரும்புகிறேன்.

ஆய்வாளர், ஈரோடு கருங்கல்பாளையம் வழக்கு, அவரது காவல்நிலைய வழக்கு, திண்டுக்கல் வழக்கு மீதான எனது பிணை மனு 11.3.2009 அன்று விசாரணைக்கு வருதல் ஆகியவற்றை சுட்டிக்காட்டி நான் பிணையில் வந்தால் இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டுக்கும், இறையாண்மைக்கும், குந்தகமான குற்றங்களில் ஈடுபடக் கூடும் என்பதால், தேசிய பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 3(2)-ன் கீழ் தக்க

(2 ஆம் பக்கம்)

## அடக்குமுறைக்கு கிடைத்த முதல் அடி

'மிசா' - 'பொடா' எதிர்ப்பாளர்களாக மனித உரிமைக் காவலர்களாக வேடம் தரித்தவர்களின் உண்மை முகம் இப்போது கிழிந்து தொங்குகிறது.



சீமான் மீது - தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவி, அவரை தேர்தல் பிரச்சாரம் செய்யாமல் தடுத்து விடலாம் என்று திட்டமிட்டு செயல்பட்ட கலைஞர் கருணாநிதியின் திட்டம் இப்போது தவிடுபொடியாகிவிட்டது.

சீமான் மீது போடப்பட்ட 'தேசிய பாதுகாப்புச் சட்டத்தை' சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது; தி.மு.க. ஆட்சியின் முகத்தில் பூசப்பட்ட கரியாகும்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் எலிப்தர்மராவ் - சி.டி.செல்வம் ஆகியோர் வழங்கியுள்ள தீர்ப்பில் - ஒரு கூட்டத்தில் பேசுவதாலேயே சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, நாட்டின் இறையாண்மை குலைந்து போய்விடும் என்று கூற முடியாது என்று, ஏற்கனவே உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பை மீண்டும் எடுத்துக் காட்டியுள்ளனர். சீமான் பேசியதற்குப் பிறகு - அதன் தொடர்ச்சியாக பொது ஒழுங்கு சீர்குலையும்படி எந்த நிகழ்வும் நடந்துவிடவில்லை என்பதையும் நீதிபதிகள் சுட்டிக் காட்டினர்.

இவை எல்லாம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு தெரியாதது அல்ல.

ஒரு சம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறோம். விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன், சிங்கள ராணுவத்தால் குறி வைத்து கொல்லப்பட்டபோது, அவருக்காக, முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி ஒரு இரங்கற் கவிதை எழுதினார். தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரிக்கலாமா, என்று வழக்கம் போல் ஜெயலலிதா சட்டசபையில் எதிர்த்தார். இது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது என்றார் ஜெயலலிதா. அப்போது, சட்டசபையில் உச்சநீதிமன்றம் தடைசெய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது தவறல்ல என்று தான் தீர்ப்பு வழங்கியுள்ளது என்று கலைஞர் கருணாநிதி எடுத்துக் கூறியது மட்டுமல்ல, சட்டசபைக்கு தவறான தகவல் தந்ததாக ஜெயலலிதா மீது உரிமை மீறல் பிரச்சினையும் கொண்டு வரப்பட்டது. அடுத்த நாள் 'முரசொலி' ஏட்டில் (ஏப்.19 2008) உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையே எடுத்துக்காட்டி, ஜெயலலிதாவுக்கு கலைஞர் கருணாநிதி பதில் எழுதினார்.

கடந்த ஏப்.18 ஆம் தேதி அவர் விடுத்த அறிக்கையில்கூட, "விடுதலைபுலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் இறந்து போன நேரத்தில் இரங்கல் கவிதை ஒன்று நான் எழுதினேன் என்பதற்காக ஜெயலலிதா எப்படியெல்லாம் அறிக்கை விடுத்தார்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். ஆனால், ஜெயலலிதாவின் அந்த குற்றச்சாட்டுக்கு தாம் எழுதிய பதிலையும், சட்டப் பேரவையில் கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சினையையும் கூறாமல் தவிர்த்து விட்டார். இவைகளை சுட்டிக் காட்டினால், அவரே மாட்டிக் கொள்வாரே!

தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல; அதுதான் உச்சநீதிமன்ற தீர்ப்பு - என்று எழுதிய இவரே, அதே குற்றச்சாட்டின் கீழ் - சீமான் கொளத்தூர் மணி, நாஞ்சில் சம்பத்தை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தது ஏன் என்ற கேள்விக்கு பதில் சொல்லியாக வேண்டுமே!

# குற்றத்தையே மாற்றி திருத்தம் வெளியிட்ட அதிகாரி!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்குமாறு தனது 9.3.2009 நாளிட்ட பிரமாண வாக்குமூலத்தில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வேண்டுகோள் காவல் நிலைய ஆய்வாளர் வைக்கிறார்.

அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், நான் கண் காணிப்புக்கு வர காரணமான ஈரோடு மாவட்டம், கருங்கல் பாளையம் காவல் நிலைய குற்ற எண்.1051/08 வழக்கையும், அவ்வழக்கின் எங்களது பிணை ஆணையையும், வழக்கு விசாரணையில் உள்ளது என்பதையும் பார்க்கிறார்.

உடனே, நான் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும், இந்திய தேசத்தவரின் பாது காப்பிற்கு அச்சுறுத்தலாகவும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு வெளிப்படையாக ஆதரிக்கும் செயலை செய்துள்ளேன் என திருப்தி அடைந் துள்ளார்.

ஆனால், அவ்வழக்கு குறித்து வழங்கப்பட்டுள்ள புத்தகத்தின் 7, 9 ஆகிய பக்கங்களிலுள்ள எனது பேச்சில் குற்றம் சொல்லப்படும் எந்தக் கருத்தும் இல்லை என்பது, படித்தால் தெளிவாக உணர முடியும். பேச்சின் இறுதியில் 'தமிழ்நாட்டுக்கு வரும் மத்திய அமைச்சர்களுக்கு பெரியார் திராவிடர்கழகம் கருப்புக் கொடி காட்டும்' என்பது வேண்டுமானால் தமிழக ஆளும் கட்சிக்கு ஆத்திரமூட்டுவதாக இருக்கலாம்.

அவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டிருக்கும் இரண்டு காவல் துறையினரும், சில காங்கிரஸ்காரர்களும் மட்டும் அக்கூட்டத்தில் பேசிய மூவரும் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகவும், பொது மக்களிடையே பயம் மற்றும் பீதி ஏற்படும் வண்ணம் பேசியதாகவும் கூறியுள்ளனர். அதற்கு எவ்வித ஆதாரமும் காட்டப்படாமல் உள்ளதாலும், சாட்சிகளின் அலுவல், கட்சி சார்ந்த சுயநல அக்கறை காரணமாக சொன்னதாகத் தான் கருத வேண்டியுள்ளது.

ஆனால், கூட்ட நடவடிக்கைகளைக் குறிப்பெடுத்த ஈரோடு காவல் சுருக்கெழுத்துக்கூட இளநிலை அறிக்கையாளர் திரு.இரா.சந்தான முருகன், "பேச்சுக்கள் ஆர்வத்துடன் கேட்கப் பட்டன" என்றே தன் கணிப்பை அவரது சுருக் கெழுத்து அறிக்கையின் இறுதியில் (புத்தக பக்கம்:37) குறிப்பிட்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த பேச்சு எவ்வாறு சட்ட விரோத நடவடிக்கைக்கு ஆதரவானதாகும் என்பதையோ, அந்த பேச்சு எவ்வாறு தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரிக்கும் செயல் என்பதையோ விளக்கவில்லை.

ஆனால், என்னுடைய செயல்பாடுகளைத் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாவிடில் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும், இந்திய தேசத்தவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், தடை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அமைப்பிற்கு வெளிப்படையாக ஆதரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் என்று, தான் அறிவேன் என்று கூறி, எனவே என்னை தேசியப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 3(2)ன்படி தடுப்புக் காவலில் வைக்க ஆணை பிறப்பித்து விடுகிறார்.

மேற்கண்டவாறு என் மீது தேசியப் பாதுகாப்பு சட்டப்படி தடுப்புக் காவலுக்கு ஆணை பிறப்பித்ததற்குப் பிறகு தான் திண்டுக்கல் நகர (வடக்கு) காவல் நிலைய வழக்கு குறித்த ஆவணங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறார்.

அந்த வழக்கு (குற்ற எண்.325/2009) முதல் தகவல் அறிக்கையிலுள்ள சார்பு ஆய்வாளர் திரு.எஸ். ராஜகோபால் அவர்களின் புகாரில்கூட (புத்தக பக்கம்:93) எனது பேச்சு 'இருதரப்பினரிடையே பகை உணர்வை தூண்டக்கூடிய வகையிலும்', 'பொது மக்களிடையே பயத்தை உண்டாக்கும் வகையிலும், குற்றத்தை மாநிலத்திற்கு எதிராக செய்யும் நோக்கத்துடனும்' இருந்ததாகத்தான் புகார் கூறியுள்ளார். அதே போல அந்த முதல் தகவல் அறிக்கையிலும்கூட எனது பேச்சின் சுருக்கெழுத்து அறிக்கை என்பதாக ஒரு பதினொரு பக்க அறிக்கை இணைக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதன் எந்தப் பகுதி சட்ட விரோதமானது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டவும் இல்லை.

அதே போல காவல் ஆய்வாளரின் காவல் அடைப்பு அறிக்கையிலும் எனது பேச்சு "அரசியல் கட்சியினருக்கிடையே பகை உணர்வைத் தூண்டக் கூடிய வகையிலும் பொது மக்களுக்கிடையே பயத்தை உண்டாக்கும் வகையிலும், குற்றத்தை மாநிலத்துக்கு எதிராக செய்யும் நோக்கத்துடனும், சட்டத்துக்கு புறம்பாக கலவரத்தைத் தூண்டும் வகையிலும்" இருந்துள்ளதாக தான் குறிப்பிட்டுள்ளார். (புத்தக பக்கம்: 191)

முதல் தகவல் அறிக்கையிலும், காவல் அடைப்பு அறிக்கையிலும், "13(1)(b) Unlawful Activities Prevention Act 1967" என்ற ஒரு பிரிவு எழுதப்பட்டுள்ளதே தவிர, உள்ளடகத்தின் எந்த இடத்திலும் அதற்கான செயல் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை.

இது குறித்தெல்லாம் தனது சிந்தனையைச் செலுத்தி ஆய்வு செய்யாமல், எனது 3.3.2009 நாளிட்ட கடிதத்தில் (புத்தக பக்கம்: 239-243) குறிப்பிட்டிருந்ததைப் போல அரசியல் பழிவாங்களுக்காக தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த எடுக்கப்பட்ட முன் முடிவு காரணமாகவே இப்படி எந்திர ரீதியில் ஆணை பிறப்பித்துள்ளார்.

2.3.2009 அன்று என்னை இவ்வழக்கில் கைது செய்வதற்காக மேட்டூர் வந்திருந்த திண்டுக்கல் மாவட்ட காவல்துறை அதிகாரிகள், என்னை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்வதாகச் சொன்னதைக் குறிப்பிட்டு 3.3.2009 நாளிட்ட ஒரு கடிதத்தை (புத்தக பக்கம் 239-243) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட மூவருக்கு சிறைக் கண்காணிப்பாளர் வழியாக அனுப்பி, எவ்வித விசாரணையும் செய்யாத நிலையிலேயே தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்த எடுத்துள்ள முடிவால், அரசியல் பழிவாங்கல் காரணமாக நான் பாதிக்கப்படாமல் உரிய நடவடிக்கை எடுத்து நீதி வழங்குமாறு வேண்டியிருந்தேன்.

ஆனால், எனது கடிதத்துக்கு பார்வை 3-ல் கண்ட பதிலில் (புத்தக பக்கம்: 245, 247), எனது கடிதத்தை உரிய வகையில் மனதை செலுத்தி பரிசீலிக்காத காரணத்தால், உங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு கைது செய்துள்ளார்கள் என்று கூறி எனது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக ஒரு எந்திரகதியான பதிலை திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருந்தார். அதன்படி தேசிய பாதுகாப்பு சட்டப்படி கைது செய்ய அவர்கள் கொண்டிருந்த முன் முடிவு உறுதிப்படுகிறது.

மேலும், ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் தேசிய பாதுகாப்பு சட்டப் பிரிவு 3((2)ன்படி மாநிலத்தின் பாதுகாப்பு, பொது ஒழுங்கு பாதிப்பு, மக்களுக்கான அத்தியாவசிய பொருள் வழங்கல் சேவை பராமரித்தல் போன்ற காரணங்களுக்கு மட்டும்தான் பயன்படுத்த முடியும் எனிலும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரோ 'இந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை, இந்திய தேசத்தவர் பாதுகாப்பு' என்ற காரணங்களுக்காக, என் மீது சிந்தனையைச் சிறிதளவும் பயன்படுத்தி ஆராயாமல், தேசியப் பாதுகாப்பு சட்டப் பிரிவு 3(2)-ன்படி தடுப்புக் காவலுக்கு ஆணையிட்டது, தடுப்புக் காவலில் வைக்க வேண்டும் என அவர் கொண்டிருந்த முன் முடிவை அப்பட்டமாக தெளிவுபடுத்துகிறது.

இந்தப் பிழையை எவ்வாறோ பின்னர் அறிய வந்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், 11.3.2009 அன்று அவசர அவசரமாக தே.பா.ச. தடுப்புக் காவல் ஆணை எண்.1/2009 (திருத்தம்) என்ற கடிதத்தை அனுப்பி, பழைய தடுப்புக் காவல் ஆணையில் பக்கம் 1, பத்தி 1, ஆறாவது வரியில் "இந்திய ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும், பாதுகாப்பிற்கும்" என இருப்பதை, "பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு" என்று திருத்தி வாசிக்குமாறு ஆணையிட்டுள்ளார்.

ஆனால், இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளுவதற்கு உரிய காரணமாக எந்த ஒரு ஆவணத்தையோ, ஆதாரத்தையோ இணைத்துக் கொடுக்கவுமில்லை.

அதோடு, தடுப்புக் காவலுக்கான காரணங்களிலும், எட்டு இடங்களில் "பொது ஒழுங்கு பராமரிப்புக்கு குந்தகம்" என்ற சொல்லை சேர்க்கச் சொல்லி, புதிய ஆவணங்களையோ, வேறு ஆதாரங்களையோ காட்டாமல் திருத்த ஆணை பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு தேசிய பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 3(2)-க்கு இணக்கமாக "பொது ஒழுங்கு பராமரிப்புக்கு குந்தகம்" என்ற சொல்லை இணைக்கும் முயற்சியிலும், போதிய அளவுக்கு மனதைச் செலுத்தாத காரணத்தால், தடுப்புக் காவலுக்கான காரணங்கள் அறிக்கையின் முதல் பத்தியில் என்னை, "இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண் மைக்கும், இந்திய தேசத்தவரின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகவும், தடை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு வெளிப்படையாக ஆதரிக்கும் செயலையும் செய்துள்ள சமூக விரோதி" என்பது திருத்தத்துக்கும் பிறகும் அப்படியேதான் உள்ளது.

காரணங்களைக் கொண்டு முடிவுக்கு வராமல், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தடுப்புக் காவலில் என்னை வைத்துவிட வேண்டும் என்ற முன் முடிவுக்கு சாதகமாக காரணங்களைத் தேடியதால்தான், இந்த முன்னுக்குப் பின் முரண்களும், குழப்பங்களும் நேரிட்டுள்ளது என்பது அப்பட்டமாக வெளிப்படுகிறது.

"பொது ஒழுங்கு பராமரிப்புக்கு குந்தகம்" என்பது கூட அல்ல, சாதாரண, "சட்ட ஒழுங்குக்கு குந்தகம்" என்பதற்கான ஆதாரம்கூட எந்த ஆவணத்திலும் இல்லை.

இன்னும் சொல்லப் போனால், ஈரோடு கருங்கல் பாளையம், திண்டுக்கல் நகரம் (வடக்கு) ஆகிய வழக்குகளுக்கு அடிப்படையான சுருக்கெழுத்தாளர் அறிக்கைகளின் இறுதியில் (புத்தக பக்கம்: 37-179) பேச்சுக்களால் பொது மக்கள் பயமோ, பீதியோ அடையாமல், "பேச்சுக்களை ஆர்வத்துடன் கேட்டார்கள்" என்பதற்கான ஆதாரங்கள் தான் உள்ளன. அதோடு, ஈரோடு கருங்கல் பாளைய கூட்டம் (14.12.2008) நடந்து மூன்று மாதங்களும், திண்டுக்கல் கூட்டம் (26.2.2009) நடந்து இரண்டு வாரங்களும் கடந்த நிலையிலும் தடுப்புக் காவல் ஆணை பிறப்பித்த (10.3.2009) நாள் வரை பேச்சுக்களால் எவ்வித பதட்ட நிகழ்வு நடந்ததாகக்கூட எந்த ஆதாரமும் காட்டப்படவில்லை.

மேலும், தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தடுப்புக் காவலில் வைக்க கோரிக்கை வைத்து திண்டுக்கல் நகர (வடக்கு) காவல் நிலைய ஆய்வாளரின் அறிக்கை (பத்தி 2 - பத்தி 4)யில் "இந்திய ஒருமைபாட்டிற்கும், இறையாண்மைக்கும், இந்திய தேசத்தவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும்" இருப்பதாக சொல்லப்பட்டது. அப்படியே இருக்க, அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் தடுப்புக் காவல் ஆணையில் மட்டும் "பொது ஒழுங்குக்கு குந்தகம்" என காரணம் எப்படி மாறியது என்பதற்கு தெளிவான எந்த விளக்கமும் தெரிவிக்கப்படவில்லை.

மேலும், 'திருத்தம்' என்பது எழுத்துப் பிழைகளுக்காக செய்வது தானே தவிர, அடிப்படை பொருளையே மாற்றுவதாக இருக்க முடியாது.

புதிய ஆதாரங்கள், ஆவணங்கள், தரவுகள் கிடைத்திருந்தால் பழைய ஆணையை இரத்து செய்து விட்டு, புதிய காரணங்களுக்காக புதிய ஆணையைத் தான் பிறப்பித்திருக்க வேண்டும்.

எனவேதான், தேசிய பாதுகாப்பு சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி ஏற்பளித்து பார்வை 2-ன்படி அரசாணை பிறப்பித்த, பொது (சட்டம், ஒழுங்கு-எப்)த் துறையின் அரசு இணைச் செயலாளர்கூட, சட்ட ஆய்வின்படி நிற்குமோ நிற்காதோ என்பது குறித்துக்கூட கவனம் கொள்ளாமல், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் 10.3.2009 அன்று பிறப்பித்த தடுப்புக் காவல் ஆணையை ஆளுநர் கவனமாக பரிசீலித்த பின் ஏற்பளிப்பதாக கடைமைக்காக கூறுவதோடு முடித்துக் கொண்டதாகவே எண்ண வேண்டியுள்ளது. ஏனெனில் 11.3.2009 ஆம் நாளிட்ட "திருத்த ஆணை" அவரது கவனத்துக்கு வந்திருந்தும், அவர் அதை புறக்கணித்து விட்டிருக்கிறார்.

தடை செய்யப்பட்ட இயக்கங்களின் சட்ட விரோத செயல்களுக்கு உதவும் செயல்கள்தான் சட்ட விரோதமானதே தவிர, தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருப்பினும் அதன் சட்டப்படியான நடவடிக்கைகளை ஆதரிக்கும் செயல் குற்றமாகக் கருத முடியாது. மேலும் தடைசெய்யப்படும் இயக்கங்களை ஆதரிக்கும் பேச்சுகள்கூட குற்றமாகாது என உச்சநீதிமன்றம் உட்பட பல நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தும் இருக்கின்றன.

இவ்வாறிருக்க, குறிப்பிட்டுள்ளபடி எவ்வித குற்றங்களையும் இழைக்காத என்னை, போதிய காரணங்களை முன் வைக்காமலும், சட்ட விதிகளுக்கு முரணாகவும், உரிய அளவுக்கு மனதை செலுத்தி பரிசீலிக்காமலும், முன் முடிவுடன் அவசர கதியில் என் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு சட்ட தடுப்புக் காவல் ஆணையை இரத்து செய்ய பரிந்துரைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். ●

# ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை அன்று கடுமையாக எதிர்த்த கலைஞர் - இன்று ஆதரிக்கிறார்

1987 ஆம் ஆண்டு ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி இப்போது காங்கிரசோடு சேர்ந்து நியாயப்படுத்த முன் வந்திருக்கிறார். கலைஞர் கருணாநிதிக்கு சோனியா எழுதிய கடிதத்தில் இந்த ஒப்பந்தம் பற்றி குறிப்பிட்டுள்ளதை கலைஞர் கருணாநிதி எடுத்துக்காட்டி, இந்த ஒப்பந்தத்தையும், மருத்துவர் ராமதாசு கபட நாடகம் என்கிறாரா என்று 'முரசொலி'யில் (13.4.2009) கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களின் நினைவு மறதிதான் - இவர்களின் அரசியல் மூலதனமாகிவிட்டது. இந்த ஒப்பந்தம் பற்றி 27.11.1987 அன்று கலைஞர் கருணாநிதி தலைமையில், சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. நிர்வாகக் குழு கூடி ஒப்பந்தத்தில் ஒவ்வொரு பிரிவையும் அலசி ஆராய்ந்து, நீண்ட தீர்மானத்தையே நிறைவேற்றியிருப்பதை தி.மு.க. தலைவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

“ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தினால் நடைமுறையில் ஈழத் தமிழ் மக்கள் பெரிதும் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதை தி.மு.கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டுள்ளது” என்ற பீடிகையுடன் அந்தத் தீர்மானம் தொடங்குகிறது.

இந்த ஒப்பந்தத்தால் தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடைக்கப் போவதில்லை என்பதை விரிவாக ஆராய்கிறது அத்தீர்மானம். ஒப்பந்தத்துக்கு எதிரான இலங்கை அரசின் செயல்பாடுகளையும் தீர்மானம் பட்டியலிட்டுள்ளது. இவ்வளவையும் குறிப்பிட்டு, இறுதிப் பகுதியில் தி.மு.கவின் தீர்மானம் இவ்வாறு கூறுகிறது:

“இத்தனையும் இந்திய அரசுக்கு தெரிந்தும்கூட தெரியாததுபோல் நடிப்பதும், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் காரியமாக ஈழத் தமிழர்களையும் அவர்களின் உரிமைகளுக்கும் நல்வாழ்வுக்கும் பாடுபடும் விடுதலைப்புலிகளை வேரோடுஅழிக்க முனைவதும் எந்த வகையில் நியாயம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

“சிங்களப் படையினரின் பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்தும், தமிழினப் படுகொலையிலிருந்தும் அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாக்கவே ஈழப் போராளிகள் ஆயுதமேந்தினார்கள். அவர்கள் மேற்கொண்டது தற்காப்பு நடவடிக்கைகளே.

சிங்களப் படைகளிடமிருந்து ஈழத் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய அரசு ஏற்றுக் கொள்வதாக கூறி, ஈழப் போராளிகள் தங்களிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்கும்படி இந்திய அரசு நெருக்கடி கொடுக்கவே, இந்திய அரசின் வாக்குறுதியை நம்பியும், இந்தியப் படைகளுடன் ஒரு மோதல் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் ஈழப் போராளிகள் தங்களிடமிருந்து ஆயுதங்களில் பெரும் பகுதியை ஒப்படைத்தார்கள்.

ஆனால், திருகோணமலை போன்ற இடங்களில் இலங்கை ஊர்க்காவல் படையினரும், ஆயுதம் தாங்கிய சிங்கள மக்களும் தமிழ் மக்களைத் தாக்கினார்கள். சிங்கள அரசின் பயங்கரவாதத்தினால் தங்கள் சொந்த வீடுகளை விட்டு, கிராமங்களை விட்டு வெளியேறிய தமிழர்கள், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையொட்டி மீண்டும் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பி, வீடுகளுக்குப் போக முயன்றபோது ஆயுதம் தாங்கிய சிங்கள மக்களும், சிங்கள ஊர்க்காவல் படையினரும் மீண்டும் மீண்டும் தாக்கினார்கள். அவர்களைத் தங்கள் சொந்த வீடுகளுக்குப் போக விடாமல் தடுத்தார்கள். இதுபற்றி ஈழத் தமிழர்கள் இந்திய அதிகாரிகளிடம் முறையிட்டார்கள். ஆனால் எந்த உதவியும் கிடைக்கவில்லை. இதனால் நிர்கதிக்கு ஆளான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் உதவிகளை நாடினார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் விடுதலைப் புலிகள் திரும்பவும் ஆயுதம் ஏந்தி தமிழ் மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இது தவிர்க்க முடியாத தற்காப்பு நடவடிக்கை என்பதை எவரும் புரிந்து கொள்ளலாம்.

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவோ, சிங்களக் குண்டர்களை அடக்குவதற்குப் பதில் தமிழ்ப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்யும்படி இந்தியப் படைகளை ஏவிவிட்டார்.

சிங்களக் காடையர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க முற்படாத இந்திய அமைதிப்படையினர், ஈழப் போராளிகளிடமிருந்து மட்டும் ஆயுதங்களைப் பறிக்க முற்பட்டதனாலேயே இந்தியப் படைகளுக்கும் ஈழப் போராளிகளுக்கும் மோதல் ஏற்பட்டது.

எனவே, போராளிகள் வலுவில் தாக்குதலில் ஈடுபட்டார்கள் என்று சொல்வது உண்மைக்கு மாறுபட்டதாகும்.

மேலும், ஒப்பந்தத்தின்படி ஈழப் போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்யும் உரிமையோ, கடமையோ இந்தியப் படைகளுக்கு இல்லை.

உலகின் பல்வேறு நாடுகளில் அமைதிப் படைகள் பணியாற்றியிருக்கின்றன. ஐ.நா. சபையின் சார்பில் சென்ற பல்வேறு அமைதிப் படைகளில் இந்தியப் படையினரும் சென்றிருக்கின்றனர். அவைகள் மோதுகின்ற இரு தரப்பினருக்கிடையே அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டிருக்கின்றன.

ஆனால், இரு தரப்பினருக்கும் மத்தியில் நடுநிலையோடு நடந்து கொண்டு அமைதியைப் பராமரிப்பதில் மாத்திரமே அவர்கள் கவனம் செலுத்தியிருக்கிறார்களே தவிர ஒரு தரப்பாரிடமிருந்து ஆயுதங்களை பறிமுதல் செய்து மறுதரப்பாரிடம் ஒப்படைக்கும் செயலில் ஈடுபடவில்லை.

இந்தச் சர்வதேச நியதியை இந்திய அமைதிப் படையினர் ஈழத்திலும் கடைப்பிடித்திருந்தால், தற்போது நடந்து கொண்டிருக்கும் தேவையற்ற மோதலும், அதன் காரணமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அளப்பரிய இழப்புக்களும் தொல்லைகளும் இந்திய ராணுவத்தினர் பலரின் உயிரிழப்பும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

நாற்பது ஆண்டுகாலமாக ஈழத்தில் தமிழர்கள் அனுபவித்து வரும் இன்னல்களைத் துடைக்கவும், அவர்களுக்கு அமைதியான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவும், “அமைதி ஒப்பந்தம்” நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உதவுவதற்காகவுமே இந்திய ராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதாகத் தெரிவித்த ராஜீவ் காந்தியின் அரசு ஒப்பந்தத்திற்கு மாறாகவும் அதை மீறுகிற வகையிலும் நடந்து கொண்ட சிங்கள இனவெறி அரசைத் தட்டிக் கேட்பதற்கு பதில் அந்த அரசுடன் சேர்ந்து கொண்டு ஜெயவர்த்தனாவின் கட்டளைகளையேற்று இந்திய ராணுவத்தைக் கொண்டே ஈழத் தமிழ் இனத்தை அறவே அழித்திடும் இந்தக் கொடுமையைத் தமிழ் இன உணர்வு படைத்தோர் மட்டுமல்ல; மனிதாபிமானமுடைய எவருமே ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையிலும்கூட, “48 மணி நேர போர் நிறுத்தம்” என அறிவித்துவிட்டு, அறிவித்த போதே விடுதலைப் புலிகள் மீது அவதூறுச் செய்திகளை இந்திய பாராளுமன்றத்திலேயே மத்திய அமைச்சர்கள் கூறியதோடு, தொடர்ந்து வானொலி, தொலைக்காட்சி வாயிலாகவும் அதே பொய்ப் பிரச்சாரத்தைச் செய்து கொண்டு, விடுதலைப்புலி இயக்கத்தினர் பேச்சு வார்த்தைக்கு தயாராக இருந்தும், பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து ஆயுதங்களை ஒப்படைக்க தயாராக இருந்தும் அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களை காதிலே போட்டுக் கொள்ளாமல் மீண்டும் விடுதலைப் புலிகளை வேட்டையாடுவது என்ற பெயரால் ஈழத் தமிழ் மக்களை அழிக்கவும் தமிழச்சிகளின் கற்பை சூறையாடவும், நகரங்கள், கிராமங்களை அடியோடு நாசம் செய்யவும் இந்திய ராணுவம் டாங்கிகள் மூலமும், ஹெலிகாப்டர்கள் மூலமும், விமானங்கள் மூலமும் தனது தாக்குதலை தொடங்கியிருப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.”

- என்று தி.மு.கவின் தீர்மானம் கூறுகிறது.

இப்போது - தி.மு.க. சார்பில் முன் வைக்கப்படும் 'அதிகாரப் பகிர்வு' “புலிகளும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும்”, “புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்”; “மத்திய அரசு 30 ஆண்டுகளாக ஈழப் பிரச்சினையில் அக்கறை செலுத்தி வருகிறது”; “புலிகள்தான் இந்த நிலைக்கு காரணம்” என்று முன் வைக்கும் அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் தி.மு.கவின் தீர்மானத்திலே தெளிவான விளக்கம் அடங்கியுள்ளது. ●

## கலைஞர் – பிரணாப் நடத்தும் நாடகம்

இலங்கை - போரை நிறுத்தினால் தான் கடன் தொகையை வழங்க முடியும் என்று உலக வங்கி கூறிவிட்டது. உலக வங்கி தராவிட்டால் என்ன; இதோ நான் தருகிறேன் என்று, இந்தியா ரூ.5800 கோடி கடன் வழங்க முன் வந்துள்ளது.

இந்த நிதி - மேலும் - தமிழர்களை கொன்று குவிப்பதற்கே - இலங்கை அரசுக்கு பயன்படப் போகிறது. இலங்கைக்கு வழங்கி வரும் இராணுவ உதவியையோ, நிதி உதவியையோ, நிறுத்துவதாக இதுவரை இந்தியா வாய் திறக்கவே இல்லை. மாறாக, இந்தியாவின் உதவியுடன் தான், சிங்களம், இன அழிப்பையே நடத்திக் கொண்டிருக்கிறது. இந்திய - இலங்கை இராணுவ உயர் மட்டத்தில் இதற்கான திட்டமிடல்கள் நடப்பதாக விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் நடேசன் ஒரு பேட்டியிலேயே வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

இந்த நிலையில் - தமிழ்நாட்டில், காங்கிரசின் துரோகம் தமிழர்களிடையே அம்பலமாகிவிட்டதால் - தி.மு.க., செய்வதறியாது திகைத்துப்போய் முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துகளை கூறி வருகிறது.

போர் நிறுத்தம் செய்ய இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தார். பிறகு அவரே குரலை மாற்றி, மற்றொரு நாட்டின் இறையாண்மையில், எப்படி தலையிட முடியும் என்று சமாதானம் கூறினார். இப்பொழுது இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியுள்ள இந்தியாவின் கோரிக்கையை ஏற்காவிட்டால், இலங்கையுடனான தூதரக உறவை துண்டித்துவிடுமாறு பிரதமர் - சோனியா - பிரணாப்புக்கு தந்தி அனுப்பியுள்ளாராம்.

உண்மையில் 'போர் நிறுத்தம்' செய்யுமாறு - இந்தியா, இலங்கையை வற்புறுத்தியதா? கொல்கத்தாவில் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அளித்த பேட்டியில், "Colombo should extend the pause" என்று தான் கூறியுள்ளார். இதனுடைய உண்மையான அர்த்தம் போர் நிறுத்தம் (Ceasefire) அல்ல. அடுத்த கட்ட தாக்குதலைத் தொடருவதற்கு சிறிது 'கால இடைவெளி' தரப்பட வேண்டும் என்பதுதான். ஆனால், தமிழக முதல்வரோ ஏதோ 'போர் நிறுத்தத்தையே' பிரணாப் வலியுறுத்துவதாக பாசாங்கு காட்டுகிறார். அது மட்டுமல்ல - 'இந்தியா எந்த சமரச முயற்சியிலும் ஈடுபடாது' என்றும் பிரணாப் கூறி விட்டார். (Mr. Mukherjee ruled out any mediation by India - The Hindu, Apr.18, 2009)

இதன் உண்மையான பொருள் - இந்தியா சண்டைக்குத்தான் பின்புலமாக இருக்குமே தவிர, சமரசத்துக்குஅல்ல என்பதுதான். இந்த உண்மைகளையெல்லாம் மறைத்துவிட்டு, தமிழக வாக்காளர்களை ஏமாற்றிவிடலாம் என்று தி.மு.க. கருதினால் அவர்கள் ஏமாற்றத்தைத்தான் சந்திப்பார்கள்.

# கடைசி தமிழன் வரை – அங்க கலகக் குரல் தொடருமுங்க

ஒப்பாரி

அய்யய்யோ கேளுங்களேன் – இந்த
அநியாயத்த பாருங்களேன்
ஈழத்து மக்கள் மீது – ஈவு
இரக்க மில்லா வெறியாட்டம்
தாயகத்து மக்கள் மீது – அய்யா
தரம் தாழ்ந்த வெறியாட்டம்
இலங்கை ராணுவத்தின் – அய்யா
இதயமற்ற வெறியாட்டம் – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

நாடாண்ட பரம்பரைங்க – இன்று
நாதியற்று நிக்குறோங்க
அரசாண்ட வம்சமுங்க – இன்று
அகதிகளாய் திரியுறோங்க
உலகெங்கும் வாழ்பவங்க – இன்று
உறவின்றி கெடக்குறோங்க
பூர்வகுடி தமிழருங்க – இன்று
புழுக்களாய் துடிக்குறோங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

உறக்கத்திலே இருந்தவங்க – அய்யா
உடல் சிதறி போனாங்க
தூழியிலே தூங்குச்சுங்க – புள்ள
துண்டு துண்டா போச்சுதுங்க
விளையாட போன புள்ள – அய்யா
வீடு வந்து சேரலிங்க
கை தனியா கால் தனியா – அந்த
காட்சி நெஞ்ச வதைக்குதுங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

பள்ளிக்கூட பிஞ்சுகள – அய்யா
படை திரண்டு கொல்லுறாங்க
குடியிருப்பு பகுதியில – அய்யா
குண்டு மழை பொழியுறாங்க
வழிபாட்டு தளங்களிலும் – பீரங்கி
வண்டிகளால் மோதுறாங்க
வியாபாரக் கூடங்களில் – அய்யா
வெடி குண்டு வீசுறாங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

வெடிகுண்டு சத்தத்தாலே – நாங்க
வெளவெளத்து போறோமுங்க
துப்பாக்கி சத்தத்தாலே – நாங்க
தூக்கமிழந்து போனோமுங்க
பூட்சுகளின் சத்தத்தாலே – அந்த
புத்தர்சிலை அதிர்ந்ததுங்க
பீரங்கி சத்தத்தாலே – மரண
பீதியில உறைந்தோமுங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

நான் வளர்த்த தென்னமரம் – அய்யா
நாசமாகி நிக்குதுங்க
நான் வளர்த்த கோழிக்குஞ்சு – அய்யா
நாடி செத்து போனதுங்க
எம்புள்ள பொம்மையெல்லாம் – அய்யா
எங்கு தான் போச்சுதுங்க
முப்பாட்டன் ஒழச்சதுங்க – வீடு
முற்றிலுமா சரிஞ்சதுங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

பச்ச புள்ள பசியாற – அம்மா
பாலில்லா தவிக்குதுங்க
தாய்பாலும் இல்லையிங்க – அம்மா
தாலாட்ட முடியலிங்க
அம்மானும் அப்பானும் – குழந்த
அழுது நெஞ்சு வறண்டதுங்க
பசி தாங்க முடியாமல் – அம்மா
பல குழந்த சாகுதுங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

தான் பெத்த மகளோடு – அம்மா
தகாத உறவாட
ராணுவம் சொல்லுதுங்க – பெரும்
ரவுடித்தனம் பண்ணுதுங்க
தமிழீழ பெண்களிடம் – அம்மா
தரம் தாழ்ந்து நடக்குதுங்க
இளம் பெண்கள் படும் பாடு – அம்மா
ஈரக்குலை நடுங்குதுங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

உரிமை பேசும் நாட்டினிலே – அம்மா
உயிர் வாழ முடியலீங்க
சட்டம் பேசும் நாட்டினிலே – ரத்த
சகதியிலே நெளியிறோங்க
குடியரசு நாட்டினிலே –அம்மா
குடிமக்கள் அலறுகிறோங்க
தன்னாட்டு மக்களையே – அம்மா
தாக்குவது நியாயமாங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

சொல்லொணாத் துயரங்கள – அம்மா
சொந்த மண்ணில் அனுபவிச்சோம்
உயிர் பிழைக்க வழி தேடி – அம்மா
உங்களிடம் அண்ட வந்தோம்
தொப்புள் கொடி தமிழகத்தில் – பல
தொல்லையுடன் வாழ்ந்து வாறோம்
தாயகம் திரும்பிடத்தான் – பெரும்
தாகத்தில தவிக்கிறோம்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

அன்னை தமிழ் பூமியிலே – நாங்க
அனாதைகளா ஆனோமுங்க
இந்தியா உதவனுங்க – எங்க
இன்னல்கள உணரனுங்க
சீனாவும் பாகிஸ்தானும் – கொஞ்சம்
சிந்தனை பண்ணனுங்க
ஆயுத உதவிகளால் – எங்கள
அழித்தொழிக்க பாக்குறாங்க – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

விடுதலை போராட்டங்க – எங்க
வீரமொன்னும் தாழாதுங்க
கடைசி தமிழன் வரை – அங்க
கலகக் குரல் தொடருமுங்க
கண்ணீரும் கருவியாகும் – எங்க
கதறலும் வெடிகுண்டாகும்
வனத்திலே தடம் பதிப்போம் – உலக
வரலாற்றில் இடம் பிடிப்போம் – அங்கு
போர் நிறுத்தம் வேணுமுங்க.

## சீர்காழியில் தமிழர் எழுச்சிப் பொதுக் கூட்டம்

சீர்காழியில் 4.4.2009 அன்று கழகத்தின் சார்பில் தமிழர் எழுச்சி பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் இரா.பரசுராமன் தலைமையில் மாவட்டச் செயலாளர் தெ.மகேசு வரவேற்க, நகரத் தலைவர் ப.வ. பெரியார் செல்வம், கொள்ளிட ஒன்றிய தலைவர் நந்த. இராசேந்திரன், ஒன்றிய தலைவர் பொன். தேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியின் துவக்கத்தில் சிற்பிராசனின் 'மந்திரமா! தந்திரமா!' மூடநம்பிக்கை ஒழிப்பு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர்கள் ரெ.ரசித்கான், சோம. ராசராசன் கண்டன உரையாற்றினர். கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பா.பிரபாகரன், க. அனந்தராசு, இரா. விசயகுமார், இரா.கே. ராமமூர்த்தி, அன்பு, முருகன், பா.பாக்கியராசு, சோ.மதிவாணன் இரா. ரகுநாத் மற்றும் ஏராளமான தோழர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.அருண் நன்றி கூறினார்.

## வந்த கடிதம்

**அஞ்சாமை கதிரொளி,** *31.3.2009*
*மும்பை*

தங்களின் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வார செய்திகளை ஒரு மாதமாக அறியும் வாய்ப்பு கிடைத்தது. புரட்சித் தோழர்களின் எழுச்சிச் சிந்தனைகளை தாங்கி இடிமுழக்கம் செய்யும் ஏடு மக்களிடையே வலம் வந்து எழுச்சி அலைகளை ஏற்படுத்தி நிலைத்து நிற்க, வரலாறாய் திகழ வாழ்த்துக்கள்.

# சு.சாமி மீது சட்டம் பாய மறுப்பது ஏன்?

**கேள்வி:** *ராஜீவ் காந்தியைக் கொலை செய்தது விடுதலைப் புலிகள்தான் என்கிறீர்கள். ஆனால், நீங்கள் எழுதி வெளியிட்ட 'ராஜீவ் காந்தி கொலை – விடை கிடைக்காத வினாக்களும், கேட்கப்படாத கேள்விகளும்' என்ற புத்தகத்தில் ராஜீவ் படுகொலைக்குக் காரணமே 'சோனியா, அவருடைய அம்மா பவ்லோமைனா, அர்ஜுன் சிங், மார்க்ரெட் ஆல்வா ஆகிய நான்கு பேர்தான். அவர்களை விசாரிக்க வேண்டும்' என்றெல்லாம் எழுதியிருக்கிறீர்களே? எது உண்மை?*

**சுப்பிரமணியசாமி:** "ஆமாம். அப்படித்தான் எழுதியிருந்தேன். அதை எப்போதும் கூறு வேன். ராஜீவ் படுகொலைக்குக் காரணமே, அதைத் திட்டமிட்டுச் செய்ததே சோனியாதான். இதில் சோனியாவின் அம்மா பவ்லோமைனா, அர்ஜுன்சிங், மார்க் ரெட் ஆல்வா ஆகியோரது பங்கும் இருக்கிறது. இந்த நால்வரையும் சி.பி.ஐ. முறையாக விசாரித்தாலே உண்மைகள் வெளிவந்துவிடும். இதில் கூலிப் படையாகச் செயல்பட்டது மட்டுமே விடுதலைப்புலிகளின் பங்கு. சோனியாவிடம் ஏராளமான பணத்தை வாங்கிக் கொண்டு அந்தக் கொலையைச் செய்தார்கள். இதுதான் உண்மை. இதை நான் மறுக்கவில்லையே. புலிகள் கொலை செய்தார்கள். செய்யச் சொன்னது சோனியா."

**சுப்ரமணியசாமி பேட்டி – 'குமுதம் ரிப்போர்ட்டர்' (26.2.09)**

*சோனியாவை சேலை கட்டிய முசோலினி என்று பேசியதற்காக, நாஞ்சில் சம்பத் மீது ஓராண்டுக்கு வெளியே வர முடியாத தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்த - கலைஞர் கருணாநிதி.*

*சோனியாவின் உருவப் பொம்மையை எரித்தால் கைது செய்ய ஆணையிடும் - கலைஞர் கருணாநிதி.*

*ராஜீவ் காந்தியின் கொலைக்கே திட்டமிட்டது சோனியாதான் என்று சுப்பிரமணியசாமி பேட்டி அளித்துள்ளாரே, இதற்காக சு.சாமி மீது தி.மு.க. அரசின் சட்டங்கள் பாயாதது ஏன்?*

*'சூத்திரர்கள்' மீது பாயும் அடக்கு முறை சட்டங்கள் பார்ப்பனர்கள் மீது பாயாதா?*

## அம்பேத்கர் பிறந்த நாள்

*14.4.2009 அன்று அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு காலை 9 மணியளவில் சென்னை பெரிய மேட்டிலுள்ள அம்பேத்கர் சிலைக்கும், 9.30 மணியளவில் சேத்துப்பட்டிலுள்ள அம்பேத்கர், பெரியார் சிலைகளுக்கும் கழகத் துணைத்தலைவர் ஆனூர் கோ.செகதீசன் மாலை அணிவித்தார். கழகப் பொறுப்பாளர்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.*

## சங்கராச்சாரி வழக்கு கதி என்ன? அரசு சாட்சிகள் தடம் மாறுவது ஏன்?

காஞ்சி சங்கராச்சாரி மீதான வழக்கு விசாரணையில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. சங்கராச்சாரிக்கு எதிராக அரசு தரப்பில் கொண்டு வரப்பட்ட சாட்சிகளே சங்கராச்சாரிக்கு ஆதரவாக திரும்பி விட்டன.

சங்கராச்சாரியை துணிவுடன் கைதுசெய்தது - ஜெயலலிதா என்ற பார்ப்பனர்தான். சங்கர் ராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரிக்கு தொடர்புண்டு என்று செய்திகள் வரத் தொடங்கிய நிலையில் சங்கராச்சாரியை கைது செய்யக் கோரி காஞ்சிபுரத்தில் தி.மு.க.தான் முதலில் போராட்டம் நடத்தியது. ஜெயலலிதா உண்மையிலே துணிவுடன் சங்கராச்சாரியை கைது செய்து விட்டார். தமிழினமே ஜெயலலிதாவின் இந்த துணிவைப் பாராட்டியது. பாரதிய ஜனதா கட்சி - ஜெயலலிதா ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டும் என்று கூக்குரலிட்டபோது, பெரியார் திராவிடர் கழகம் - அதற்கு எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி, இப்பிரச்சினையில் ஜெயலலிதா ஆட்சி நடவடிக்கைகளை உறுதியோடு ஆதரிப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றியது. கலைஞர் கருணாநிதியால் இப்படிப்பட்ட துணிவான முடிவை எடுத்திருக்கவே முடியாது என்பதே - அப்போது தமிழின உணர்வாளர்களின் பொதுவான கருத்தாக இருந்தது.


ஜெயலலிதா - சங்கராச்சாரியை கைது செய்யவே மாட்டார் என்று உறுதியாக நம்பிய கலைஞர் கருணாநிதி - சங்கராச்சாரியை கைது செய்யக் கோரி போராடினார். ஆனால் ஜெயலலிதா கைது செய்தவுடன், வழக்கம் போல் குரலை மாற்றிக் கொண்டு விட்டார். "இந்தக் கைது அரசியல் உள்நோக்கம் கொண்டது" என்று அப்போதும் துரோகக் கருத்தை முன் வைத்தார்.

ஜெயலலிதா ஆட்சிப் போய் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த வழக்கின் நிலையும் மாறிவிட்டது. அரசு சாட்சிகள் தடம்புரளத் தொடங்கிவிட்டன. பார்ப்பன வட்டாரங்கள் மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றன. சங்கராச்சாரி வழக்கை தீவிரப்படுத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்திய தி.க. தலைவர் கி.வீரமணி, அரசு சாட்சிகள் தடம் புரளுவதை சுட்டிக்காட்டி, எந்த கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. - இதுதான் "பெரியார் ஆட்சி"யா?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd April 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஏப்ரல் 30, 2009 புரட்சி 8 முழக்கம் 16 விலை : ரூ.2.50


## கொளத்தூர் மணி பேச்சில் – சட்ட விரோதம் ஏதுமில்லை

# தேசிய பாதுகாப்பு சட்டம் செல்லாது

## தி.மு.க. ஆட்சிக்கு எதிரான உயர்நீதிமன்றத் தீர்ப்பு

கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது தி.மு.க. ஆட்சி முறைகேடாக பிறப்பித்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்த தோடு, இச் சட்டத்தின் கீழ் உள்ள எந்தப் பிரிவின் கீழும் கொளத்தூர் மணி குற்றமிழைக்கவில்லை என்று கூறியுள்ளது. தேசிய பாதுகாப்பு சட்டத்தை காங்கிரசாரை திருப்திப்படுத்தும் ஆயுதமாக முறை கேடாக பயன்படுத்திய கலைஞர் கருணாநிதிக்கு நீதிமன்றத் தீர்ப்புகள் பலத்த அடியை வழங்கி வருகின்றன. ஏற்கனவே இயக்குனர் சீமான், நாஞ்சில் சம்பத் ஆகியோரை விடுதலை செய்த உயர்நீதிமன்றம் இப்போது கழகத் தலைவரையும் விடுவித்துள்ளது. இந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் ஏப்.27 ஆம் தேதி நீதிபதிகள் எலிப் தர்மராவ், ஆர்.சுப்பையா ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. கழக வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி, இளங்கோ ஆகியோர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் சகோதரர் டி.எஸ்.பழனிச்சாமி பெயரில் 'ஹேபியஸ் கார்பஸ்' மனுவை தாக்கல் செய்து வாதாடினர்.

ராஜீவ் கொலை செய்யப்பட்டார் என்பது தவறு. அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது என்பதே சரி என்று கொளத்தூர் மணி கடந்த பிப்.20 ஆம் தேதி திண்டுக்கல்லில் நடந்த கழகக் கூட்டத்தில் ஏராளமான சான்றுகளுடன் உரையாற்றினார். 'ராஜீவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது' என்று பேசியதற்காக, தமது ஆட்சி தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ததாக கலைஞர் கருணாநிதி



'முரசொலி'யில் எழுதினார். தோழர் கொளத்தூர் மணியின் முழு உரையைப் படித்துப் பார்த்த நீதிபதிகள் - அந்த உரை, அரசுக்கு எதி ரானது அல்ல; பொது ஒழுங்கை சீர் குலைப்பதும் அல்ல என்று, தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர். முதலில் - இந்திய இறை யாண்மைக்கு எதிரான குற்றச்சாட்டுகளை சுமத்தி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், கழகத் தலைவர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தை பிறப்பித்திருந்தார்.

இறையாண்மைக்கு எதிராக எந்தப் பிரிவும் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் இல்லை என்பது பிறகு தெரிந்த வுடன், தாம் ஏற்கனவே வெளியிட்ட ஆணைக்கு திருத்தம் ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டார். அதில் இறையாண்மைக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை பொது ஒழுங்கை சீர் குலைத்த குற்றச்சாட்டாக திருத்திக் கொள்ளுமாறு குறிப்பிட்டிருந்தார். இப்படி ஒரு திருத்தம் வெளி யிட்டிருப்பதே, இந்தத் தடுப்புக் காவல் சட்ட விரோத மானது என்பதற்கான சான்றாகும் என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளனர். அரசியல் சட்டம் 19(1)(ஏ) வழங்கியுள்ள பேச்சுரிமையை இந்தக் கைது பறித்துள்ளது என்றும் நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கடந்த பிப்.20 ஆம் தேதி திண்டுக்கல்லில் நிகழ்த்திய உரைக்காக காவல்துறை வழக்கு பதிவு செய்து மார்ச் 3 ஆம் தேதி கைது செய்தது. பிணை கேட்டு திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில், மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பிணை மனு நிலுவையில் இருக்கும் போதே, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யும் ஆணையை, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் கடந்த மார்ச் 10 ஆம் தேதி பிறப்பித்தார். ஆள் தூக்கி சட்டங்களை முறைகேடாகப் பயன்படுத்தி எப்படியாவது சிறையிலடைத்து காங்கிரஸ் எதிர்ப்பு பிரச்சாரத்தை முடக்கிட கலைஞர் கருணாநிதி துடித்தார். 56 நாட்கள் சிறைவாசத்திற்குப் பிறகு அடக்கு முறை சட்டத்தை எதிர்த்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுதலையாகிறார். கழக வழக் கறிஞர்கள் எஸ்.துரைசாமி, இளங்கோ ஆகியோர், இதற்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இதே போன்று, ஈரோட்டில் 14.12.2008 அன்று ஈழத் தமிழர் ஆதரவுக் கூட்டத்தில் பேசியதற்காக தி.மு.க. ஆட்சி கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், மணியரசன் ஆகியோரை 19.12.2008 அன்று கைது செய்தது. கோவை சிறையில் அடைக்கப்பட்டிருந் தவர்கள் 31 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு, 19.1.2009 அன்று விடுதலை செய்யப்பட்டனர். கலைஞர் கருணாநிதி ஆட்சி ஈழத் தமிழர்களைப் பற்றி பேசி னாலே அடக்குமுறைகளை ஏவி சிறையிலடைத்து வருகிறது. இந்த ஆட்சிதான் இப்போது உண்ணாவிரத நாடகத்தையும் நடத்தி முடித்திருக்கிறது. ●

## உண்ணாவிரதம்: குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்ட கதை

**"இலங்கை போர் நிறுத்தம் அறி விக்குமா என ஞாயிற்றுக்கிழமை இரவு முழுதும் கண் விழித்திருந்து எதிர்பார்த் திருந்தேன். ஆனால், போர் நிறுத்தத்தை அறிவிக்காததால், என்னையே நான் அர்ப்பணித்துக் கொள்ள இந்த உண்ணா நோன்பை மேற்கொண்டிருக்கிறேன்"**

- என்ற அறிவிப்போடு அண்ணா நினைவிடம் அருகே, காலை 6 மணி யளவில் (ஏப்.27, 2009) கலைஞர் கருணாநிதி தொடங்கிய உண்ணா விரதம், ஆறரை மணி நேரத்தில், **"இலங்கை அரசு போர் நிறுத்தத்தை அறிவித்து விட்டது; உண்ணாவிரதம் மாபெரும் வெற்றி"** என்ற அறிவிப்புடன் முடிவுக்கு வந்துவிட்டது.

உண்ணாவிரதம் முடிந்த உடனேயே முல்லிவாய்க்கால் பகுதியில் ராணுவம் பகல் 12.50 மணிக்கு ஒரு முறையும், மீண்டும் பகல் 1.10 மணிக்கு மறு முறையும் முப்படைகளும் இணைந்து நடத்திய தாக்குதலில் 272 தமிழர்கள் பிணமாகி விட்டனர்.

கலைஞர் கருணாநிதி உண்ணா விரதத்தை முடித்து 'வெற்றிப் பிரக டனத்தை' வெளியிட்ட சில மணி நேரத்துக்குள் சிங்கள ராணுவத்தின் அதிகாரபூர்வ பேச்சாளர் உதய நாணயக்காரா, **"அரசு போர் நிறுத்தம் அறிவிக்கவில்லை. விமானத் தாக்குத லும், எரிகணை வீச்சும் மட்டும், அது பொது மக்களுக்கு பாதிப்பை ஏற் படுத்துபவை என்பதால் நிறுத்தப்பட் டுள்ளது"** என்று கூறியுள்ளார். ராஜ பக்சேயும், சி.என்.என்., அய்.பி.என். தொலைக்காட்சியில் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

உண்மையில் போர் நிறுத்தம் ஏற்பட் டிருக்குமானால், அதை மகிழ்ச்சியோடு வரவேற்று, முதல்வர் கலைஞர் கருணா நிதிக்கு பாராட்டு மாலைகளை நாமே குவித்திருப்போம். இந்தப் பிரச்சினை யில் பெரியார் திராவிடர் கழகத்துக்கு அரசியல் கண்ணோட்டம் ஏதுமில்லை.

ஆனால், நிகழாத ஒரு போர் நிறுத்தத்தை நிகழ்ந்ததாக பரப்பி, தமிழின அழிப்பு என்னும் மாபெரும் மனிதகுல அவலப் பிரச்சினையில் அதன் பரிமாணத்தைக்கூட கவனத்தில் கொள்ளாமல், மக்களை திசை திருப்பும் கபட நாடகங்களை அரங் கேற்றும்போதுதான் நாம் வேதனைப் படுகிறோம். இந்த உண்ணாவிரதம் யாரை எதிர்த்து நடத்தப்பட்டது என்பது முதல் கேள்வி!

போரை நடத்துவதே சோனியா தான். எனவே சோனியாவும், காங் கிரசும் நினைத்தால்தான் போரை நிறுத்த முடியும், என்பதே, ஈழத் தமிழர்களின் மீது உண்மையான கவலை கொண்ட அனைவரது கோரிக்கை.

கலைஞர் கருணாநிதியோ, காங் கிரசையும், சோனியாவையும் தலைமீது வைத்துக் கொண்டாடி வந்தார். சோனி யாவும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, தனக்கு கடிதம் எழுதிவிட்டார் என்றார். உண்மையில் சோனியா அப்படி ஒரு கடிதம் எழுத வேண்டியது ராஜபக் சேவுக்குத்தான்.

மற்றொரு நாட்டின் இறையாண்மை யில் ஒரு அளவுக்கு மேல் தலையிட முடியாது என்று 'முரசொலி'யில் எழுதினார். காங்கிரசின் அதிகாரபூர்வ பேச்சாளர் ஜெயந்தி நடராசன், கடந்த வாரம் டெல்லியில் செய்தியாளர் களிடம் பேசும் போது, "இந்தியா இலங்கையிடம் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது, அவர்கள் கேட்க மறுக்கிறார்கள்" என்றார். அப்போது ஒரு செய்தியாளர் கேட்டார், "அப்படியானால் இந்தியா வின் வெளியுறவுக் கொள்கை தோற்று விட்டது என்கிறீர்களா?" ஆத்திர மடைந்த ஜெயந்தி நடராசன், பேட்டியை பாதியில் முடித்து விட்டு எழுந்து சென்றார்.

இந்தியாவால் இதற்கு மேல் இலங்கையிடம் வலியுறுத்த முடியாது என்று பேசிய அதே கலைஞர் தான் -

இப்போது, தமது உண்ணாவிரதப் போராட்டத்தால் - இந்தியா, இலங்கையை வலியுறுத்தி போர் நிறுத்தத்தைக் கொண்டு வந்துவிட்டது என்கிறார். அப்படியானால், இப்படி ஒரு போராட்டத்தை, சில மாதங் களுக்கு முன்பே நடத்தியிருந்தால் எத்தனையோ ஆயிரம் தமிழர்களைக் காப்பாற்றி இருக்க முடியுமே என்ற கேள்வியும் எழத் தானே செய்யும்?

(4 ஆம் பக்கம்)

## கலைஞர் கருணாநிதியை அவமதித்த சோனியா

உண்ணாவிரதத்தைத் தொடங்குவதற்கு முன்பு மூன்று நாட்களாக சோனியாவிடம் தொடர்பு கொண்டு கலைஞர் கருணாநிதி பேச முயன்றிருக்கிறார் – ஆனால் பேச முடியவில்லை. (இதை முதலமைச்சருடன் நெருக்கமாக உள்ள கி.வீரமணி கலைஞரே தம்மிடம் கூறியதாக கூறியிருக்கிறார்)

உண்ணாவிரதத்தை தொடங்கிய பிறகாவது சோனியா தமிழகத்தின் மூத்த தலைவர் என்று மதித்து பேசினாரா? – இல்லை!

ஒரே வாரத்தில் இரண்டு முறை சோனியாவுக்கு கலைஞர் கருணாநிதி தந்தி கொடுத்ததாக ‘முரசொலி’ கூறுகிறது. இரண்டு முறை தந்தி கொடுத்த பிறகும், சோனியா இப்பிரச்சினையில் மனமிறங்கி, முதலமைச்சரிடம் பேச வந்தாரா? – இல்லை!

தமிழருக்கு எதிரான போரை நிறுத்துவதில் இரும்புச் சுவர்போல் வளையாது இருக்கும் சோனியா, தமிழகத்தின் முதல்வர் கலைஞர் கருணாநிதியையும் மதிக்கத் தயாராக இல்லை.

இத்தனைக்கும் தமிழ்நாட்டில் சோனியாவை எதிர்த்துப் பேசுவோரை காவல்துறை அடக்கியது. சோனியா கொடும்பாவியை எரித்து எதிர்ப்புக் காட்டியோரை – அடக்குமுறை சட்டங்களை ஏவி, தனது சோனியா பக்தியை வெளிப்படுத்தினார் கலைஞர் கருணாநிதி, நாட்டின் எந்த அரசுப் பதவியிலும் இல்லாத சோனியாவை, நாட்டின் அதிபராகவே கருதி செயல்பட்டார் கலைஞர் கருணாநிதி. சொக்கத் தங்கம் என்றார்; ஈழத் தமிழர் பிரச்சினையில் தமது கருத்தும், சோனியாவின் கருத்தும் ஒன்று தான். ஒரு சிறு வேறுபாடுகூட கிடையாது என்று கூறி பூரித்தார். இந்த உணர்வுகளை சோனியா மதித்தாரா?

தமிழ் நாட்டைச் சார்ந்த உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்தான், முதல்வரிடம் உறுதி தந்திருக்கிறார்; பிரதமர் மன்மோகன் சிங் கூட உறுதி கூறி, போராட்டத்தை முடிக்க, முன் வரவில்லை; சோனியாவோ பேசவும் முயற்சிக்கவில்லை.

சோனியாவின் துரோகங்களை திரையிட்டு மறைத்துக் கொண்டு – அவரைக் காப்பாற்ற முயன்று – தனக்கும் அவப்பெயரை தேடிக் கொண்டிருக்கும் கலைஞர் கருணாநிதிக்கு சோனியா தரும் மதிப்பு இது தானோ?

தி.மு.க.வின் உண்மைத் தொண்டர்களே!

இவ்வளவு அவமதிப்புகளையும் சுமந்து கொண்டு காங்கிரசுக்கு நீங்கள் வாக்களிக்கத்தான் போகிறீர்களா?

### பிறந்த நாள் நன்கொடை

சென்னை இராயப்பேட்டை கழக செயல்வீரர் க.மோகன் - ஜோபிதா இணையரின் மகள் நளினியின் 4வது (4.5.2009) பிறந்த நாளினை முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதி ரூ.1000/- வழங்கினர்.

(நன்றி: ஆசிரியர்)

# சோனியாவின் துரோகத்தை அம்பலப்படுத்திய பெண்களின் 13 நாள் பட்டினிப் போராட்டம்

ஈழத் தமிழர்களைக் காக்க - ‘சோனியாவே போரை நிறுத்துங்கள்’ என்ற ஒற்றை கோரிக்கையை முன் வைத்து ‘ஈழத் தமிழின அழிப்புக்கு எதிரான பெண்கள் அமைப்பை’ச் சார்ந்த 20 பெண்கள் சாகும் வரை பட்டினிப் போராட்டம் நடத்தி முடித்துள்ளனர். 13 நாட்கள் நீடித்தது. தமிழக வரலாற்றில், பெண்கள் இதுபோன்ற ஓர் உறுதியான போராட்டத்தை நடத்தியது, இதுவே முதல்முறையாகும். உண்ணாவிரதம் என்ற போராட்ட வடிவம் பெரியார் ஏற்காதது என்றாலும் போராட்ட வடிவங்களை காலமும் சூழ்நிலையுமே தீர்மானிக்கின்றன.

மிக மோசமான இனப் படுகொலை தமிழ் ஈழ மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் வேறு வழியின்றி தங்களையே அழித்து இனத்தைக் காக்கத் துடித்தார்கள் இந்தப் பெண்கள். 13வது நாளில் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றவரும், இடதுசாரி சிந்தனையாளருமான மீனா கிருஷ்ணசாமி (96 வயது) பழச்சாறு அளித்து போராட்டத்தை முடித்து வைத்தார். போராட்டத்தை நிறைவு செய்து பேராசிரியர் சரசுவதி விடுத்த அறிக்கை சோனியாவின் துரோகத்தை உறுதிப்படுத்துவதாக இருந்தது. அறிக்கை விவரம்:

“தமிழ் ஈழத்தில் அப்பாவி தமிழ்ப் பெண்கள், குழந்தைகள், பொது மக்கள் ஒவ்வொரு நாளும் சிங்கள ராணுவத்தால் நூற்றுக் கணக்கில் இனப் படுகொலைக்கு உள்ளாகி வரும் அவலச் சூழ்நிலையில் - பெண்கள் ஆகிய நாங்கள் எதை செய்தாவது இதைத் தடுக்க வேண்டும் என்ற உணர்வோடு உடனடியாக தொடங்கிய சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் இன்று 13 (ஏப்.25, 2009) ஆவது நாளை எட்டியுள்ளது. உடல் குலைந்தாலும் உறுதி குலையாமல் தொடர்ந்த இந்த போராட்டம் அரசின் - காவல்துறையின் வெவ்வேறு அடக்குமுறைகளையும் சந்தித்தது.

‘சோனியா அம்மையாரே போரை நிறுத்துங்கள்’ என்ற ஒற்றைக் கோரிக்கையை முன் வைத்து பெண்களாகிய நாங்கள் நடத்திய இந்த போராட்டத்தை சோனியா காந்தி தாயுள்ளத்தோடு செவி சாய்ப்பார் என்று நம்பினோம். ஆனால், அவரிடமிருந்து எந்த அசைவோ, சலனமோ இல்லை என்பது எங்களுக்கு பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது. தமிழக காங்கிரசின் சட்டப் பேரவை தலைவர் திரு.சுதர்சனம் அவர்கள் எங்கள் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி இன்னும் இரு நாள்களில் சோனியாவிடமிருந்து உரிய பதிலை பெற்றுத் தருவதாக கூறியதை ஏற்று ஐந்து நாட்கள் வரை காத்திருந்தும் பதில் ஏதும் வரவில்லை.

எனவே, தமிழ் இனத்தின் மீதான படுகொலையை தடுப்பதில் அவருக்கு எந்தக் கவலையும் இல்லை என்ற உறுதியான முடிவுக்கு வந்துவிட்டோம். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் தங்கள் கவனத்தைத் தேர்தலை நோக்கி முழுமையாக திருப்பிய நிலையில் நாங்கள் தொடங்கிய இந்த போராட்டம் தமிழகத்தின் கவனத்தை தமிழ் இன அழிப்புக்கு எதிராக திருப்பி இருப்பது எங்களுக்கு நிறைவைத் தருகிறது. மீண்டும் தமிழ் நாட்டில் பல்வேறு நிலைகளில் உருவான அழுத்தங்களால் முதல் முறையாக அகில இந்திய காங்கிரஸ் கட்சி போர் நிறுத்தம் வேண்டும் என்று பேசத் தொடங்கியிருக்கிறது. இது மக்களை ஏமாற்றும் வெற்றுச் சொல்லாகிவிடாமல், உண்மையான அர்த்தம் ஏற்பட வேண்டும் என்பதே எங்களின் விருப்பமும், வேண்டுகோளும் ஆகும். **தமிழகத்தின் மனசாட்சியாக நாங்கள் முன் எடுத்த போராட்டத்தை சோனியா காந்தி அலட்சியப்படுத்திவிட்டதாக கருதலாம். ஆனால், ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வுகளையே அவர் அலட்சியப்படுத்தி இருக்கிறார் என்பதைக் காலம் அவருக்கு உணர்த்தவே செய்யும்.**

தமிழினப் படுகொலை தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பது எங்களை துடிக்கச் செய்கிறது. தமிழகத்தின் வரலாற்றில் முதல் முறையாக எந்த அரசியல் கட்சியையும் சாராத பெண்களாகிய நாங்கள் 13 நாட்கள் பட்டினிப் போராட்டம் நடத்தி தமிழகத்தில் ஈழத் தமிழர்களின் பிரச்சினையை நோக்கிய கவனத்தைத் திருப்பி இருப்பதாகவே கருதுகிறோம். தேர்தல் அரசியல் பரபரப்புகளுக் கிடையே தமிழினப் படுகொலை மூழ்கிப் போய் விடாமல் மக்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதும் எங்களின் கவலையாக இருந்தது. கலை உலகமும், பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் இப்பிரச்சினையில் களம் இறங்கியுள்ள நிலையில் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி நாங்கள் எங்கள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறோம். ஈழத் தமிழின அழிப்புக்கு எதிரான அனைத்து இயக்கங்களோடு இணைந்து பல்வேறு போராட்ட வடிவங்களில் பெண்களின் போராட்டத்தைத் தமிழகம் இந்தியா - உலகு தழுவிய அளவில் கொண்டு செல்ல முடிவு செய்துள்ளோம்.

எங்களின் இந்த போராட்டத்திற்கு இடம் கிடைக்க விடாமல் காவல்துறையினர் கெடுபிடி செய்த நிலையில் முதல் மூன்று நாட்கள் வெவ்வேறு பகுதிகளில் நாங்கள் அலைக்கழிய வேண்டிய இருந்தது. அந்த நிலையில் மறுமலர்ச்சி தி.மு.க.வின் தாயகத்தில் தாமாகவே இடம் ஒதுக்கித் தர முன் வந்த திரு.வைகோ அவர்களை நன்றியோடு நினைவு கூறுகிறோம்.

ஒவ்வொரு நாளும் எங்களுக்குப் பேராதரவை நல்கிய பெண்கள் அமைப்புகள், அரசியல் - சமூக அமைப்புகள், கலை இலக்கிய அமைப்புகள், எங்கள் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பட்டினிப் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்திய அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். அவர்கள் தங்களின் சமுதாயக் கடமையை ஆற்றி இருக்கிறார்கள்.

ஒட்டு மொத்தத் தமிழினமும் களமிறங்கி தமிழினப் பேரழிவைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என்ற வேண்டுகோளோடு இந்தப் போராட்டத்தை நிறைவு செய்கிறோம்.

●

### பட்டினிப் போர் நடத்திய பெண்கள்

*பேராசிரியர் சரசுவதி, நீலவள்ளி, பாண்டிமாதேவி, ஷீலு, கவிதா, சசிகலா, பி. சசிகலா, உஷாராணி, காமேசுவரி, பழனியம்மாள், வித்துவின்மேரி, பிலுமினா, பொன்னுத்தாய், லாரன்ஸ் செல்வி, சாந்தி. இது தவிர ஜெயமணி, தங்கமணி, லோக நாயகி, சித்ராதேவி, சுமதி ஆகியோர் உடல் ஆபத்தான நிலையில் காவல் துறையால் கைது செய்யப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மருத்துவமனையிலும் அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். போராட்டம் முடிவுக்கு வந்த நாளில் தான் அவர்களும் போராட்டத்தை முடித்தனர்.*

## இயக்குனர் சீமானுக்கு கழக சார்பில் எழுச்சி வரவேற்பு

புதுவை சிறையிலிருந்து ஏப்.27 அன்று விடுதலையாகி வெளிவந்த இயக்குனர் சீமானுக்கு புதுவையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமையில் எழுச்சியான வரவேற்பு வழங்கப்பட்டது. சிறைச்சாலையிலிருந்து ஊர்திகள் பின் தொடர, அரியாங்குப்பம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். கிழக்குக் கடற்கரை சாலை வழியாக சென்னை புறப்பட்டு வந்த இயக்குனர் சீமானுக்கு, வி.ஜி.பி. தங்க கடற்கரையருகே இயக்குனர் பாரதிராஜா தலைமையில் கலையுலகப் பிரமுகர்கள் வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து நீலாங்கரையருகே பெரியார் திராவிடர் கழகம் சார்பில் எழுச்சியான வரவேற்பு தரப்பட்டது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன் சால்வை அணிவித்து வரவேற்றார். கழகத் தோழர்கள் பொதுமக்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோர் திரண்டு, உணர்ச்சி முழக்கமிட்டு வரவேற்றனர்.

## ஆளும் கட்சியின் காவல்துறை

ஈழத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி தேர்தல் பிரச்சாரம் செய்த பெரியார், திராவிடர் கழகத் தோழர்களை கைது செய்து, பிணையில் வரமுடியாத வழக்குகளைப் போட்டிருக்கிறது தி.மு.க.வின் காவல்துறை. என்ன வழக்கு தெரியுமா? இலங்கை அரசுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள நல்லுறவை குலைத்தார்கள் என்பது வழக்கு! (பிரிவு 137)

இப்போது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, இதே ஈழப் பிரச்சினையை முன் வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினாரே, அவருக்கும், பெரியார் தி.க.வினர் மீது போடப்பட்ட சட்டப் பிரிவு பொருந்தாதா?

திடீரென முன்னறிவிப்பு ஏதுமின்றி முதலமைச்சரும், அவர்களது கட்சி முன்னணியினரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அவர்களே இடங்களை தேர்வு செய்து கொண்டு போராட்டங்களைத் தொடங்கினார்களே; இதையே வேறு அமைப்புகள் இப்படி செய்திருந்தால் காவல்துறை அனுமதித்திருக்குமா? ஆளும் கட்சி எப்படி வேண்டுமானாலும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளலாமா?

## கழகத் தோழர்கள் வீடு; அலுவலகங்களில் சோதனை

# பிணையில் வெளிவர முடியாத வழக்குகளில் கைது

## கழகப் பிரச்சாரத்தால் பீதி; முடக்கிட தி.மு.க. ஆட்சி கடும் அடக்குமுறை

ஈழத் தமிழர்களை கொன்று குவிக்கும் இனப் படுகொலைக்கு துணை போகும் காங்கிரசின் துரோகத்தை அம்பலப்படுத்தி பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட குறுந்தகடு, காங்கிரஸ் தி.மு.க. வினருக்கு அச்சத்தை உருவாக்கியுள்ளது. இந்தக் குறுந்தகடு பல லட்சக்கணக்கில் பிரதிகள் எடுக்கப்பட்டு நாடு முழுதும் தமிழின உணர்வாளர்களால் பரப்பப்பட்டு வருவதை அறிந்து, அதைத் தடுக்கும் முயற்சிகளில் காவல்துறையை தி.மு.க. ஆட்சி இறக்கிவிட்டுள்ளது. கழக அலுவலகங்களிலும், கழகப் பொறுப்பாளர் வீடுகளிலும் காவல்துறை அத்து மீறி நுழைந்து சோதனைகளை நடத்தியுள்ளதோடு, கழகத் தோழர்களையும் பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளின் கீழ் கைது செய்துள்ளது. கடந்த 23 ஆம் தேதி ஈரோடு மாவட்ட கழக செயலாளர் இராம. இளங்கோவன் இல்லத்தில் நுழைந்தது காவல்துறை. இராம. இளங்கோவன் வீட்டில் இல்லை; அவரது துணைவியார் நாத்திகமணி வீட்டுக்குள் நுழைய கடும் எதிர்ப்பு தெரிவித்தார். சுமார் ஒரு மணி நேரம் கழித்து, இராம. இளங்கோவன் வந்தபோது, சோதனையிடுவதாக கூறி காவல்துறை அத்துமீறி நுழைந்தது. 300 குறுந்தகடுகளைக் கைப்பற்றியதாகக் கூறி, இராம. இளங்கோவன் மீது பிணையில் வர முடியாத பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர்ந்துள்ளது. இராம. இளங்கோவன், கோவை சிறையில் அடைக்கப்பட்டார். அதே நாள் இரவு கோவை கழகத்தலைமை நிலையத்துக்குள் காவல்துறை நுழைந்து, சோதனையிட்டது. தலைமைக்கழக பொறுப்பாளர் கதிரவனை கைது செய்து கோவை சிறையில் அடைத்துள்ளனர். மதுரையில் மாவட்டக் கழகத்தலைவர் மாயாண்டி இல்லத்திலும் காவல்துறையினர் சோதனையிட்டதோடு இழிவாகவும் பேசியுள்ளனர்.

சென்னையில் நள்ளிரவில் ஏப்.15 ஆம் தேதி மாவட்ட செயலாளர் உமாபதியின் இல்லத்துக்கு 50க்கும் மேற்பட்ட காவல்துறையினர் வந்து வீட்டின் கதவைத் திறந்து உள்ளே புகுந்து சோதனையிட வேண்டும் என்று வற்புறுத்தினர். உமாபதி கெடுபிடிகளுக்கு கண்டனம் தெரிவித்து, நள்ளிரவு சோதனைகளை அனுமதிக்க முடியாது என்று உறுதியோடு கூறினார். ஏராளமான கழகத் தோழர்கள் திரண்டு விட்டனர். பிறகு இராயப்பேட்டை கழக அலுவலகத்திலிருந்து குறுந்தகடு ஒன்றைக் கொண்டு வந்து கணினியில் போட்டு பார்த்த காவல்துறையினர் திரும்பி சென்று விட்டனர். அடுத்த நாள் இராயப்பேட்டை கழக அலுவலகம் வந்து சோதனையிட வேண்டும் என்று கெடுபிடி செய்தனர். கழகத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் சோதனையிடாமல் சென்றனர்.

இதற்கிடையே கடந்த ஏப்.25 ஆம் தேதி ஈழத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் மத்திய சென்னை தொகுதியில் வேன் மூலம் பிரச்சாரத்தைத் தொடங்கினர். காங்கிரசின் வஞ்சகத்தை விளக்கி, படங்களுடன் பெரியார் திராவிடர் கழகம் தயாரித்துள்ள துண்டறிக்கை, பொது மக்களிடம் பெரும் தாக்கத்தை உருவாக்கி வருகிறது. காலையில் இராயப்பேட்டையில் தொடங்கி, திருவல்லிக்கேணி பகுதி முழுதும் இந்தத் துண்டறிக்கைகளை மக்களிடம் வழங்கி, கழகத்தினர் செய்த பிரச்சாரத்துக்கு மக்கள் பேராதரவு தந்தனர். கழகத்தின் மூத்த வழக்கறிஞர் செ.துரைசாமி பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார். மதிய உணவுக்காக தோழர்கள் திரும்பியபோது காவல்துறையின் படை ஒன்று விரைந்து வந்து பிரச்சாரத்தைத் தொடரக் கூடாது என்று மிரட்டியது. துண்டறிக்கைகளையும் வழங்கக்கூடாது என்று கூறியது. சுமார் 4 மணி நேரம் கடும் வாக்கு வாதம் நிலவியது. இராவணன், தீபக் என்ற இரண்டு தோழர்களையும் காவல்துறை கைது செய்து கொடூரமான தேசத் துரோக வழக்குப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்து, சிறையிலடைத்துள்ளது. இதே பிரிவுகளின் கீழ் கழகத் தோழர்கள் உமாபதி, குமரன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளது. இவர்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம். கழகப் பிரச்சாரத்துக்கு பயன்படுத்திய 'வேன்' ஒன்றையும் காவல்துறை பறிமுதல் செய்துள்ளது. கழகத்தின் பிரசாரம், காங்கிரஸ் - தி.மு.க. வட்டாரங்களிடையே கடும் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதையே இந்த அடக்குமுறைகள் உணர்த்துகின்றன. இதற்கிடையே குறுந்தகடு வெளியீட்டுக்கு அனுமதி கோரி கழகச் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ●

# அண்ணா கண்ட தி.மு.க.வும் இன்றைய தி.மு.க.வும்

தேர்தல் பிரச்சினையில் தமிழ் ஈழப் பிரச்சினையைப் பேசக் கூடாது என்கிறது கலைஞர் கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி. போரை நடத்தும் இத்தாலி சோனியாவை தலைமீது தூக்கி வைத்து ஆடுகிறது. போரை நிறுத்து என்று ஒரு வார்த்தைகூட கூற முன்வராத சோனியா உண்ணாவிரதம் இருந்த கலைஞர் கருணாநிதியைக்கூட மதித்து ஒரு வார்த்தை பேசவில்லை. இதே போல் 1956 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் நடந்த வரலாற்றை நினைவு கூர்கிறோம். அன்று தி.மு.க. அண்ணாவின் தலைமையில் கொள்கை அடையாளத்துடன் செயல்பட்ட காலம்.

அப்போது அண்ணா 'திராவிட நாடு' இதழில் 'அந்தோ தமிழா' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை இது:

*"எலெக்ஷன்! எலக்ஷன்!! என்று அலையும் அமைச்சர்களின் பார்வையிலாவது படாதா எனும் ஆசையுடன், இலங்கை வாழ் தமிழர்களின் இன்னல் குறித்து, நாடெங்கும் ஒட்டினோம், இது போன்ற சுவரொட்டிகளை.*

*நம்பிக்கை வீண் போகவில்லையெனக் கண்டோம். நம்மையாளும் பாக்கியம் பெற்ற டி.டி.கிருஷ்ணமாசாரியார், குடியாத்தம் சென்று கோலோச்சும் பெருமை குறித்துப் பேசிய நாளில், இது பற்றியும் பேசினாரெனக் கேட்டபோது, குருதி கொட்டிடும் கோரத்தை விளக்கி, அமைச்சர்களின் கவனத்தை இழுத்து, அல்லலுறும் தமிழினத்துக்கு ஆதரவு கிடைக்கச் செய்வோம் என்று நாம் எடுத்துக் கொண்ட இம் முயற்சியினை எள்ளி நகையாடினார் கிருஷ்ணர்! 'என்னமோ, நாடக போஸ்டாராக்கும் என்று பார்த்தேன்' என்றார்!!"..................................*

*"இதோ, தகவல் தருகிறார், இலங்கையை ஆளும் பண்டார நாயகா! இந்தியப் பிரதமர் நேரு கூறிவிட்டாராம், "தமிழையும், இலங்கை அரசாங்க மொழியாக்க வேண்டும் என்கிற இயக்கத்துக்கு எமது ஆதரவு கிடையாது" என்று. இருபது பேருக்கு மேல் செத்தனர் தமிழர்கள்! ஏராளமான சொத்துக்களுக்குச் சேதம்! எரிமலை மேலிருப்பது போலிருக்கிறது இலங்கை வாழ் தமிழர்தம் நிலை! எனினும், நேரு பண்டிதர் இவ்வண்ணம் அறிவித்து விட்டார்.*

*அவர், பிறகென்ன செய்ய முடியும்? இது, இலங்கையின் உள்நாட்டு விஷயம். அதில் போய், நேரு தலையிட முடியுமோ! என்று கேட்கலாம். தோழர்கள். இப்படிக் கேட்போருக்கு மதுரைத் 'தமிழ்நாடு' (நாளேடு), ஒரு எதிர் வினா எழுப்புகிறது.*

*தென்னாப்பிரிக்காவில், ஐரோப்பியர்களுடைய நிற வேற்றுமைக் கொள்கையினால் பாதிக்கப்பட்டு வருந்தும் இந்தியர்களுடைய கோரிக்கைகளை இந்திய அரசாங்கம் ஆதரிக்கவில்லையா? அப்படியிருக்கும் போது, இலங்கையிலுள்ள தமிழர்களின் நேர்மையான உரிமைகளுக்கு ஏன் ஆதரவளிக்கக் கூடாது?*

*சிங்கப்பூரில் ஏராளமான தமிழர்கள் வாழ்கிறார்கள். மொழிக்கு அரசாங்கத்தில் மதிப்பு அளிக்க வேண்டுமெனக் கோரினார்கள். சிங்கை அரசு மறுக்கவில்லை. ஏற்றுக் கொண்டுவிட்டது. சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கென ஒரு தனி இடம் அமைத்து, பேராசிரியராகப் பணியாற்றும்படி இங்குள்ள தமிழறிஞர் அரசங்கண்ணனாரையும் அழைத்துள்ளது, சிங்கை சர்க்கார். அதனால், இப்படி தமிழுக்கு ஒரு இடம் வேண்டும் என்று அயல்நாடு சென்று வாழும் தமிழர்கள் கேட்பது அநீதியல்ல! அதனை மறுக்க வேண்டும் என்பதும் அவசியமல்ல! ஆயினும், இலங்கை சர்க்கார், ஏதோ ஒரு துவேஷம் கொண்டு இப்படியெல்லாம் செய்கிறது.*

*அதனை, ஏன் நேரு பண்டிதர், எடுத்துணர்த்தலாகாது? இஸ்ரேல் எப்படி அரபு நாடுகளுடன் இணைந்து வாழ வேண்டும் என்று போதிக்கிறார். இந்தியர்களுக்குப் பாகிஸ்தானில் உரிமைகள் மறுக்கப்படக் கூடாது என்று கர்ச்சிக்கிறார், கடல் கடந்தும் இந்தி மொழி பரவ வேண்டுமென்பதில் ஆசை காட்டுகிறார். தகராறுள்ள இடங்களுக்குப் பறந்து சென்று 'பாலம்' போட கிருஷ்ணமேனன் (அன்றைய மத்திய அமைச்சர்) வேறு உள்ளார்! இவ்வளவு சக்தியைப் பெற்றுள்ள பண்டித நேருவுக்குப் பண்டார நாயகாவிடம் சம்மதம் பெற்றுத் தருவதா, கடினம்? ஒரு போதும் இல்லை!*

*இலங்கை மொழிப் பிரச்சினையில் மட்டுமல்ல, பர்மாவிலிருந்து பல தமிழர்கள் தமது சொத்து சுகத்தை இழக்க வேண்டிய நிலைக்கு ஆளாகித் தத்தளிக்கிறார்களே, ஏதாவது கவனம் சென்றதுண்டோ? அப்படிப்பட்ட பர்மாவுக்குத்தான் கடன் கடனாக தருகிறார்! கடன்களை அடக்கத் துப்பாக்கியும், குண்டுகளும் அனுப்புகிறார்!*

*நேருவுக்கு அலட்சியம் இருக்கிறது.*

*அப்படி அலட்சியம் ஏற்படுவதும் விந்தையல்ல.*

*ஏனெனில் அவர் நம்மவரல்ல!" – 'திராவிட நாடு' 12.8.1956*

அன்று அண்ணா எழுதியது - இன்று அப்படியே பொருந்தி வருகிறது.

வடநாட்டுக்காரர்கள் நம்மவரல்ல என்று - அன்று அண்ணா சொன்னார். இன்று கலைஞர் வடநாட்டுக்காரர்களை, இத்தாலிக்காரர்களை திருப்திப்படுத்த - அவர்களின் துரோகங்களுக்கு நடை பாவாடை விரித்து மரியாதை தருகிறார்.

**சொக்கத் தங்கம் சோனியா என்று வர்ணிக்கிறார்.**

**சோனியாவை விமர்சித்தால் ஆள் தூக்கி சட்டத்தை ஏவுகிறார்.**

**இதுதான் அண்ணா கண்ட தி.மு.க.வா?**

**கொள்கை உணர்வுள்ள தி.மு.க. தோழர்களே சிந்தியுங்கள்!**

# கதறுகிறோம்; இவர்கள் காதில் விழவில்லையே!

"காங்கிரசே; ஈழத்தில் எமது தொப்புள் கொடி உறவுகள் - ஒவ்வொரு நாளும் பிணங்களாக கொத்து கொத்தாக கொல்லப்படுகிறார்களே! இதைத் தடுக்கக் கூடாதா? போரை நிறுத்தச் சொல்லக் கூடாதா?"

- என்று கதறினோமே!

- கட்சிகளை மறந்து, தமிழராய் குரல் எழுப்பினோமே!

- மனித சங்கிலிகள் நடத்தினோமே!

- தீர்மானங்கள் போட்டோமே!

- எல்லாவற்றுக்கும் மேலாக - எம் தமிழினத்தின் பிள்ளைகள் 17 பேர் தங்கள் உடலுக்கு தீ வைத்துக் கொண்டு, தங்கள் மரணத்தையே பணயம் வைத்து போர் நிறுத்தம் கோரினார்களே!

- இந்திய ஆட்சியே! காங்கிரஸ் ஆட்சியே! ஒரு வார்த்தை.... ஒரே ஒரு வார்த்தை...'போரை நிறுத்து' என்று இலங்கையை எச்சரித்தீர்களா?

ஆயுதங்களையும் - போர் பயிற்சியும், ஆயுதம் வாங்க நிதியையும் வாரி வழங்கிவிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து அனுப்புகிறோம் என்றீர்களே? இது என்ன நாடகம்? எங்களை ஏமாளிகளாக்குகிறீர்களா?

**உலகமே கண்டித்தாலும்....**

போரை நிறுத்து என்கிறது, அய்.நா.

போரை நிறுத்து என்கிறது பிரிட்டன்.

போரை நிறுத்து என்கிறது, அமெரிக்கா.

போரை நிறுத்து என்கிறது, சர்வதேச மனித உரிமை அமைப்புகள்.

இந்திய தேசமே! எமது வாக்குகளை வாரிச் சென்ற காங்கிரசே; போரை நிறுத்து என்று உனது குரல், ஒலிக்காதது ஏன்? ஏன்? ஏன் இந்த வஞ்சகம்?

போனாரா? வெளிநாட்டுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, போரை நிறுத்த போக வேண்டும் என்று தமிழகத்தின் ஒரு மித்த குரலை மதித்து கொழும்பு போனாரா? இல்லையே!

கிளிநொச்சி வீழ்ந்தால் போவேன் என்றார் பிரணாப் முகர்ஜி; ஆம்; வீழ்ந்த பிறகு தான் போனார்; போனவர் சொன்னார் என்ன சொன்னார்? போரை நிறுத்தச் சொன்னாரா? இல்லையே! சிங்கள ராணுவத்தின் வெற்றியைப் பாராட்டினார். 25 ஆண்டுகால இராணுவ நடவடிக்கைகள் வெற்றி பெறத் தொடங்கிவிட்டன என்றார். அய்யகோ; இது என்ன கொடுமை? எமது தமிழினத்தை கொன்று குவிக்கும் ராணுவத்தை இவர்களால் எப்படி புகழ முடிகிறது?

போரை நிறுத்தச் சொல்லி, இந்தியா எங்களிடம் கோரிக்கை வைக்கவில்லை - என்கிறார், இலங்கை அதிபர் இனப்படுகொலையை நடத்தும் இராஜபக்சே.

"இந்தியா உதவி செய்வதால் தான் விடுதலைப் புலிகளை நம்மால் வீழ்த்த முடிந்தது. எனவே, இந்தியாவைப் பற்றி தவறாகப் பேசாதீர்கள்" - என்று இந்தியாவுக்கு இலங்கை நாடாளுமன்றத்தில் நற்சான்றிதழ் வழங்கியுள்ளார், அந்நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா.

இலங்கையின் இறையாண்மையை காப்பாற்ற, நாம் ராணுவ உதவி செய்வது உண்மைதான் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.வுக்கு எழுதிய கடிதத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார், பிரதமர் மன்மோகன் சிங்.

இலங்கைக்கு அதன் தேசப் பகுதிக்குள் எந்த இடத்திலும் குண்டு போட உரிமை இருக்கிறது; அதை நாம் தடுக்க முடியாது என்று இந்திய ராணுவ தளபதிகள் மாநாட்டில் பேசினார், பிரதமர் மன்மோகன்சிங்.

"ஈழத் தமிழர்கள் மீது போரை முற்றாகவும், நேரடியாகவும் நடத்துவதே இந்திய அரசு தான்" - என்று சிங்கள இடதுசாரி முன்னணி தலைவர் கலாநிதி விக்கிரம பாகு கருணாரத்ன.

இந்திய அரசே; காங்கிரஸ் ஆட்சியே! சோனியாகாந்தியே! மன்மோகன் சிங்கே!

எமது தமிழினத்தைப் படுகொலை செய்யும் இனப்படுகொலைக்கு துணைப் போகும் காங்கிரசுக்கு நாங்கள் வாக்களிக்க வேண்டுமா?

எமது இனத்தின் படுகொலைக்கு - நாங்களே ஒப்புதல் வழங்க வேண்டுமா?

நாங்கள் உணர்ச்சியுள்ள தமிழர்கள்; எமது தொப்புள் கொடி உறவுகளின் மரண ஓலங்களை - நாங்கள் இனியும் கேட்கத் தயாராக இல்லை.

காங்கிரசை தோற்கடிக்க தயாராவோம்;

காங்கிரசை - எதிர்த்து சம போட்டியில் களத்தில் நிற்கும் வேட்பாளருக்கு வாக்களித்தால்தான் காங்கிரசு வேட்பாளரை தோற்கடிக்க முடியும் என்பதை நெஞ்சில் நிறுத்துவோம்!

விரட்டுவோம் இனப்பகையை! வீழ்த்துவோம், காங்கிரசை!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கலைஞர் கருணாநிதி போராடாதது மட்டுமல்ல; போராடியவர்களையும் தி.மு.க. ஆட்சியின் காவல்துறையைக் கொண்டு ஒடுக்கியது. இனப்படு கொலைக்கு எதிரான பெண்கள் அமைப்பைச் சார்ந்த 20 பெண்கள் 14 நாட்கள் சாகும் வரை பட்டினி போராட்டம் நடத்தினர். மாவீரன் முத்துக்குமார் உடல் வைக்கப்பட்ட இடத்தில் போராட்டத்தைத் தொடங்கிய பெண்களை காவல்துறை மிரட்டி, விரட்டியது. தனியார் இடங்கள் ஏதும் அவர்களுக்கு கிடைக்க விடாதபடி காவல்துறை மிரட்டியது. இறுதியாக மூன்றாவது நாள் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தங்களது கழகத்தின் தலைமையகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தாமாக முன்வந்து, உதவினார். 12 ஆம் நாள் போராட்டத்தில் பெண்கள் பலர் உயிருடன் போராடிய நிலையில் அவ்வழியே தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறனை வாக்கு கேட்க காவல்துறை அனுமதித்தது. அவர் பின்னால் வந்தவர்கள் பெண்கள் உண்ணாவிரதம் இருந்த ம.தி.மு.க. அலுவலகத்தின் வாயிலில் வெடிகளை வெடித்து மகிழ்ச்சிக் கூத்தாடினர். அங்கே திரண்டிருந்த இன உணர்வாளர்கள் மீது கற்களை வீசியதில் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவிக்க வந்த ஒரு பெண் பலத்த காயமடைந்தார். அவரது முகத்தில் ஏழு தையல் போடப்பட்டது.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக போராடிய அமைப்புகளை எல்லாம் தி.மு.க. அரசின் காவல்துறை ஒடுக்கியது. ஈழத் தமிழர் பற்றிய பரப்புரைகளே நிகழ்ந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர்.

இந்தத் தேர்தலில், ஈழத் தமிழர் பிரச்சினையை மக்கள் பிரச்சினையாகவே கருதவில்லை என்று கலைஞர் கருணாநிதி கூறினார். தங்களின் சாதனைகளையே முன்னிறுத்துவோம் என்றார். உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலினும், இதே கருத்தை செய்தியாளர்களிடம் வலியுறுத்தினார்.

எதைச் செய்தாவது ஈழத் தமிழர் பிரச்சினை தேர்தல் களத்துக்கு வந்து விடக் கூடாது என்பதில் தி.மு.க. தீவிரமாக கவனம் செலுத்தியது. 'சங்கமம்' இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற 300க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் குழுவை மக்களை மகிழ்விக்க, கனிமொழி தேர்தல் பிரச்சாரக் களத்தில் இறக்கி விட்டார்.

ஒவ்வொரு நாளும் தொப்புள் கொடி உறவான தமிழர்கள் பிணங்களாக வீழ்கிறார்களே என்ற அடக்க முடியாத துயரங்கள் சூழ்ந்து நிற்கும் இந்த தேர்தல் களத்தை கேளிக்கைக் கொண்டாட்டமாக்கி மகிழ்ந்திடும் பிரச்சாரத் திட்டங்களை உருவாக்கி, வெந்த புண்ணில் வேலை சொருகியது தி.மு.க.

அனைத்து முயற்சிகளும் மக்கள் மன்றத்தில் தோல்வியைத் தழுவி, சென்ற விடமெல்லாம் ஈழத் தமிழர் பிரச்சினை, காங்கிரசின் துரோகத்துக்கு எதிராக வீறு கொண்டது. கடும் நெருக்கடிக்குள்ளான தி.மு.க. தலைமை தேர்தல் வெற்றிக்காக இந்த உண்ணாவிரத நாடகத்தை அரங்கேற்றி, அதிலும் மிக மோசமான தோல்வியையே சந்தித்திருக்கிறது.

கலைஞர் கருணாநிதியின் இந்த உண்ணாவிரதம் இரண்டு கேள்விகளை எழுப்பியிருக்கிறது. ஒன்று - தி.மு.க., மத்திய அரசுக்கு வலிமையான அழுத்தம் தந்தால், போரை நிறுத்தியிருக்க முடியும் என்பதை இப்போது கலைஞர் கருணாநிதியே, இந்தப் போராட்டத்தின் வழியாக, தமிழ்நாட்டுக்கு சொல்லியிருக்கிறார். அப்படியானால், 'முடிந்ததை எல்லாம் செய்து விட்டோம்' என்று ஏற்கனவே கூறி வந்தது பொய்யா? அல்லது எங்கள் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது என்று இப்போது கூறுவது பொய்யா?

இரண்டாவதாக போரை நிறுத்துவது - இந்தியாவிடம் இல்லை என்று கூறி, இது வரை காங்கிரசைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார் கலைஞர் கருணாநிதி. இப்போது உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் போரை நிறுத்த ஏற்பாடு செய்துவிட்டதாக தம்மிடம் உறுதி கூறியதால், உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டிருக்கிறார். அப்படியானால் போரை இந்தியாவால் நிறுத்தியிருக்க முடியும் என்பதை, இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார். அப்படியால் ஏற்கனவே காங்கிரசைக் காப்பாற்ற இவர் எடுத்து வைத்த வாதமெல்லாம் உண்மையானவை அல்ல என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது. ஆக 'போர் நிறுத்தம்' ஏற்பட்டுவிட்டது என்ற பொய்மையுடன் முடிவடைந்த இந்த 'உண்ணாவிரதம்', குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்ட கதையாகி விட்டது! ●

## அம்பேத்கர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்

14.4.2009 அன்று மாலை 6 மணியளவில் அம்பேத்கர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் கழகம் சார்பில் சென்னை மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டம் பகுதியில் சித்திரை சேனன் இன எழுச்சி பாடலோடு கூட்டம் துவங்கியது. த. இராவணன் தலைமையில் கழக மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு சிறப்புரையாற்றினார். வழக்கறிஞர் சு.குமாரதேவன், அன்பு தனசேகர், ச. குமரன், இரா. உமாபதி, குசேலன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றினர். பொற்செல்வன் வரவேற்க, பா.ஜான், சுகுமாறன் முன்னிலை வகித்தனர். ந. தமிழரசன் நன்றி கூறினார். எ.கேசவன், தபசி குமரன், சீ. மணிவண்ணன் மற்றும் கழகத்தோழர்களும் பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 30th April 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.